# தீபம்

www.deepam.lk

வார இதழ் • தீபம் 9 • 20.09.2015

விலை
20 ரூபா




# சிறைகளில் சீரழிக்கப்பட்ட பெண்கள்

அதிர்ச்சி ரிப்போர்ட்

'கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த பெண்கள் சிறைச்சாலைகளிற்குள் வைத்து மோசமாக பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இப்படி சீரழிக்கப்பட்ட 30 பேரின் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளோம். பாலியல் வன்முறை தனிப்பட்ட ரீதியில் நடத்தப்படவில்லை. திட்டமிட்டரீதியில் சித்திரவதையை நோக்கமாக கொண்டு செய்யப்பட்டதென்பதற்கான ஆதாரங்கள் உள்ளன' இப்படியொரு அதிர்ச்சி தகவலை அம்பலப்படுத்தியுள்ளது ஐ.நா மனிதஉரிமைகள்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# டக்ளஸிற்கு 'டாட்டா'!


சிறிதர் தியேட்டர் பரபரத்துப் போய் கிடக்கிறது. புயல் புகுந்த வீடு என்பார்களேஞ் அப்படி. தேர்தல் தோல்விகளினால் அண்மைக்காலத்தில் மிக சலிப்புடன் இயங்கிக் கொண்டிருந்த அலுவலகத்திற்குள் திடீர் பூகம்பம். இதனால் ஈ.பி.டி.பி கட்சிக்காரர்கள் எல்லோருமே பரபரத்துக் கொண்டு திரிகிறார்கள். கட்சிக்குள் கிளம்பிய பூகம்பம் அவர்கள் முகங்களில் எதிரொலிக்கிறது.

ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அடுத்த நிலையில் இருந்தவர் என கருதப்பட்ட முருகேசு சந்திரகுமார் கட்சியை விட்டு செல்கிறார் என்பதே எல்லோரது பரபரப்பிற்கும் காரணம். கட்சியை

தொடர்ச்சி 3-ம் பக்கம்




உள்ளே...



ஒரு உண்மை தெரிஞ்சாகணும்! 5



அப்பாவி பெற்றோருக்கு அவசிய கையேடு 14



சேலைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம் 17

# கத்தியில் நடக்கும் பரீட்சை

ஜெனீவாவில் நடக்கும் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் அமர்வில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆற்றிய உரை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. யுத்தத்தின் பின்னராக முதன்முறையாக சர்வதேசம் மகிழ்ச்சியுடன் காதுகொடுத்து கேட்கத்தக்க உரையாக மங்களவின் உரை அமைந்திருக்கிறது.

யுத்தத்தின் பின்னரான காலங்களில் இலங்கை சார்பில் ஐ.நாவிற்கு சென்றவர்கள் உலக வல்லாதிக்கப் போட்டியின் ஒரு தரப்பின் பிரதி நிதியைப் போலத்தான் செயற்பட்டனர். அதை வெளிப்படையாக சொன்னால், சீனாவை மையமாக கொண்ட அணியின் பிரதிநிதிகளை போல, அமெரிக்காவை மையமாக கொண்ட உலகப்பொதுப்போக்கை சவாலிற்குட்படுத்துபவர்களாக நடந்து கொண்டனர்.

இதனால் ஒவ்வொரு அமர்வுகளின்போதும், பொறுப்புக்கூறலிற்கு பதிலாக சவடால்களையே அவர்கள் விட்டனர். உலகப் பொதுப்போக்கை கேள்விக்குட்படுத்தும் சீன நகர்வுகளின் துலக்கமான பாத்திரமாக இலங்கையர்கள் நடந்து கொண்டனர். இதன் விளைவு, இதனை முன்னெடுத்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணி, அரியணையை இழந்து வீடு செல்ல வேண்டியதாகிவிட்டது.

சீனாவை மையமாக வைத்த அணியில் கலந்ததுடன், வெளிப் படையாக மேற்குலகத்துடன் மோதிய விசப்பரீட்சையின் விளைவிது.

யுத்தத்தின் பின்னர் தமிழர் பிரச்சனை தொடர்பில் உலகத்திற்கும், ஐ.நாவிற்கும் சில வாக்குறுதிகளை இலங்கை வழங்கியிருந்தது. எனினும், அதனை நெருங்கிச் செல்லவே முடியாத ஒரு நிலை முன்னைய ஆட்சியாளர்களிற்கு ஏற்பட்டது. யுத்தவெற்றிகளை அடைந்த அதே தரப்பினால் இனங்களிற்கிடையிலான சமரசத்தை ஏற்படுத்த முடியாது, அதற்கான மனப்பக்குவத்தை அவர்கள் இழந்துவிடுவார்கள் என்பதுதான் வரலாறு முழுவதுமுள்ள கதை. இலங்கையிலும் அதுதான் நடந்தது. தோற்கடிக்கப்பட்ட தரப்புடன் சமதையாக உட்கார்ந்து பேசுவதையே அவர்களால் கற்பனையும் செய்து பார்க்க முடியாமல் போனது. இதற்குள் உலகவல்லரசுப் போட்டிக்குள் வேறு சிக்கிக் கொண்டார்கள்.

இதன் விளைவுகள் கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக ஜெனீவா வில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இப்படியான நிலைமையில் ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஜெனீவா சென்ற மங்களவின் குரல் முற்றிலும் மாறுபட்டதாக உலகத்தின் காதுகளிற்கு சென்றடையும். கவர்ச்சிமிக்கதாக இருக்கும். இந்தஉரை அமெரிக்கா உள்ளிட்ட தரப்புக்களின் பின்னணியில் உருவானதென்ற கருத்துக்கள் இருந்தா லும், இதுவரையான ஜெனீவா அமர்வுகளில் இல்லாத குரல்.

யுத்தக்குற்றங்கள், மனிதஉரிமைமீறல்கள் தொடர்பில் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடனான உள்ளக விசாரணையொன்றை நடத்துவதாகவும், பாதிக்கப்பட்டவர்களிற்கு நட்டஈடு வழங்குவதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான பணியகம் ஆரம்பிக்கப் படவுள்ளதாகவும், புதிய அரசியல்சாசனத்தின் மூலம் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுமென்றும் வாக்களித்துள்ளது.

யுத்தம் முடிந்த சமயத்தில் மகிந்த ராஜபக்ச வழங்கிய வாக்குறுதிகளிற்கு சற்று மேம்பட்டதாகவும், உண்மைக்கு ஓரளவு நெருக்கமானதாகவும் இதனை உணர முடிகிறது. இது தொடர்பான வாக்குறுதிகள் சிலவற்றை ஆட்சிபீடமேறிய கையுடன் ஆட்சியாளர்கள் தமிழ்தேசிய கூட்டமைப்பிடம் வழங்கியதாக செய்திகள் வந்திருந்தன. அதனை தீபமும் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தது.

இப்பொழுது இதிலுள்ள சிக்கல் என்னவெனில், வடக்கு கிழக்கு முழுவதும் மக்கள் சர்வதேச விசாரணையென்ற ஒன்றையே கோருகிறார்கள். மக்களின் கோரிக்கைக்கு புறம்பான ஒன்றை தமிழ்தேசிய கூட்டமைப்பினால் ஏற்கவோ, ஆதரிக்கவோ முடியாது. தென்னிலங்கை தரப்புடன் இணக்கமாக முன்னகர்வதெனில் முரண்டு பிடிக்காமல் வினைத்திறனுள்ள உள்ளக பொறிமுறையொன்றை கண்டடைந்து, செயற்படுத்த முனைவதே யதார்த்தமாக இருக்கும். தீர்வு விவகாரத்தில் அதுதான் அவர்களிற்கு சாதகத்தை ஏற்படுத்தும். இதனால், சர்வதேச நிறுவனங்களின் கண்காணிப்புடனான உள்ளக விசாரணைக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பினர் சாதகமான சமிக்ஞை காட்டுவதாக கூறப்படுவதும் ஒருவித யதார்த்த அரசியல்தான்.

ஆனால் வடக்கு,கிழக்கில் இதற்கு மாறான கோரிக்கைகள் வலுவடைந்து கொண்டிருக்கிறது. கையெழுத்து போராட்டங்கள், நடைபவனியென மக்கள் பங்கேற்புடனான வெகுஜன போராட்டங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எதிர்பார்த்ததைவிட அதிக வெகுஜனமயப்பட்டதாக கையெழுத்துப் போராட்டம் நடந்து வருகிறது.

இந்த இக்கட்டான சூழலை சாமர்த்தியமாக கையாளவேண்டிய பெரிய பொறுப்பு தமிழ்தேசிய கூட்டமைப்பிடம் உள்ளது. ஆட்சியாளர்களும், அதிகாரமையங்களும் திருப்திகொள்ளும் விதமான தீர்வுகளும், பொறிமுறைகளும் பிரச்சனைகளிற்கு தீர்வாகாது என்பதற்கு ஈழத்தமிழர் வரலாற்றிலேயே நிறைய உதாரணங்கள் உள்ளன. இந்திய இலங்கை உடன்படிக்கையும் நல்ல உதாரணம்.

இந்த சிக்கலான நிலைமையை கடக்க, தீர்வு முயற்சிகள், பேச்சுவார்த்தைகளில் மக்களையும் ஒருபங்காளியாக்குவதே சிறந்த நடவடிக்கையாக அமையும்.

அலுவலகம்
தீபம்
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி
யாழ்ப்பாணம்: 0212216633 ஐக்கிய ராச்சியம் 00442034687086
மின்னஞ்சல்: info@deepamtv.tv

# சொன்னார்கள்



**நரேந்திர மோடி - இந்தியப்பிரதமர்**

இலங்கையில் அண்மையில் நடந்த இரண்டு தேர்தல்களிலும் அமைதி, வளர்ச்சி ஆகிய கொள்கைகளுடன் வளமான எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து வருகிறது. இலங்கை அனைத்து முயற்சிகளிலும் வெற்றிபெற வாழ்த்துவதுடன், இந்தியாவின் ஆதரவு எப்பொழுதும் இருக்குமென்பதையும் கூறுகிறேன்.



**சி.வி.விக்னேஸ்வரன் - வடக்கு முதல்வர்**

அரசியல்கைதிகளை தற்போதைய அரசாங்கம் விடுவித்திருக்க முடியும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் இந்த அரசாங்கத்திற்கு பெரியளவிலான வெற்றியை கொடுத்தோம் என்ற அடிப்படையில் விடுவித்திருக்கலாம். சர்வதேச விசாரணை, போராட்டங்கள் வரும்போது, அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என மழுப்பவே இதனை இழுத்தடிக்கிறார்கள்.




**செயித் ராட் அல் ஹீசைன் - ஐநா மனிதஉரிமைகள் ஆணையாளர்**

கண்மூடித்தனமான எறிகணைவீச்சு, சட்டவிரோத படுகொலை, பலவந்தமாக காணாமல் போகச் செய்தல், சித்திரவதை, பாலியல் வன்முறை என்பன இலங்கையில் நடந்துள்ளன. என்றாலும், இலங்கையில் இனப்படுகொலை நடந்ததாக தற்போதைக்கு நாங்கள் கருதவில்லை.



**சுமந்திரன் - தமிழ்தேசிய கூட்டமைப்பு**

ஐநா மனிதஉரிமைகள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிக்கையை நாம் முழுமையாக ஆதரிக்கிறோம். இறுதிப்போரில் இராணுவம் தமிழர்கள் மீது நடத்திய கொடூரங்களிற்கு இந்த அறிக்கையில் தீர்வு கிடைத்துள்ளது. சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதியை இலங்கை நிறைவேற்ற வேண்டும்.



**வாசுதேவ நாணயக்கார - ஜனநாயக இடதுசாரி முன்னணி**


56 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கொடுத்தும் எதிர்க்கட்சி தலைவர் பதவி எமக்கு வழங்கப்படவில்லை. இதனை எதிர்த்து பாராளுமன்றத்திற்குள் குரல் கொடுப்போம். வெளியிலும் குரலெழுப்புவோம். நீதிமன்றம் சென்றும் நியாயம் கேட்போம். எப்படியாவது எதிர்க்கட்சி தலைவர் பதவியை கைப்பற்றுவோம்.




**ரஞ்சன் ராமநாயக்க - சமூகசேவைகள் சமூக நலன்புரி அமைச்சர்**

கொட்டதெனியாவ சிறுமி பாலியல் வன்முறையின் பின்னர் கொல்லப்பட்டது நாட்டிற்கே ஏற்பட்ட கறை. இப்படியான சம்பவங்கள் இனியும் ஏற்படாத வண்ணம் செயற்பட வேண்டும். சிறுவர்களிற்கு எதிரான குற்றங்களை புரிபவர்களிற்கு மரணதண்டனை நிறைவேற்றும் விதத்திலான சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

# க்ளிக் பக்கம்





**படப்பிடிப்பாளர்:**
**சொர்ணகுமார் சொரூபன்**

**இடம்:**
**நல்லூர் கந்தசுவாமி ஆலயம்**

இந்து ஆலயங்களில் இடம்பெறும் தேர்த்திருவிழாவின் போது அடியார்கள் தமது பாவங்கள் கழிவதற்கு தேங்காய் உடைப்பது வழமை. இவ்வாறு எடுத்து வரப்படும் தேங்காயினை சில இளைஞர்கள் தமது சிரசின் மேல் உடைத்து அதன் நீரில் நீராடுவதென்பது பிறரின் பாவத்தை தமது தலையில் வாங்கிக்கொள்வதாக அமையும் என்பது முதியவர்களின் கருத்து. அப்படியொரு காட்சியை நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் படம் பிடித்தேன்.

**என்னைப்பற்றி:**
நான் சொர்ணகுமார் சொரூபன். யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஊடகவியலாளன். புகைப்படக்கலையில் நிறைய ஆர்வம் உள்ளது.

## 1-ம் பக்க தொடர்ச்சி

விட்டு வெளியில் செல்வதாக சந்திரகுமார் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. சந்திரகுமாரை கட்சியை விட்டு நீக்குகிறோம் என ஈ.பி.டி.பியும் அறிவிக்கவில்லை. என்றாலும் உள்ளுக்கும் எரிமலை தகித்துக்கொண்டிருக்கிறது. இரண்டு தரப்பமே மறுதரப்பின் அறிவித்தலிற்கு காத்திருக்கிறது போல்த்தான் தெரிகிறது.

### நடந்தது என்ன?

இதுதான் பெரிய மர்மமாக உள்ளது. இரண்டு தரப்புமே இதுபற்றி அவ்வளவாக வெளியில் கதைத்துக் கொள்ள விருப்பம் காட்டுவதாக தெரியவில்லை. ஆனாலும் இரண்டு தரப்பிற்குமிடையில் நீண்டகாலமாக இருந்த முறுகலொன்றுதான் இவ்வளவு பாரதூரமான



பிரச்சனையாகியுள்ளதென்பது தெரிகிறது.

ஈ.பி.டி.பி அமைப்பிற்குள் சற்று வித்தியாசமானவராக சந்திரகுமார் தெரிந்தார். அந்த கட்சிக்காரர்கள் தொடர்பாக மக்கள் கொண்டுள்ள பிம்பத்திற்கு நிறைய வேறுபாடான தோற்றம் கொண்டிருந்தார். அதனால் அந்த அணிக்குள் தனித்துவமானவராக, துலக்கமானவராக அவர் அடையாளம் தெரிந்தார்.

இதுதான் பிரச்சனைக்கு காரணமாக அமைந்திருக்கலாமென கருதப்படுகிறது. கிளிநொச்சி நகரை கட்டியெழுப்பியதில் அவருக்கும் கணிசமான பங்கிருந்தது. அவர் எம்.பியாக இருந்த காலப்பகுதியில் அவரின் செயற்றிறன் பலராலும் பேசப்பட்டிருந்தது.

இதனால், அவர் தனியாக பயணிக்கிறார் என கட்சித்தலைவரிடம் பலகாலமாகவே மற்றவர்கள் புகார் சொல்லிக் கொண்டிருந்ததாகவும், இந்த தேர்தலில் நடந்த சம்பவங்கள் அதற்கு எண்ணெய் ஊற்ற, இரண்டு தரப்பிற்குமிடையில் பிரிவு ஆரம்பித்தது என்கிறார்கள் விடயமறிந்தவர்கள்.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில், டக்ளஸ் தேவானந்தாவின் படங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகளை கிளிநொச்சிக்கு அனுப்பியபோதும், அவர் அவற்றை ஒட்டவில்லை. ஒவ்வொருவரிற்கும் ஒவ்வொரு தொகுதி ஒதுக்கியதுடன், குறிக்கப்பட்ட பகுதிகளை விட்டு வெளியில் செல்லக்கூடாதென கட்சி கூறியபோதும், சந்திரகுமார் யாழ்ப்பாணத்திற்குள் வந்தார், கட்சிக்கட்டுப்பாடுகளை ஒருபோதும் மதித்ததில்லை, யுத்தகாலத்தில் தலைவருடன் தோளுடன் தோள் நின்ற தளபதிகள் பலரிற்க, இலண்டனிலிருந்து வந்தவரை எம்.பியாக்கி அழகு பார்த்த தலைவரிற்கு செய்யும் நன்றிக்கடன் இதுவா என கொதிக்கிறார்கள் ஈ.பி.டி.பி தரப்பினர்.

### 'காய் வெட்டிய' கட்சி

இந்த மோதல்களின் தொடர்ச்சியாக சந்திரகுமார் கட்சித் தொடர்புகளை விட்டு வெளியில் சென்றுவிட்டார். தேர்தல் தோல்வியின் பின்னர் சற்று ஓய்வெடுக்கிறார் என்றுதான் ஆரம்பத்தில் கட்சி நினைத்தது. பின்னர்தான் விடயத்தை புரிந்து கொண்டது.

இதனையடுத்து கட்சியை மீளக்கட்டியமைக்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. கடந்த 11ம் திகதி கிளிநொச்சியில் கட்சிக்கூட்டத்தை டக்ளஸ் தேவானந்தா கூட்டினார். சந்திரகுமாரின் கிளிநொச்சி தொகுதியில், சந்திரகுமாரின் அலுவலகத்தில் நடந்த கூட்டம். ஆனாலும் சந்திரகுமார் மிஸ்ஸிங். கேட்டால் கட்சிக்காரர்கள் ஆளையாள் முகத்தைப் பார்க்கிறார்கள்.

கூட்டத்திற்கு சந்திரகுமார் அழைக்கப்படவில்லையா? அழைக்கப்பட்டும் அவர் போகவில்லையா என்பதை சிதம்பர இரகசியமாக கட்சி காப்பாற்றி வைத்திருந்தது. வெளியில் தெரிந்தால் பத்திரிகைகள் கடித்துக்குதறிவிடுமாம்.

ஆனால் மறுநாள் யாழ்ப்பாணத்தில் நடந்த கட்சிப் புனரமைப்புக்கூட்டத்திற்கு சந்திரகுமார்

> **'இப்பொழுது ஒரு பிரச்சனை உள்ளதுதான். ஆனால் அதை வைத்து சந்திரகுமார் கட்சியை விட்டு வெளியில் வருவார் என சொல்ல முடியாது. அவர் மக்கள் பணியாற்ற வந்தவர். இதனை ஈ.பி.டி.பியிலிருந்து ஆரம்பித்தவர். ஆனால் கட்சிகளிற்கு உள்ள வரையறைகள் சில பணிகளை ஆற்றமுடியாமல் தடுப்பதுண்டு.**

அழைக்கப்படவில்லை. சந்திரகுமார் மட்டுமல்ல, சந்திரகுமாரின் ஆள் எனச் சந்தேகிக்கப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேசசபை எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணனிற்கும் (ஜீவன்) கல்தா கொடுத்துள்ளார்கள்.

### சத்தமில்லாத சந்திரகுமார்

விடயம் இப்படி கொதித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் சந்திரகுமார் தரப்போ மிக அமைதியாக உள்ளது. எரிமலை குமுறிக்கொண்டிருப்பதை வெளியிலிருந்து பார்த்து தெரிய முடியாதென்பது இதுதானோ என்னவோ.

'இப்பொழுது ஒரு பிரச்சனை உள்ளதுதான். ஆனால் அதை வைத்து சந்திரகுமார் கட்சியை விட்டு வெளியில் வருவார் என சொல்ல முடியாது. அவர் மக்கள் பணியாற்ற வந்தவர். இதனை ஈ.பி.டி.பியிலிருந்து ஆரம்பித்தவர். ஆனால் கட்சிகளிற்கு உள்ள வரையறைகள் சில பணிகளை ஆற்றமுடியாமல் தடுப்பதுண்டு. அதை மீறி செயற்பட்டால் கட்சிக்கு பிடிப்பதில்லை. அப்படி தொடர்ந்து சிக்கல் வந்தால் வெளியில் வந்து வேலை செய்வதுதானே முறை. நாம் உடனடியாக வெளியில் வரப்போவதில்லை. கட்சி எம்மை நீக்கினால் அதன் பின்னர் அடுத்த கட்டம் பற்றி அறிவிப்போம்' என்கிறார்கள் சந்திரகுமார் ஆதரவாளர்கள்.

சிலநாட்களாகவே தொலைபேசியில் தொடர்பு கொள்ள முடியாமல் இருந்த சந்திரகுமாரை ஒருவழியாக தொலைபேசியில் பிடித்தோம். விடயத்தை பொறுமையாக கேட்டுவிட்டு, 'வரும் தகவல்கள் அனைத்தும் வதந்தி. இப்பொழுதும் கட்சியில்த்தான் இருக்கிறேன். உள்நோக்கமுடைய சிலர் கிளப்பும் வதந்திகளை நம்ப வேண்டாம்' என்றார்.

### அடுத்தது என்ன?

சந்திரகுமார் அப்படி சொன்னாலும், விடயம் எக்கச்சக்கமாக சிக்கலாகிவிட்டதென்பதே உண்மையென்கிறார்கள் விடயமறிந்தவர்கள். அதை உறுதி செய்யும்விதமாகவே ஈ.பி.டி.பி தரப்பினர் பேசுகிறார்கள். இனிமேல் சமரசத்திற்கு இடமில்லை. எம்மை விட்டு தனித்துப் போக முடிவெடுத்தவர்களை எந்தக்காரணத்தை கொண்டும் கட்சிக்குள் மீளச்சேர்க்ககூடாதென தலைமையை வலியுறுத்தியமாக அவர்கள் சொல்கிறார்கள்.

சந்திரகுமார் தரப்பும் கறாரான நிலைப்பாட்டில்த்தான் உள்ளது. இந்தக்கட்சியில் இனிமேல் இருக்க வாய்ப்பில்லை என்கிறது.

அப்படியானால் அடுத்தது என்ன? இந்தக்கேள்விதான் பெரும் மர்மமானது. ஆனால் ஈ.பி.டி.பிக்காரர்கள் ஒரு கதை சொல்கிறார்கள்.

அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன, சந்திம வீரக்கொடி ஆகியவர்களின் பின்னணி இதில் உள்ளதாகவும், ராஜிதவின் அமைச்சிற்குட்பட்ட திணைக்கள தலைவர் பதவியொன்று அவரிற்கு வழங்கப்படுமென்றும், தென்னிலங்கையின் இரண்டு பிரதான தேசியக்கட்சிகளில் ஒன்றில்



அனேகமாக அது ஐக்கிய தேசியக்கட்சியாக இருக்கலாமென்றும் அவர்கள் சொல்கிறார்கள்.

ஆனால் சந்திரகுமார் தரப்பு இதை மறுக்கிறது. அப்படியொரு எண்ணமே இல்லை, தனித்துவமாக இருந்து மக்கள் பணி செய்வதே நமது இலட்சியம் என்கிறார்கள்.

ஆக இந்த விடயத்தை பார்க்கும் போது, இரண்டு தரப்புமே மிக எச்சரிக்கையாக உள்ளதைப் போல தெரிகிறது. யாரும் முதலில் கத்தியை தூக்கிவிடக்கூடாதென்பதில். கட்சி நீக்கும் வரை சந்திரகுமார் காத்திருக்கிறார். சந்திரகுமார் போகும்வரை கட்சி காத்திருக்கிறது. இதனால்த்தான் விடயத்தை பொத்திபொத்தி மறைக்கிறது இரண்டு தரப்பும்.

நண்டு கொளுத்தால் வளையில் தங்காதென்பார்கள். கொஞ்சநாள் பொறுத்தால் எல்லாம் வெளிச்சத்திற்கு வரும்.

## இணைய ஜன்னல்

**Rimaz Ahamed**
ரஹ்மான் முஸ்லிம் இல்லை. மீண்டும் கலிமா சொல்ல வேண்டும் இஸ்லாமிய அமைப்புகள்.
சிவாஜி படத்துல பட்டிமன்றம் ராஜா சொல்ற மாதிரி "நாங்க தெலுங்குய்யா" ன்னு சொல்லிட்டு போய்ட்டே இருங்க ரஹ்மான் ஜி!!!

**மன்னார் அமுதன்**
ஏசி என்பது நாம் இருக்கும் சின்ன அறையை குளிராகவும் இந்த பெரிய பூமியை சூடாகவும் மாற்றுகிறது...

**Vanna Serr**
பூதக்கண்ணாடி வைத்து தேடிப்பார்த்தாலும் காணக்கிடைக்கப் போவதில்லை எம் வலிகளுக்கான நிவாரணம். ஆண்டுக்கிருமுறை வெளிவரும் ஓர் மகசினாகவே எடுத்துக்கொள்வோம் ஐநாவின் அறிக்கையினையும்.

**Mrkapil Kapilathas**
இலங்கையில் உள்ள சாரதிகள் "பொருட்கள்களை ஏத்திட்டு போகும் போது பக்குவமா வாகனம் ஓட்டுவாங்க ஆனால் பயணிகளை ஏத்திட்டு போகும் போது பயங்கரமா ஓட்டுவாங்க"

**Thaj Azree**
மௌத்தாகுன மனுசனை இப்படியெல்லாம் சொல்லி கண்ணியத்தை குழப்பாதிங்கப்பா!
" பெரும் தலைவர் அஷ்ரபின் மறுவடிவம் எடுத்து வந்தவர்தான் இன்றைய தலைவர் றவூப் ஹக்கீம் என்று சொன்னால் அது மிகையாகாது"

**Nilavan Yuwan**
'பாலச்சந்திரனை படுகொலை செய்தது இலங்கை ராணுவம்தான்: ஐநா அறிக்கை' ஓ அப்படியா? நாங்க இவ்ளோ நாளா பாலச்சந்திரனை படுகொலை செய்தது பங்களாதேச இராணுவம்னுதானே நெனைச்சுகிட்டு இருந்தோம்! போங்கடா நீங்களும் உங்க விசாரணைகளும்!





# உயிர் காக்க கொஞ்சம் கவனி!

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் மினிபஸ் ஒன்றும், யாழ்ப் பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் ளானது.

கடந்தவாரம் அச்சுவேலி ஆவரங் கால் சந்திக்கு அருகாமையில் நடை பெற்ற இந்த விபத்தில் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என மொத்த மாக 32 பேர் காயமடைந்தனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அத்துடன் விபத்துக்குள்ளான இரு வாகனங் களும் முற்றாக சேதமடைந்தன. இந்தச் செய்தி மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்பட்ட ஒரு விபத்துச் சம்பவம்.

இதுபோன்று பல்வேறு விபத்துச் செய்திகள் தினமும் பத்திரிகைகள், இணையத்தளங்கள் என ஊடகங்களில் வெளிவந்த வண்ணம் உள்ளதுடன், தற்போது விபத்துக்கள், அதனால் ஏற்படும் மரணங்கள், இழப்புக்கள் என்பன யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாடு முழுவதும் அடிக்கடி நிகழும் ஒன்றாகிவிட்டது.

முன்பெல்லாம் சைக்கிள்களில் பயணித்தார்கள். ஒரு சைக்கிள் வாங்கிறதென்றாலே கஷ்ரம், வசதியானவர்கள் மட்டும்தான் மோட்டார் சைக்கிள், கார் வைத்திருந்தார்கள். இன்று விலை கூடிய வாகனங்களையும் இலகுவாக "லீசிங்" இல் வாங்கிவிடலாம். இதனால, வீட்டுக்குவீடு மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள், வான் தான்.

என்ன இருக்குதோ இல்லையோ ஒரு மோட்டார் சைக்கிளும், கைத் தொலைபேசியும் இருக்கவேண்டும் என விரும்புகின்றார்கள் இன்றைய இளைஞர்கள். "சும்மா ஸ்டைலா 70, 80 கிலோ மீற்றர் வேகத்தில் பைக் ஓட்டினாதான் கெத்தா இருக்குமாம்". ஆனால், இவர்களில் பலருக்கு அவற்றைச் செலுத்துவதற்கான அனுபவமோ, சாரதி அனுமதிப்பத்திரமோ இருப்பதில்லை.

அதுமட்டுமல்ல சுமார் 3 தசாப்த காலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த வீதிகள் எல்லாம் இன்று அகலிக்கப்பட்டு காப்பெற் வீதிகளாகிவிட்டன. மண் ஒழுங்கை களும் தார் வீதிகளாக மாறி விட்டன. சுற்றுலாப் பயணிகள், முதலீட்டாளர்கள், வெளி மாவட்டத்தினர் என வருபவர் களும், செல்பவர்களுமாய் வாகனப் போக்குவரத்துக்களின் அதிகரிப்பு, நெரிசல் என்பனவும் விபத்துக் களுக்கு கரணமாகிவிட்டன.

வெறுமனே, சூழலை மட்டும் குறைகூற முடியாது, வாகனம் செலுத்து வோர் (சாரதிகள்) அவதா னமாகச் செயற்பட்டால் விபத்துக்களை தடுக்க முடியும்.

**விபத்துக்கள் ஏற்படக் காரணம் என்ன?**


- அளவுக்கதிகமான வேகம்.
- தொலைபேசியில் உரையாடிய படி வாகனத்தை செலுத்துதல்.
- மது போதையில் வாகனத்தை செலுத்துதல்.
- வீதி விதிமுறைகள் பற்றி தெரிந்துகொள்ளாமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனத்தைச் செலுத்துதல்.
- தலைக்கவசம் அணியாமல் செல்லுதல், ஒரு மோட்டார் சைக்கிளில் 3, 4 பேர் பயணிக் கின்றமை.
- உள் வீதிகளில் இருந்து வாகனங் களில் வருவோர் பிரதான வீதியில் வருகின்ற வாகனத்தை அவதானிக்காது வீதிக்குள் நுழைதல்.
- நாற்சந்தி மற்றும் வளைவுகளில் வலப்பக்கம் வருகின்ற வாகனங் களுக்கு இடங்கொடாமை.
- பாதசாரிகள் வீதிகளை கடக்கும் போது வாகனத்தில் வருவோர் இடம்கொடாமை மற்றும் மற்றும் பாதசாரிகள் மஞ் சள் கோடு வழியாக வீதியை கடக்காது தாம் விரும்பியவாறு கடத்தல்.
- வீதியில் ஒரே சமயத்தில் 3 அல்லது 4 பேர் துவிச்சக்கர வண்டியையோ அல்லது மோட்டார் சைக்கிளையோ செலுத்துதல்.
- வளைவான வீதி களில் வாகனங்களை முந்திச் செல்ல முற்படல்.
- வாகனத்தின் சமிக்கை விளக் குகள் தொழிற்படாமை, தேய்ந்த ரயர்களுடன் வீதியில் செல்லுதல்.
- வாகன வெளிச்சம் இன்றி இரவில் பயணித்தல்.
- வயதுக் கட்டுப்பாடின்றி வாகனம் செலுத்துதல். (18 வயதுக்கு குறைவானவர்கள்)
- ஓய்வின்றி இரவு பகல் என வாகனம் செலுத்துதல்.

**மற்றவர்களுக்கும் பாதிப்பு**

விபத்தொன்று நடைபெறு கின்றது என்றால் அது விபத்தை ஏற்படுத்துபவரை மட்டுமல்ல மற்றவர்களையும் பாதிக்கின்றது.

**3 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் சாலை விபத்துகளில் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள். சாலை பாதுகாப்பு குறித்து இளைஞர்களிடம் அதிக விழிப்புணர்வை உருவாக்க வேண்டியது கட்டாயம்.**

விபத்தின் மூலம் உயிர் அல்லது உடல் அவயங்கள் ஏதும் இழக்க நேரிடுமாயின் அந்த உயிரின் பெறுமதி மிகப்பெரியது. இறந்தவர் அவரது குடும்பத்திற்கு ஒரேயொரு பிள்ளையாக இருக்கலாம் அல்லது குடும்பத்தை தன் தோளில் சுமக்கும் தலைவனாக இருக்கலாம் அல்லது பல இலட்சங்கள் கடன் வாங்கியராக இருக்கலாம். இதனால் குடும்பத்தாருக்கு உயிர் ஒன்று பிரிந்துவிட்டதே என்ற வேதனை ஒருபுறம் வாட்டிவதைக்க, இறந்தவர் குடும்பத் தலைவன் என்றால் அவர் குடும்பமே நடுத்தெருவுக்கு வந்துவிடும் சூழ்நிலையும் ஏற்படும்.



அதனைவிட விபத்துக்குள்ளான வாகனங்கள் "லீசிங்"இல் வாங்கப் பட்டிருக்கும் அந்தக் கடனைச் செலுத்துவது அடுத்த நெருக்கடி.

மேலும், விபத்துக்களில் சிக்கி காயமடைவதால் பெருமளவிலான மருத்துவச் செலவினம் ஏற்படு கின்றது. அங்கவீனம் அடைவ தால் வீட்டிற்கும். நாட்டிற்குமான உழைப்பாளர்கள் இழக்கப்படுவ துடன் அவர்களுக்கான பரா மரிப்புச் செலவீனமும், பராமரிப்பு மனிதவளமும் வீண் விரயம் ஆகின்றன.

**இளைஞர்களே அதிகம் உயிரிழக்கின்றனர்!**

ஆண்டு தோறும் உலகமெங்கும் 3 லட்சத்திற்கும் அதிகமான இளைஞர்கள் சாலை விபத்துகளில் பரிதாபமாக உயிரிழப்பதாகக் குறிப்பிட்டுள்ள உலக சுகாதார அமைப்பு, சாலை பாதுகாப்பு குறித்து இளைஞர்களிடம் அதிக விழிப்புணர்வை உருவாக்க வேண்டியது கட்டாயம் எனவும், குடும்பத்தினரும் இதில் முக்கிய பங்காற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையில் 2014ஆம் ஆண்டில் மட்டும் இளைஞர்கள் உட்பட 2,439 பேர் வீதி விபத்தால் உயிரிழந் துள்ளதுடன், 2015 ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் 790 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழந்துள்ளனர்.

**விபத்துக்களை தடுக்க**

1. சாரதிகள் போக்குவரத்து விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
2. முறையான சாரதிப் பயிற்சி பெற்று சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற பின்னரே வாகனங்களை செலுத்த வேண்டும்.
3. கடுமையான வீதி போக்குவரத்து சட்டங்களை உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தல்.
4. பாடசாலை மட்டத்தில் அறிவுறுத்தல்களை வழங்கல்.
5. பொதுமக்களுக்கு பொலிசாரின் மூலம் விபத்துக்கள் மற்றும் வீதி ஒழுங்குகள் பற்றி அறிவுறுத்தல்
6. பிரதான வீதிகளில் இரகசிய கமெராக்கள் மூலம் முறை கேடான சாரதிகளின் நடவடிக் கைகளை கண்காணித்தல்.

இதேவேளை, வீதி நாடகங்கள் மற்றும் வீதிகளில் பதாதைகள் மூலம் விபத்து தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பழுதடைந்த வாகனங்களை சோதனையிடல், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வசனங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்களை வாகனங்களில் ஒட்டுதல், வீதிகளில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுதல், போக்குவரத்து நெரிசல் உள்ள வீதிகளில் கடமைகளில் ஈடுபடல் என வீதி விபத்துக்களை தடுக்க பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.

எதுவாக இருந்தாலும் சாரதிகள் நாம் கவனமாக இருந்தால் எமது உயிரை மட்டுமல்ல வீதியில் பயணிக்கும் ஏனையவர்களின் உயிரையும் பாதுகாக்க முடியும்.



தொகுப்பு: லீனா

சர்வதேச விசாரணை நடந்து விட்டதா? நடக்கவில்லையா?. இப்படியொரு கேள்வியை பொதுத்தேர்தலின் முன்னர் கேட்டிருந்தால் யாருக்கும் எந்த குழப்பமும் ஏற்பட்டிருக்காது. கண்ணை மூடிக்கொண்டு பதில் சொல்லியிருப்பார்கள். பொதுத் தேர்தல் பரப்புரைகளில் பெரும் பாலான தமிழ் வேட்பாளர்கள் சர்வதேச விசாரணை நடக்க வேண்டுமென தொண்டை நரம்பு புடைக்க ஆவேசமாக மேடைகளில் முழங்கினார்கள்.


அது போனமாதம். இது இந்த மாதம் என்ற வடிவேலு கதையைத்தான் நினைவூட்டுகிறது; நமது அரசியல் நிகழ்வுகள். கடந்த ஒரு மாதமாக அரசியலரங்கில் திடீர் குழப்பம். சர்வதேச விசாரணை முடிந்து விட்டதா? முடியவில்லையா? என நமது அரசியல்வாதிகள் குழம்பிக் கொள்ள, மக்களும் மண்டையை பிய்த்துக் கொள்கிறார்கள்.

கடவுள் இருக்கிறாரா? இல்லையா என்ற குழப்பத்திற்கு சற்றும் குறைவில்லாமல், 'என்னப்பா.. முடிஞ்சுதா.. முடியலையா?' என ஆளையாள் கேட்டு குழம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாஇல்லையாஎன்றகுழப்பம் மக்களிற்குள் இருக்க, அரசியல் வாதிகள் சும்மா இருக்கலாமா? அவர்களை குழப்ப வேண்டாமா? ம்... தாரை தப்பட்டைகள் முழங்க கிளம்பட்டும் நமது படைகள்...

**சுகிர்தன்**
**வடமாகாணசபை உறுப்பினர்**

போர்க்குற்றவிசாரணைதொடர்பான அமெரிக்காவின் மூன்றாவது பிரேரணையை தொடர்ந்து, நடந்த கொடுமைகள் தொடர்பான விசாரணைகளை செய்ய குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த குழு இலங்கைக்கு வர முடியவில்லை. எனினும், ஸ்கைப், சத்தியக்கடதாசி போன்ற பல்வேறு வழிமுறைகளின் மூலம் விசாரணையை முடித்து விட்டார்கள். சர்வதேச நீதிமன்றம் போன்றவற்றின் ஊடாக விசாரணை நடத்தப்படவில்லையே தவிர, ஒரு சர்வதேச பொறி



முறையின் மூலம் விசாரணை நடத்தப்பட்டு விட்டது. அதன் அறிக்கைதான் வெளிவரவுள்ளது.

சர்வதேச நீதிமன்றம் போன்றவற்றின் ஊடான விசாரணையைத்தான் நாம் விரும்புகின்றபோதும், தற்போதைய யதார்த்தத்தில் தமிழர்களால் அப்படியொருநிலைமையை ஏற்படுத்த முடியாது. சர்வதேசத்தை பகைத்துக் கொண்டு செயற்பட முடியாது. எனவே, அவர்களின் துணையுடன் சாத்தியமானவற்றை செய்வதே புத்திசாலித்தனம்.

**ஆனோல்ட்**
**வடமாகாணசபை உறுப்பினர்**

தமிழ்தேசிய கூட்டமைப்பினர் என்றாலும் சரி, தமிழ் மக்கள் என்றாலும் சரி, அனைவரும் சர்வதேச விசாரணையையே விரும்புகிறார்கள். அதில் இரண்டு கருத்து கிடையாது. அதனால்த் தான் சர்வதேச ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில்



இலங்கை மீதான விசாரணை தீர்மானம் இயற்றினோம். எனினும், நாங்கள் ஐநா அறிக்கை வெளிவரும்வரை பொறுத்திருப்பதுதான் நல்லது. அந்த அறிக்கையை வைத்துத் தான் சொல்ல முடியும், நடந்தது சர்வதேச விசாரணையா, அல்லது சர்வதேச விசாரணைக்கு பரிந்துரைக்கிறதா என்பதை. இந்த விடயத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் எப்படி முடிவெடுக்கப் போகிறார்கள் என்பதெல்லாம் எமக்கு தெரியாது. அவர்கள் சரியான வழியில் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. அதனால் ஐ.நா அறிக்கை வெளியாகும் வரை பொறுத்திருப்பதுதான் நல்லது.

**சிவாஜிலிங்கம்**
**வடமாகாணசபை உறுப்பினர்**

சர்வதேச விசாரணை நடந்தால் யாரை விசாரித்தார்கள்? யார்



நீதிபதி?. சர்வதேச விசாரணை நடந்ததாக கூறுவது பச்சைப்பொய். 2014இல் அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை தொடர்ந்து, ஏற்படுத்தப்பட்ட விசரணைக்குழு (oisl) மூலம் மக்களிடம் திரட்டிய சாட்சியங்களையும், அதற்கு அரசு கொடுத்த விளக்கத்தையுமே வெளியிடவுள்ளனர். இது சர்வதேச விசாரணை அறிக்கையல்ல. சர்வதேசவிசாரணைக்கான முன்னோடி செயற்திட்டம் இது. இதன் பின்னர்தான் தீர்மானிக்க வேண்டும், இந்த விடயத்தில் சர்வதேச விசாரணைக்கு செல்வதா?, என்னவகையான பொறிமுறை ஏற்படுத்துவது? என்பதையெல்லாம்.

அரசின் விளக்கத்துடன் திருப்திப்படுவதல்ல விசாரணைப் பொறிமுறை. அவர்களின் விளக்கத்தின் பின்னர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, சரியான பொறிமுறையொன்றின் ஊடாக விசாரணை நடத்தப்பட வேண்டும். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி.) ஊடான விசாரணை சாத்தியப்படுமென நான் நினைக்கவில்லை. ஏனெனில் ரோம் உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. ஆனால் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் போன்றவற்றின் மூலம் இந்த விசாரணைகளை முன்னெடுக்கலாம். சர்வதேச நீதிபொறிமுறையின் முன்பாக தமிழர்கள், அரச பிரதிநிதிகள் விசாரணை செய்யப்படுவதையே நாம் கோருகிறோம்.

சம்பவமொன்றின் எப்.ஐ.ஆர் பைல் செய்வதைப் போன்ற ஒரு விடயம்தான் வெளிவந்துள்ள இந்த அறிக்கை விவகாரம். இதனை சர்வதேச விசாரணையென கொள்ள முடியாது.

**சிவயோகன்**
**வடமாகாணசபை உறுப்பினர்**

இலங்கையரசின் எந்த உள்ளக விசாரணையையும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவற்றில் நம்பிக்கை கொள்ள முடியாது. காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைக்குழு அதற்கு கடைசி உதாரணம். அவர்கள் நீண்ட காலமாக விசாரணை நடத்துகிறார்கள். அதில் எந்த முன்னேற்றமும் இல்லை. இதனால்த் தான் தமிழ்தேசிய கூட்டமைப்பு சர்வதேச விசாரணை தேவையென்பதில் உறுதியாக நிற்கிறது. சர்வதேச விசாரணை தவிர்ந்த வேறொன்றையும் தமிழ்தேசிய கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளவே மாட்டாது. சர்வதேச விசாரணை




ஒன்றின் மூலமே தமிழர்களிற்கு நீதி கிடைக்கும். ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின் நோக்கமே, மோடியின் ஊடாக உள்ளகவிசாரணைக்கு தமிழ்தேசிய கூட்டமைப்பை சம்மதிக்க வைக்கச் செய்யத்தான்.

ஐ.நா விசாரணை அறிக்கை வந்ததன் பின்னர்தான் இந்தவிடயத்தில் மேலதிகமாக எதனையும் கூற முடியும். எனினும், இதுவரை நடந்தவற்றை சர்வதேச விசாரணையென கொள்ளமுடியாது.

**கந்தையா சிவநேசன் (பவன்)**
**வடமாகாணசபை உறுப்பினர்**

இறுதி யுத்தத்தில் கடுமையான மனிதஉரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் என்பன நடத்தப் பட்டுள்ளன என்பதை இலங்கையும் ஏற்றுக்கொண்டு விட்டது. அதனால்த்தான் உள்ளக பொறிமுறை மற்றும் நட்டஈடு



போன்ற அறிவித்தல்களை விடுத்துள்ளது. இலங்கையின் இந்த நிலைப்பாட்டு மாற்றத்திற்கு காரணம், சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட ஒருவிசாரணைதான். ஐ.நா மனிதஉரிமைகள் பேரவை நடத்திய விசாரணை ஒரு சர்வதேசவிசாரணைதான். ஆனால் இதை மட்டும் தமிழ்மக்கள் எதிர்பார்க்கவில்லை. அதற்கான பரிகாரங்கள், குற்றவாளிகள் அடையாளப்படுத்தப்படல் என்பன அவசியம். இந்த விடயத்தில் மேம்பட்ட சர்வதேச பொறிமுறையொன்று அவசியம். இந்தவிவகாரம் சர்வதேச நீதிமன்றம் போன்றபொறிமுறைகளினூடாகவே அணுகப்பட வேண்டும். குற்றமிழைத்தவர்களை பழிவாங்க தூக்கில் தொங்கவிட வேண்டும், பழிவாங்க வேண்டும் என்ற எண்ணங்களுடன் இதனை தமிழர்கள் வலியுறுத்தவில்லை. பாதிக்கப்பட்டவர்களிற்கு பரிகாரம் தேடவும், உண்மைகளை கண்டறியவும் அங்கு என்ன நடந்தது? யார் குற்றவாளிகள் என்பதை தெளிவாக கண்டறிய வேண்டும்.



## 1-ம் பக்க தொடர்ச்சி

பேரவையின் இலங்கை தொடர்பான அறிக்கை.

இலங்கையில் பெண்கள் எதிர்கொள்ளும் பேசப்படாத சவாலொன்றை இந்த அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது. யுத்தசமயத்தில் பல பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்ற விபரம் அடிக்கடி வெளிவந்தபடிதான் இருந்தது. எனினும், அப்பொழுது படைத்தரப்பு அதனை நிராகரித்திருந்தது. எனினும், ஐநா அறிக்கை அனைத்தையும் அம்பலப்படுத்தியுள்ளது.



யுத்தசமயத்தில் பாதுகாப்பு தரப்பினர் கொண்டிருந்த அதிகாரம் எல்லோரும் அறிந்ததுதான். அவர்களை யாரும் கேள்விகேட்காத தன்மையொன்று கட்டி வளர்க்கப்பட்டது. இதுதான் தமிழர்களின் வாழ்வை அசைத்துப்போட்டது. ஒளிவுமறை வில்லாமல் சொன்னால், யுத்தத்தில் ஒரு ஆயுதமாகவே பெண்களிற்கு எதிரான வன்முறைகள் பிரயோகிக்கப்பட்டன.

சுற்றிவளைப்புக்கள், கைதுகளில் பெண்கள் எதிர்கொண்ட சிரமங்கள் சொல்லி மாளாதவை. குறிப்பாக கைது செய்யப்பட்டு நீண்டநாள் அல்லது தனிமைச்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்ட பெண்கள் எதிர் கொண்ட அனுபவங்கள் நெஞ்சை பதற வைப்பவை. அதிலும் குறிப்பாக அரசிற்கு எதிராக செயற்பட்டார்கள் என்ற சந்தேகத்தில் கைதான பெண்கள் நிலைதான் பெரும்துயரமானது.

யுத்தகாலத்தில் இலங்கைச்சிறைகளில் பெண்களிற்கு எதிராக வன்முறைகள் வழக்கமான ஒன்றென்றுதான் நீண்டநாட்களாக மனிதஉரிமை செயற்பட்டாளர்களும், பத்திரிகையாளர்களும் சொல்லிவருகின்றனர். ஒரு மனிதனை நிர்வாணப்படுத்துவது அவனை முற்றிலும் நிலைகுலைய செய்வதாகவும், மனஉறுதியை உடையச்செய்வதாகவும் உள்ளதாக பாதுகாப்புதுறையினர் பலகாலமாக நம்பி வருகின்றனர். இதனால்த்தான் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பாலியல் ரீதியாக குறிவைக்கப்படுகிறார்கள்.

இறுதியுத்தத்தின் பின்னரான சமயங்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களும் இந்தவிதமான ஆபத்தை எதிர்கொண்டதாக பல்வேறு சந்தர்ப்பங்களிலும், சில அமைப்புக்கள் கூறிவந்திருக்கின்றன. எனினும், அவர்கள் தொடர்பில் விசேடமாக ஐநா அறிக்கையில் எதனையும் குறிப்பிடவில்லை.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களை விசாரணை செய்யபாலியல் சித்திரவதைகள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன, விசாரணை இல்லாத சமயங்களில் பாலியல் வன்முறை நடந்துள்ளது என அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் பின்னரான சமயங்களில், யுத்தகால கொடுமைகள் தொடர்பில் பல்வேறுதரப்பிலிருந்தும் ஆதாரங்கள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட ஆதாரங்கள் காணொளியாகவோ, புகைப்படமாகவோ வெளிவந்தபடியிருந்தது. அப்படியொரு காணொளியில் சில பெண்கள் தோன்றி வாக்குமூலமளித்திருந்தனர். முகங்களை அடையாளப்படுத்தாத விதத்தில் அவர்கள் தோன்றிய அந்தகாட்சியில், தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயங்களில் எப்படி பாலியல்ரீதியிலான வன்முறைக்கு உள்ளானோம் என்பதை துணிவாக வெளிப்படுத்தியிருந்தனர். கைது செய்யப்பட்டதிலிருந்து, விசாரணை முடியும் நாள் வரையும் நிர்வாணமாகவே தான் வைக்கப்பட்டிருந்ததாகவும், அங்கிருந்தவர்களால் தேவைப் பட்ட சமயங்களில் தான் பயன்படுத்தப் பட்டதாகவும் ஒரு பெண் வாக்குமூலமளித்திருந்தார்.

தடுத்து வைக்கப்பட்டவர்களிடம் பாலியல்வன்முறை ஒரு ஆயுதமாக பாவிக்கப்பட்டது என்பதை ஆதாரபூர்வமாக அதுவும் வெளிப்படுத்தியிருந்ததாக பலரும் குறிப்பிட்டபோதும், இலங்கை அதனை மறுத்தது. அது திரிவுபடுத்தப்பட்ட காணொளியென்றது.

இதேபோல, பாலியல் குற்றவாளிகள் யாரும் சட்டத்தின் முன்நிறுத்தப்பட்டதில்லையென்று அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்ததும் கவனிக்கத்தக்கது. இனப் போர் தீவிரம் பெற்றதன் பின்னர் எத்தனையோ பெண்கள் பாலியல் வன்முறைக் குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்டபோதும், யாருமேசட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. சாரதாம்பாள், ரீட்டா, கோணேஸ்வரி, கிரிசாந்தி என நமது கண்களை விட்டு இன்னும் மறையாக எத்தனையோ சகோதரிகளின் ஆத்மாக்கள் நீதிக்காக காத்திருக்கின்றன.

இதில் துயரம் என்னவென்றால், யுத்தவலயங்களிற்கு அப்பாலும் பெண்களின் நிலை இப்படித்தான் உள்ளது. நமது சமூகத்தில் உள்ள சாதாரண பெண்கள் எத்தனைபேர் பாலியல்ரீதியிலான தாக்குதல்களிற்கு உள்ளாகியுள்ளனர்? அதில் எத்தனைபேர் நியாயத்தை பெற்றார்கள்?

நமது மனச்சாட்சியை நெருடும் இன்னொரு

**இலங்கை முழுவதும் அன்றாடம் பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்கள் பதிவாகிக் கொண்டிருக்கிறது. இறுதி உதாரணம் கொட்டதெனியாவ பகுதியில் நான்கரை வயது சிறுமி கொல்லப்பட்டது. அதற்கு முன்னர் கிளிநொச்சியில் ஒரு சிறுமி, புங்குடுதீவில் ஒரு மாணவி. இது இப்பொழுது தொடங்கிய பட்டியல்ல.**

கேள்வியும் உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் வடக்கில் எத்தனை பாலியல் வன்முறைகள் நடந்தன? அதில் எத்தனை குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர்? நீதி, அறம், மனித விழுமியங்கள் பற்றியெல்லாம் பேசும், சிந்திக்கும் நாமெல்லாம் இதையெண்ணி வெட்கப்பட வேண்டாமா?

எங்கே தவறு நிகழ்கிறது? நமது சட்டங்களிலா? நீதித்துறையிலா? வாழ்க்கை முறையிலா?

இலங்கை முழுவதும் அன்றாடம் பெண்கள் மீதான பாலியல் தாக்குதல்கள் பதிவாகிக் கொண்டிருக்கிறது. இறுதி உதாரணம் கொட்டதெனியாவ பகுதியில் நான்கரை வயது சிறுமி கொல்லப்பட்டது. அதற்கு முன்னர் கிளிநொச்சியில் ஒரு சிறுமி, புங்குடுதீவில் ஒரு மாணவி. இது இப்பொழுது தொடங்கிய பட்டியலல்ல. இத்துடன் முடியும் பட்டியலுமல்ல.

தடுப்புமுகாம்களில் சீரழிக்கப்பட்ட பெண்களிற்கு மட்டுமல்ல, நமது அயலிலுள்ள சகோதரிகளிற்காகவும் போராட வேண்டிய ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.





# தொப்புள்கொடி உறிஞ்சும் வாழ்வு

வடக்கு மாகாணக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தாயகத்தினைச் சேர்ந்த மீனவர்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டுவருகின்றனர். போர் முடிந்த பின்னரும் மீனவர்கள் ஏதோ ஒருவகையிலான நெருக்கடிகளைச் சந்தித்தே ஆகவேண்டும் என்பதாக இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன.

இலங்கையின் நீரியல் வளத் திணைக் களத்தின் கடல்வலயத் தடைச் சட்த்தின் கீழ் 1979ஆம் ஆண்டு வெளிநாட்டு மின்பிடிக்கலங்கள் ஒழுங்கு 59ஆம் இலக்கத்தில் ஒரு நாட்டின் எல்லைக்குள் அத்துமீறி கைது செய்யப்பட்டால் உயர் நீதிமன்றத்தின் ஊடாகவே வழக்கு தொடரப்பட்டு 1.5 மில்லியன் ரூபாவரையில் தண்டம் அறவிடப்படும்.

2013ஆம் ஆண்டு 48 படகுகளும் 220 மீனவர்களும், 2014இல் 99 படகு 427 மீனவர்களும், 2015 ஆவணி மாதம் வரையான காலப்பகுதியில் 21 படகு 143 மீனவர்கள், ஆகியோரின் அத்துமீறலால் கிடைக்கப்பட்ட


வீ.என்.சுப்பிரமணியம்

தகவலின் படி யாழ்.மாவட்டத்திற்கு ஏற்பட்ட இழப்பீடு,

2013ஆம் ஆண்டு 6.4165 மில்லியன், 2014 இல் 17.2 மில்லியன், 2015 இல் ஆவணிவரையில் சுமார் 4 மில்லியன்.

இவ்வாறான நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் வீ.என்.சுப்பிரமணியம் கருத்துத் தெரிவிக்கையில்,

1976ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய இழுவைப்படகுகள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றன. அன்று தொடக்கம் இன்றுவரையில் அத்துமீறல் நடவடிக்கை தொடர்கிறது. காரைக்கால் தொடக்கம் தனுஸ்கோடி வரையிலான கடற்பரப்பில் ஆறாயிரம் வரையிலான இழுவைப்படகுகள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இவற்றுக்கு சமமமாக நாட்டுப்படகுகளும் அத்துமீறிய கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றன. இவர்கள் இலங்கையின் வடபுல எல்லையைத் தாண்டிய அத்துமீறலில் ஈடுபட்டுவருவதால் மீனினங்கள் மட்டுமன்றி கடல் வளங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன.

மீன்குஞ்சுகள் அநியாயமாக அழிக்கப்பட்டு வருகின்றன. இதில் வேடிக்கையாக இந்திய மீனவர்கள் 45 நாள் மீன் இனப்பெருக்கம் எனத் தெரிவித்து மீனவர்களை தொழிலுக்குச் செல்லாமல் தடுக்கும் நடவடிக்கையில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. அதன் பின்னர் இனப்பெருக்கம் செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் அனைத்தையும் இந்திய மீனவர்கள் அழிக்கிறார்கள். இவ்வாறு தான் இந்திய இழுவைப்படகுகளின் நடவடிக்கை உள்ளது. இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அனைத்துத் தரப்பினருடனான சந்திப்புக்களின் போது இலங்கைக் கடற்படைத் தளபதி இந்திய இழுவைப்படகுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக விளக்கப்படம் ஊடாக விளக்கமளித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் நடவடிக்கைகளால் கடல் வளம் அழிக்கப்படுகிறது, மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்படுகிறது, இவற்றால் எமது வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது. நாங்கள் இருபது முப்பது வருடகாலம் போரினால் பாதிக்கப்பட்ட அயல் நாட்டவர்கள் என்றும் பாராமல் எமது வாழ்வாதாரத்தை சீரழிக்கும் வேலையைத் தான் தமிழ் நாட்டு மீனவர்கள் காலம் காலமாக செய்துவருகிறார்கள். அத்துமீறல்களை நிறுத்துவது தொடர்பில் இலங்கை இந்திய மீனவர்களுடன் பல கட்டங்களாக பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தாலும் கூட எவ்விதமான பிரயோசனமும் இல்லை. மீனவர்களுடன் நாம் கலந்துரையாடும் போது தங்களுடைய எல்லைக்குள் மீன்கள் அழிந்துவிட்டன. அதனால் எல்லை தாண்டவேண்டியுள்ளதாக கூறுகின்றனர். இவ்வாறு உண்மையைக் கூறும் அவர்கள்

**எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்யும் போது இந்தியாவில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் உடனடியாகவே இடம்பெறுவதால் கைது செய்யப்படுபவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே வெளியே விடப்படுகின்றார்கள். ஆனால் பாதிக்கப்படுகின்ற நாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றோம்.**

எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் நோக்குடனேயே செயற்பட்டுவருகிறார்கள்.

எவ்வளவு பாதிப்புக்களுக்குள் இருந்தும் எமது பின் சந்ததி வாழவேண்டும், கடல் வளம் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்குடன் பாதுகாப்பான மீன்பிடிமுறையைத்தான் கைக்கொள்கிறோம். 1976ஆம் ஆண்டிலேயே உள் இணைப்பு இயந்திரம் இருந்தும் பாய் வள்ளம், கரிசல் வள்ளம், வத்தைகள் மூலம் தொழில் செய்துவருகின்றோம். நாம் கடல் வளத்தைப் பாதுகாத்தே தொழில் செய்துவருகின்றோம். இந்திய இழுவைப்படகு அத்துமீறுவதன் காரணத்தால் எமது நாட்டிலும் ஒரு சிலர் இந்த இழுவைப்படகு தொழிலை செய்துவருகின்றனர். எனினும் இதன் மூலம் ஏற்படும் பாதிப்புக்களை உணர்ந்தும் இதனைக் கைவிட்டுள்ளனர். இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல்களை கட்டுப்படுத்துவதாயின் தொழிலாளிகள், முதலாளிகள் இதன் பாதிப்புக்கள் தொடர்பாக உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த முதலாளிகளே அரசியல்வாதிகளாகவும் அரசியல் பலம் உள்ளவர்களாகவும் இருப்பதால் இதனை நிறுத்துவதற்கு முன்வரமாட்டார்கள். தொழிலாளியை கஸ்ரப்படுத்தி எச்சரிக்கை செய்தும் தொழிலுக்கு அனுப்புவதால் தொழிலாளர்கள் எல்லைமீறி எமது கடலோரத்தில் தொழிலை மேற்கொள்கிறார்கள்.

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களை கைது செய்யும் போது இந்தியாவில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் உடனடியாகவே இடம்பெறுவதால் கைது செய்யப்படுபவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே வெளியே விடப்படுகின்றார்கள். ஆனால் பாதிக்கப்படுகின்ற நாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றோம். ஒரு நாட்டின் எல்லையை மீறுபவர்கள் தொடர்பில் இரு அரசாங்கங்களுக்கு இடையே உள்ள சட்டதிட்டங்களை முறையாக அமுல்ப்படுத்துவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்தமுடியும். இந்திய இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை என்பது வெறும் பித்தலாட்டமே என்றார்.

யாழ். மாவட்ட கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத்தின் தலைவர் நா.பொன்னம்பலம்,

இழுவைப்படகுத் தொழில் முறை என்பது அது மீன்பிடி முறையல்ல. அது கடல் வளத்தை அழிக்கும் தொழில் முறையாகும். இதை மனிதாபிமானம் உள்ள எவனும் இந்தியனோகவோ பாகிஸ்தான்காரனோ இலங்கையனோ எவராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.


நா.பொன்னம்பலம்

இழுவைப்படகை நோர்வே நாடுதான் அறிமுகப்படுத்தியிருந்தது. ஆனால் அறிமுகப்படுத்திய நோர்வே அத்தொழிலை விட்டு இருபது வருடங்களாகிறது. இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கு இலங்கை இந்திய மீனவர்கள் பேச்சுவார்த்தை என்பது முட்டாள்தனம். இது அரசியல் சதுரங்கவிளையாட்டு. இதனை என்றும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் சந்திப்பின்போது கடற்படையினருக்கு பல்வேறு பட்ட அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது, கைது செய்யவதற்கான நடவடிக்கை எடுக்குமாறும் புதிய திட்டங்களை அறிமுக்கப்படுத்துமாறும் கூறப்பட்டது. எனினும் இதுவரையில் உறுதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இலங்கை கடல்வலயத் தடைச்சட்டத்தினை முறையாகப் பயன்படுத்துவதன் மூலமே இத்தகைய தொழிற்பாடுகளை நிறுத்தமுடியும். களவு செய்தவர்களுக்கு மர்மக் கதைகளோ, திருக்குறள்களையோ கூறி அவர்களை திருத்தமுடியுமா?



# தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க



திரு.ஜெ. சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்,
தென்னைப் பயிர்ச் செய்கைச்சபை
கிளிநொச்சி







மழை பெய்த நேரம் இளம் முதிர் தென்னை மரங்களுக்கு சேதன அல்லது அசேதன பசளையிடுவது வளர்ச்சியையும் விளைச்சலையும் கூட்டுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே, இவ்வருடம் டிசம்பர் மாதம் முடியும் முன்பு தென்னைச் செய்கையாளர்கள் சேதன உரமாக மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, கிளிரிசீடியா இலைகள் அல்லது இப்பில்இப்பில் இலைகளையும், அசேதன உரமாக இளம் கன்றுக்கலவை (Young Palm Mixture YPM) முதிர்மரக்கலவை (Adult Palm Mixture APM), யையும் பிரயோகம் செய்யலாம். சிபார்சு செய்யப்பட்ட உரக்கலவைகள் தென்னைக்குத் தேவையான விகிதங்களில் நைதரசன், பொட்டாசியம், ஆகிய மூன்று மகாதாவர போசனைகளைத் தன்னகத்தே கொண்டது.

**தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறை:**

பாளை வந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றுக்கும் உலர்மாட்டெருவாயின் 30kg உடன் சப்போஸ் பொசுபேற் 400g உம், மியூரியற் ஒவ்பொட்டாசு 1kg உம் கலந்து அடிமரத்திலிருந்து 3 அடி தூரத்தில் 3 அடி அகலமாக (அடிமரத்திலிருந்து 6 அடி உட்பட்டதாக) 1/2 அடி ஆழத்திற்கு மட்டும் சுற்றவரக்குழி வெட்டி அதற்குள் மேற்குறிப்பிட்ட கலவையை இடுதல் வேண்டும். பின்பு இதனை மண்ணால் மூடி பசளை வட்டத்திற்குள் தென்னோலை அல்லது பனை ஒலையினால் மூடி பத்திரக்கலவையாக்கி விடலாம்.

**மாடுகளைத் தென்னை மரத்தில் கட்டுதல்**

தென்னையின் அடி மரத்திலிருந்து 3 அடி தூரம் தள்ளி 3 அடி அகலமாக 1/2 அடி ஆழத்திற்கு மட்டும் வெட்டி பசளை பாத்தி (Manure Basin) ஏற்படுத்த வேண்டும். பின் ஒரு சோடி மாடுகளைப் 10 இரவுகளுக்கு தொடர்ந்து ஒரு மரத்தில் கட்ட வேண்டும். கட்டும் போது எல்லா கழிவுகளும் பசளைப் பாத்திக்குள் விழுவதனை உறுதி செய்தல் வேண்டும். அதாவது மாடுகளை 6 அடிக்கு மேற்பட்ட நீளமுள்ள கயிறினைக் கட்டாமல் பசளைப் பாத்திக்குள் மாட்டின் பின் பக்கம் இருக்கத்தக்கவாறு பிணைத்தல் வேண்டும்.

இக்காலத்தின்பின் 200g சப்போஸ் பொசுபேற்றும் 750g மியூறியற் ஒவ்பொட்டாசும் பாத்திக்குள் விசிறப்பட்டு மண்ணினால் மூடி விடுதல் வேண்டும். இம்முறையை வருடத்தில் ஒரு தடவை செய்தால் போதுமானது. இளம் தென்னங்கன்று முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரமாக YPM (இளம்மரக்கலவை) APM (முதிர்மரக்கலவை) உரம் இடுதல்.

தென்னைகளில் நைதரசன் பற்றாக்குறையினால் எல்லா இலைகளும் வெளிறிய பச்சையாகத் தோற்றமளிக்கும். பின்பு மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்து பின்பு சிவப்பு கலந்த நரைநிறமாக மாறுகின்றது. இறுதியாக வட்டு படிப்படியாகச் சிறிதாகும். பொட்டாசியம் பற்றாக்குறையினால் சிற்றிலையின் நடுநரம்பின் (ஈக்கின்) இரு பக்கங்களிலும் துரு போன்ற புள்ளிகள் பரவலாகக் காணப்படும். சிற்றிலைகள் ஓரளவு மஞ்ள் நிறமாகக் காணப்படும் எனவே YPM, APM உரங்களை வருடா வருடம் தென்னைகளுக்கு இடுவதனால் மேற்குறிப்பிட்ட பற்றாக்குறை ஏற்படாது வளர்ச்சியையும், விளைவையும் அதிகரிக்கச் செய்யும்.


**இளம் தென்னைகளுக்கு YPM உரம் இடுதல்**

உதாரணமாக 5 வருடங்களுக்குட்பட்ட பாளை வராத தென்னைகளுக்கு YPM (Young Palm Mixture) இளமரக்கலவை என்ற உரத்தினை 6 மாதங்களுக்கு ஒரு தடவை ஆரம்பத்தில் 500 g YPM இலிருந்து 5 வயதுடைய பாளை வராத தென்னைகளுக்கு $1^{1/2}$ க்g YPM வரை உரப்பிரயோகம் செய்யலாம். தென்னையின் அடிமரத்திலிருந்து 1/2 அடி தூரம் வரை தள்ளி பசளை வட்டத்தினை மண்ணை சாதாரணமாக 1/2 அடி ஆழம் வரை கொத்திப் பிரட்டி சுற்றுவட்டம் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு பாளை வரும் நேரத்தில் 5 அடி சுற்றுவட்டப்பரப்பளவாக இருத்தல் வேண்டும். இப்படி கொத்திப்பிரட்டிய பின்பு வயதிற்கு ஏற்ப YPM இனை சாதாரணமாக துலீவல் முறை மூலம் பிரயோகம் செய்யலாம்.

**முதிர் தென்னைகளுக்கு APM உரமிடுதல்**

மர அடியிலிருந்து 6 அடி தூரத்திற்கு மரத்தைச் சுற்றியுள்ள முழுநிலப்பரப்பளவினுள்ளும் APM (Adult Palm Mixture) ஒரு மரத்திற்கு 1/2 kg வீதம் பிரயோகம் செய்தல் வேண்டும். களைகள் இருந்தால் களைகளை அகற்றவும் சாதாரணமாக 1/2 அடி ஆழமாகவும் 6 அடி சுற்றுவட்டப்பரப்பளவு முழுவதும்கொத்திப்பிரட்டியபின்பு 3gAPM உரத்தினைத்தூவிவிட்டால் (கொத்திய பரப்பு முழுவதும்) போதுமானது பின்பு பசளை வட்டத்தினைக் காய்ந்த தென்னோலை அல்லது பனையோலையினால் மூடி விடலாம். இப்படி வருடாவருடம் 1 தடவை செய்தால் அது போதுமானது.

எனவே நல்லின செவ்விழநீர், தென்னங்கன்றுகள், நாற்றுநடுதல் உரம், உரப்பிரயோகம் சம்பந்தமான ஏனைய விளக்கங்கள் தேவைப்படும் தென்னைச் செய்கையாளர்கள் அவ்வவ்பகுதி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் தென்னைப்பயிர்ச் செய்கைச்சபை, கமநல சேவை நிலையம் என்னும் முகவரியில் ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.



முல்லைத்தீவு விசுவமடுவில் பொதுமக்களிம் சிக்கியது இந்த மலைப்பாம்பு. விசுவமடுவின் றெட்பானாவை அண்டிய பிரதேசங்களில் பொதுமக்களிற்கு நீண்டகாலமாக தொல்லைகொடுத்து வந்த பாம்பிது. வீடுகளிலுள்ள கோழிகளை அடிக்கடி 'லபக்'கிக் கொண்டு செல்வதை வாடிக்கையாக கொண்டிருந்தது. பெருமுயற்சியின் பின்னர் பொதுமக்கள் பிடித்தனர். சுமார் 12 அடி நீளமாக மலைப்பாம்பிது.



வவுனியா ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட பகுதியிலுள்ள நாகபூசணியம்மன் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்திதினத்திலன்று, கல்லொன்றில் பிள்ளையார் சிலை தெரிந்ததாக கூறி, அந்தப்பகுதி மக்கள் வழிபாடுகள் செய்தனர்.



# சுயவிபரக்கோவை தயாரிக்கும்போது கவனம் செலுத்த வேண்டியவை

தொழிலொன்றுக்கு விண்ணப்பிக்கும்போது சுயவிபரக்கோவை அனுப்ப வேண்டும் என்பது கட்டாயமானது. சுயவிபரக்கோவயை அடிப்படையாகக் கொண்டே நேர்முகத்தேர்வுகள் நடைபெறுவதுடன் ஒருவரை வேலைவாய்ப்புக்கு தெரிவுசெய்வதா? இல்லையா? என்பதும் தீர்மானிக்கப்படுகின்றது.

இதனால் சுயவிபரக்கோவை தயாரிப்பதென்பது மிகவும் கவனமாகச் செயற்படவேண்டிய காரியம். முதல் முயற்சியிலேயே உங்கள் தொழில் தருநரைக் கவரக் கூடியதாக அதை மிகச்சிறப்பாகத் திட்டமிட்டு உருவாக்கவேண்டும்.

- ✓ சுயவிபரக்கோவை ஒன்றில் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள், விபரங்கள் வரவேண்டிய ஒழுங்குமுறைகள், எழுத்தின் அளவுகள், சுயவிரக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தும் உண்மையானது என்பதை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதில் அவதானமாக இருக்கவேண்டும்.
- ✓ என்ன தேவைக்கு நீங்கள் சுயவிபரக்கோவையைத் தயாரிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து அதன் வடிவமும் மாறுபடும். தொழிலொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும், உயர் கல்வித் தேவைக்கும் வித்தியாசமான சுயவிபரக்கோவையைத் தயாரிக்க வேண்டியிருக்கும். இதற்குப் பல்வேறு சுயவிபரக்கோவை மாதிரிகளைப் பார்த்துப் பொருத்தமான வடிவத்தைத் தெரிவு செய்யலாம். இணையத்தளத் தேடல்கள் (Google Search) இதற்கு உதவும்.
- ✓ சுயவிபரக்கோவையொன்றைத் தயாரித்து விட்டீர்கள் என்பதற்காக, எந்தவொரு தொழிலுக்கும் விண்ணப்பிக்கும்போதும் அதையே அனுப்பாதீர்கள். நீங்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட தொழிலுக்கும் ஏற்ற விதமாக, குறிப்பிட்ட தொழிலுக்குரிய, தொழில் தருநரின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யக்கூடிய விடயங்களை மனதில் நிறுத்தி அதற்கேற்ற விதத்தில் சுயவிபரக்கோவையை மீளமைத்துக் கொள்வது அவசியம்.
- ✓ நிறுவனங்களோ, தொழில் தருநர்களோ இன்று வெறுமனே சாதாரண மனிதர்களைப் பணிக்கமர்த்த விரும்புவதில்லை. வாழ்க்கையில் உயரிய இலட்சியங்களைக் கொண்டுள்ள, அர்ப்பணிப்புள்ளவர்களையே அவர்கள் தேடுகின்றனர். இதற்கேற்ப நீங்கள் உங்கள் வாழ்வின் இலட்சியம், இலக்கு என்பவற்றை சுருக்கமாகச் சுயவிபரக்கோவையின் ஆரம்பத்தில் குறிப்பிடலாம்.
- ✓ கல்வித் தகைமைகள், பல்கலைக் கழகத் தகைமைகள், தொழில் அனுபவங்கள், தொழில்சார் தகைமைகள், வெளிக்களச் செயற்பாடுகள் மற்றும் உங்கள் பொழுதுபோக்குகள் உள்ளிட்ட தனிப்பட்ட விபரங்கள், நீங்கள் பெற்றிருக்கும் விருதுகள், சாரதி அனுமதிப்பத்திரம் பற்றிய தகவல்கள் உள்ளிட்ட முக்கியமான அனைத்து விடயங்களையும் சுயவிபரக்கோவையில் உள்ளடக்குங்கள்.
- ✓ உங்களுடைய ஒளிப்படங்கள், கடந்த காலங்களில் நீங்கள் வேலை செய்த இடங்களில் பெற்ற சம்பள விபரங்கள், அங்கிருந்து நீங்கள் விலகியமைக்கான காரணங்கள் போன்றவற்றை சுயவிபரக்கோவையில் இணைத்துக்கொள்ளத் தேவையில்லை.
- ✓ நீங்கள் தயாரித்திருக்கும் சுயவிபரக்கோவை எந்தவிதமான எழுத்துமற்றும் இலக்கணப் பிழைகளுமின்றி இருக்கின்றதா என்பதைச் சரி பார்த்துக் கொள்ளவும். சரிபார்ப்பதற்கு பிறிதொருவரின் உதவியையும் நாடலாம். நீங்கள் வழங்கும் தகவல்களை ஒவ்வொரு தலையங்கங்களின் கீழ் ஒழுங்காக வகைப்படுத்தவும்.
- ✓ நீங்கள் தயாரித்திருக்கும் சுயவிபரக்கோவையை மெருகூட்டுவதற்காக உண்மையான தொழில் மற்றும் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமானவற்றை சேர்க்க முயற்சிக்க வேண்டாம். உண்மையான தகவல்களை மாத்திரம் அதில் உள்ளடக்கிக் கொள்ளுங்கள். உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கினீர்களாயின் அதுவே உங்களுக்கு எதிரியாகிவிடும்.
- ✓ தொழிலொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு சுயவிபரக்கோவை மாத்திரம் அனுப்பிவைத்தால் போதாது. சுயவிபரக்கோவையுடன் இணைப்புக் கடிதமொன்றையும் அனுப்பிவைக்கவேண்டும். உங்களைப் பற்றிச் சாதகமான நிலைப்பாட்டை உருவாக்குவதற்கும், அறிமுகப்படுத்திக் கொள்வதற்கும், உங்கள் தொழில் நிபுணத்துவத்தை விளங்கப்படுத்துவதற்கும், தொடர்பாடல்த் திறனை வெளிக்காட்டுவதற்கும் இது உதவிபுரியும்..





துறையூரான்
எம்.சிவானந்தன்

# சாதி இரண்டொழிய...



ஆலயமணி பெருஞ்சத்தமாக ஒலிக்கத் தொடங்கியது. கூடியிருந்த சிறு கூட்டத்தினருக்கு உடல் சிலிர்த்தது. புத்துணர்வு உடல் முழுவதும் பரவுவது போன்றதொரு பூரிப்பு. இரு கைகளையும் இணைத்துத் தலைக்குமேல் தூக்கியும் நெஞ்சருகே இறக்கியும் விழுந்தும் எழுந்தும் வணங்கினார்கள். முணுமுணுப்பாகத் தமக்குப் பிடித்த எல்லாத் தெய்வங்களின் பெயர்களையும் உச்சரித்தார்கள். ஒரு பெரியவர் சத்தமாக "அம்மாளாட்சி..." என்று தொடங்கி படிப்படியாக சத்தத்தைக் குறைத்து "தாயே..." என்று முடித்தார். தொடக்கத்திற்கும் முடிவுக்கும் இடையே பலமுறை, கூப்பிய கைகள் மேலும் கீழுமாக சென்று வருவதையும் இடைக்கிடை அவர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்து எழுவதையும் இறை நாமங்களை உச்சரிப்பதையும் அவருக்கு முன்னால் நின்றிருந்த சிறுவன் பக்கவாட்டாக திரும்பி நின்று ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அவரது அசைவுகளுக்கேற்றபடி அவனது கண்களும் அசைவுகளைக் காட்டின.

கருவறையில் பூசை நடந்து கொண்டிருந்தது. உலோகங்களுக்குத் தகுந்தவாறு பலவித ஒலிக்கோலங்களுடன் சங்கின் ஓசையும் சேர்ந்து பெரும் இரைச்சலாகியிருந்தது. மந்திர உச்சரிப்புக்கள் எதுவுமின்றி, கையில் மணியின்றி இரு கைகளாலும் பஞ்சமுக தீபத்தையேந்திய வண்ணம், வாய்மூடி மௌனியாக, மூலத்தான திருவுருவத்திற்கு தீபாராதனை செய்து கொண்டிருந்தார் சங்கரலிங்கம்.

சங்கரலிங்கம் கோயிலில் பூசை செய்யும் பொறுப்பை ஏற்று ஏறக்குறைய மூன்று வருடங்களாகி விட்டன. ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட இந்தக் கோயிலில் மிக நீண்ட காலமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குருக்கள் ஒருவர் குடும்பத்துடன் கோயில் இல்லத்தில் தங்கியிருந்து மூன்று வேளைப் பூசைகளை முறையாக நடாத்தி வந்திருந்தார். இன்று ஆலயப் பரிபாலன சபையில் அங்கத்துவம் வகிப்போரில் பெரும்பாலானோரின் பெற்றோர்களுக்குத் திருமணச் சடங்குகளை நடாத்தி வைத்தவரும் அவரே. என்றாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் இப் பகுதி மக்களுள் அநேகர் இடம் பெயர்ந்து தமிழ்நாட்டிற்குச் செல்ல, இவர் தனது சொந்த ஊருக்கு குடும்பத்துடன் சென்றுவிட்டார். நித்திய கருமங்கள் நின்று போயிற்று

நிலைமை சற்று சீராக, பக்கத்து ஊர்களுக்கு இடம் பெயர்ந்திருந்தவர்கள் திரும்பி வரத் தொடங்கினர். ஆலயத்தில் கருவறை வரை கதவுகள் திறந்தே கிடந்தன. துப்பாக்கிக் குண்டுகள் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக சில இடங்களில் ஓட்டைகள் விழுந்தும் ஓடுகள் சிதறியும் காணப்பட்டன. சில விக்கிரகங்களும் சேதமடைந்து காணப்பட்டன. என்றாலும் ஆலயத்தைப் பாதுகாத்து பராமரிக்கக்கூடிய சூழ்நிலையில்லை. குருக்களும் திரும்பிவரும் சாத்தியமில்லை. ஓரிரு வருடங்கள் இப்படியே கழிந்த பிறகு, தமிழ்நாட்டிலிருந்து ஒவ்வொரு குடும்பங்களாக வர ஆரம்பித்தன. இவ்வாறு திரும்பி வந்தவர்களுள் ஒருவர்தான் சங்கரலிங்கம்.

இடம் பெயர்ந்து செல்லுமுன் இங்கே தேநீர் கடை வைத்து வியாபாரம் செய்தவர். சொற்ப வருமானந்தான் என்றாலும் இரண்டு பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தைச் சமாளிக்கப் போதுமானதாக இருந்தது. தமிழ்நாட்டில் கிடைத்த அகதிப் பணம் அங்கே பிறந்துவிட்ட மேலும் இரு பிள்ளைகளோடுசேர்த்து ஆறுபேர்கொண்ட குடும்பத்திற்குப் போதுமானதாக இருக்கவில்லை. கூலி வேலைக்குப் போய்ப் பார்த்தார். மிகவும் கடினமான வேலைகள். கூலியாகக் கிடைக்கும் பணம் மருந்துகளுக்குச் செலவிடவே சரியாக இருந்தது. யோசித்துப் பார்த்தவர் "செத்தாலும் இலங்கையில் சாகலாம்" என முடிவெடுத்து, பதிந்து வந்து விட்டார். வந்த சில நாட்களுக்கு உள்ளேயே கோயிலுக்குச் சென்று முன்புறத்தைத் துப்புரவு செய்து கற்பூரம் கொளுத்தினார். தினமும் மாலை நேரங்களில் கற்பூரம் கொளுத்துவதும் எண்ணெய் விளக்கேற்றும் அவரின் வழக்கமாகி விட்டது. கருவறைக்குள் செல்வதில்லை.

பூசை முடிந்ததும் அடியவர்கள் அஞ்சோ, பத்தோ காணிக்கையாக வைத்து அர்ச்சனை செய்து கொள்வார்கள். சிலர் அம்பாளின் அடியில் வைத்துப் பூசை செய்த நூல் கயிற்றைக் கட்டிக் கொள்வார்கள்.

இருந்தவர்களும் வந்தவர்களுமாகக் கூடிக் கதைத்தார்கள்.

"கோயில இப்பிடியே விட்டுக் கிடக்குறது சரியில்ல... என்னன்டாலும்... கெஞ்சி பூச செய்யப் பண்ணிடனும்.."

"அதெப்புடி, ஐயர் இல்லாம... என்னன்டு செய்றது?"

"நம்ம ஐயரும் இப்போதைக்கு வர மாட்டன்னு சொல்லிவிட்டுட்டாரு"

"மன்னார்ல பெரிய ஐயாட்ட கேட்டுப் பாப்பமே... என்னன்டாலும் ஏற்பாடு பண்ணித் தருவாரு..."

கூட்டத்தில் முடிவெடுத்து மன்னார் சென்று கதைத்தார்கள். இப்போதைக்குச் சாத்தியமில்லை என்பதாகப் பதில் கிடைத்தது. சில நாட்கள் கழித்து மறுபடி கூட்டம் கூடியது.

"கோயிலைக் கழுவிக் கொஞ்ச நாளைக்கு நாமளே பூச செய்ய வேண்டியதுதான். சனங்க கும்பிடுறதுக்கு ஏலாம இருக்கிறாங்க..."

"நாமளே பூச செய்றதா...? அது குத்தமில்லயா...?

"கொஞ்ச நாளைக்குத்தானே... ஐயரு கிடைச்சதும் பரிகாரஞ் செஞ்சிடலாம்..."

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுள் ஒரு இளைஞன் பக்கத்திலிருந்த நண்பனிடம் முணுமுணுப்பாகக் கூறினான்,

"நாம பூச செய்றது குத்தம்னா... அதுக்குப் பரிகாரஞ் செய்யனும்னா பூச செய்யாம இருக்கிறதுதானே நல்லது.

"நீ வேற... சும்மா இருப்பியா... பெரிசுக ஏதாச்சுங் கதைச்சு முடிவெடுக்கிறது குழப்பம்..."

கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. சங்கரலிங்கத்தைக் கொண்டு தற்காலிகமாக வெள்ளிக் கிழமைகளிலும் விசேட தினங்களிலும் ஒருவேளை மட்டும் பூசை செய்வது என்பதாகவும், பூசைக்கு வேண்டிய பொருட்கள் மற்றும் தட்சிணை என்பன அடியார்களின் பொறுப்பு என்றும் முடிவு செய்யப்பட்டது. சங்கரலிங்கமும் ஏற்றுக் கொண்டார். அன்று தொடங்கியது இன்னும் தொடர்கிறது.

காலங்காலமாகப் பார்த்துப் பழகிய விடயமல்லவா... நன்றாகக் கழுவித் தூய்மை செய்து, பட்டுடுத்தி அலங்காரஞ் செய்துவிட்டு கருவறையைவிட்டு இறங்கி வந்துநின்று அம்மனைப் பார்ப்பார் சங்கரலிங்கம். புன்னகை பூத்த முகத்துடன் அம்பாள் அவரையே பார்ப்பது போல இருக்கும். திருப்தியடைந்தவராக பரபரவென்று காரியத்தில் இறங்குவார்.

உரியபடி பூசை நடக்கும். முதலில் விநாயகருக்கு என்று தொடங்கி கருவறைக்குச் சென்று திரைசாத்தி, திரைவிலக்கி, முருகப்பெருமான், பரிவார தெய்வங்கள்... வைரவர் என ஒரு ஒழுங்கில் செய்து முடிக்கப்படும். உரிய வேளையில் தமிழ் வேதமான திருமுறைகளும் ஓதப்படும். பூசை முடிந்ததும் அடியார்களுக்கு பிரசாதங்களும் வழங்கப்படும். சங்கரலிங்கத்துக்கு சமஸ்கிருத மந்திரங்கள் தெரியாது என்பதுதான் குறையாக இருந்தது.

பூசை முடிந்ததும் அடியவர்கள் அஞ்சோ, பத்தோ காணிக்கையாக வைத்து அர்ச்சனை செய்து கொள்வார்கள். சிலர் அம்பாளின் அடியில் வைத்துப் பூசை செய்த நூல் கயிற்றைக் கட்டிக் கொள்வார்கள். பல முப்படை சீருடைக்காரர்களுமே வரிசையாக நின்று சங்கரலிங்கத்தின் கையால் நூலைக் கட்டிக் கொள்ளும்போது சில தமிழ் பற்றாளர்களுக்கு தற்காலிக ஆறுதலாயிருக்கும். தமிழனுக்கு இந்த வகையிலாவது



ஒரு மரியாதை கிடைக்கிறதே என்று.

வெள்ளிக்கிழமைகளிலும் நவராத்திரி, திருவெம்பாவைத் தினங்களிலும் பொங்கல் மற்றும் சித்திரைப் பிறப்பு, தீபாவளி போன்ற விசேட நாட்களிலும் பூசைப் பொருட்களை வாங்கித் தருதல், பொங்கல் வைத்து அடியவர்களுக்கு வழங்குதல் என்பன பூசையைப் பொறுப்பெடுக்கும் உபயகாரர்களின் பொறுப்பு. சங்கரலிங்கத்துக்கான தட்சிணையாக ஒரு சிறிய தொகையை வெற்றிலையில் வைத்துக் கொடுத்துவிடுவார்கள். தான் பக்தர்களின் பிரதிநிதியாக இருந்து இறைவனிடம் அருள் வேண்டிக் கொடுத்தவகையில் எல்லோரும் நல்லவிதமாகவே இருக்கிறார்கள் என்ற திருப்தியும் சங்கரலிங்கத்துக்கு உற்சாகத்தைக் கொடுத்தது.

ஆனாலும் இப்போதெல்லாம் பெரும் அழுத்தங்களுக்கு மத்தியில் தான் தனது பணியைத் தொடர வேண்டியிருந்தது. இந்த மூன்று வருடங்களில் முதல் இரண்டு வருடங்கள் சுமுகமாக ஓடியது. இடையிடையே "ஐயர்" கொண்டு வருவது பற்றிய முயற்சிகளெடுக்கப் பட்டாலும் கைகூடவில்லை. கடந்த ஒருவருட காலமாக சங்கரலிங்கத்துக்குச் சோதனைக் காலமாகவே இருக்கிறது. புதிதாக தமிழ்நாட்டிலிருந்து திரும்பி வரத் தொடங்கிய சிலர் சங்கரலிங்கம் பூசை செய்வது பற்றி அடிக்கடி சர்ச்சை எழுப்பினார்கள்.

" என்னப்பா இது அவமானமா இருக்கு... கடக்கரையிலயுங் கள்ளுக் கடையிலயுந் திரியிறான்... கவிச்சு வாசத்தோட... வெள்ளிக்கிழமையில மட்டும் ஐயராகிருவானாமா... மத்தச் சமயத்து ஆக்க கேலி பண்றாங்கப்பாஞ்.." என்று வெள்ளிக் கிழமை பூசை தொடங்குவதற்கு முன் கோயில் தலைவரைப் பார்த்து வெள்ளையும் சொள்ளையுமாக வந்திருந்த செல்வந்தப் புள்ளி ஒருவர் கேட்க,

"என்னப்பா செய்றது... எங்களுக்கு மட்டும் ஆசையாவா இருக்கு அவன வைச்சுப் பூச செய்யிறது... ஐயரு யாரும் கிடைக்க மாட்டங்கிறாங்களே... யாரோ ஒருத்தரு வவுனியாவுல இருக்கிறாராம்... போயித்தான் கதைக்கணுமாம்... தாழ்வுபாட்டுக் கடலாலபோட்டேறி கல்பிட்டிக்குப் போய்த்தான் வவுனியா வரணும்... எப்புடியும் ஒரு கிழம ஆயிரும்... இருக்கிற வேலையினை விட்டுட்டு யாரு அலையிறது...

"நீங்க எதுக்கு அலையனும்..? செலவு காசாக் குடுத்தாப் போய்ட்டு வர ஆளிருக்குஞ்." என்றவரைத் தலைவர் யாரு? எனக் கேட்பது போலப் பார்க்க...

"புதுசா இங்க அரசாங்க வேலையா வந்திருக்காரே... அவரை போய்ப் பாத்துப் பேசிட்டு, முடிஞ்சாக் கூட்டிட்டு வாராறாம்... செலவு காசத் தரட்டாம்..."

கூட்டங்கூடி முடிவெடுத்து ஊர்ப் பணத்தில் ஒரு தொகையைக் கொடுத்து அனுப்பினார்கள். ஆள் வரவில்லை. பணம் மட்டும் செலவானது.

சங்கரலிங்கம் பூசை செய்வது குறித்து பெரும்பாலனவர்கள் அலட்டிக் கொள்ளவில்லை.

"பூச செய்கின்ற நாளில் மச்சம் மாமிசம் சாப்பிடாம, விரதமிருந்து ஒழுக்கமாத்தானே செய்றான்... வெள்ளிக் கிழமையில குடுக்கிற முந்நூறு ரூவாக் காச வச்சிக்கிட்டு வாரம் முழுக்க குடும்பத்த நடத்த முடியுமா..? வேல வெட்டிக்கு போகத்தானே வேணும்.."

"வவுனியா ஐயரு பன்னெண்டாயிரம் கேட்டாராம்... அதுவும் மன்னார்ல இருந்து காலையில பஸ்ல வந்துட்டு அவசரமாப் பூசயச் செஞ்சிட்டு அந்த பஸ்லயே போயிருவாராம்..."

"அந்தக் காச சங்கரலிங்கத்துக்குக் குடுத்தா மனுசன் ஆறுதலா, பாடிப்பாடி பலவிதமாப் பொங்கிப் போட்டுப் பூச செய்வானே... ஆனா இவனுகதாங் கவுரவக் கொறச்சல்னு சொல்லித் திரிவானுக.."

"நமக்காக கடவுள்டக் கேட்டு நம்ம ஆளு பூச செஞ்சா ஆகாதாமே..."

"நம்ம ஆளுக பூச செய்றத சாத்திரம் ஒத்துக்காதாமே..."

"அப்ப சங்கரலிங்கத்கதோட பூசய சாமி ஏத்துக்காதுன்னு சொல்றியா..?"

"அப்பிடி இல்ல... ஆனா..."

"ஆனா என்ன..? எந்த ஆளு பூச செஞ்சாலும் நம்ம ஒழைப்புலதான காசு குடுக்கணும்"

இதோ மூன்றாவது வருடமும் ஓடிக் கொண்டிருக்கிறது. நாட்டு நிலை முன்னரிலும் சீராகிவிட்டது. இன்னும் அதிகம்பேர் ஊருக்குத் திரும்பியிருந்தார்கள். முழு வீச்சில் கோவிலுக்கு பூசகர் தேடும் பணி முடுக்கிவிடப்பட்டதில் மட்டக் களப்பில் இருந்து மாதம் பதினைந்தாயிரம் ரூபாய் ஒப்பந்தத்தில் ஒரு குடும்பம் கொண்டுவரப்பட்டது.

ஒன்றுக்கு மேற்பட்ட குருவானவர்களைக் கொண்டு, சங்கரலிங்கத்தினதும் அதற்குமுன் முகந்தெரியாத எவரினதும் கால்பட்டதால் ஏற்பட்டிருந்த அசுத்தம் (தீட்டு) களைவதற்கு பொதுப் பணத்தில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யப்பட்டு சடங்குகள் நடாத்தப்பட்டன. ஆகம முறையிலான பூசைகள் ஆரம்பமாகின.

இன்ன இன்ன சடங்குகளுக்கு இவ்வளவு இவ்வளவு தொகை என நிருணயம் செய்யப்பட்டது. பொதுப்படையாக நடக்கும் பூசையில் எவரும் கலந்து கொள்ளலாம் என்றாலும் குறிப்பிட்ட சடங்கில் கலந்து கொள்வதற்கு ஆண்டவருக்கும் அடியவர்க்கும் இடையில் பணமும் பாலமாக இருக்கத் தொடங்கியது.

பிராயச்சித்த சடங்குகள் நடந்தது முதல் சங்கரலிங்கம் கோயிலுக்குச் செல்வதில்லை. கூடியிருப்பவர்கள்


**பிள்ளைகளின் படிப்புகளை பாதியிலேயே நிறுத்திவிட்டு, படகிலேறி பழைய இடத்திற்கே போய்க்கொண்டிருந்த சங்கரலிங்கம், தமிழ் நாட்டின் கரையைக் காட்டும் வெளிச்சம் தெரிகிறதா எனப் பார்த்தவண்ணம் இருந்தது அவரது கண்கள்.**

பார்வைகள் அவரை ஏளனமாகப் பார்ப்பதாக இருக்கும். தன்னால் பூசை முடியும் வரை அதைத் தாங்கிக் கொண்டு நிற்க முடியாது என அவர் நினைத்ததே அதற்குக் காரணம். ஒரு தடவைகூட தனது பூசையை அம்மாளாட்சி நிராகரித்ததில்லையே.. அதற்கான அறிகுறிகள் எதனையுங்கூட காட்டியதில்லையே... அப்படி இருக்கும்போது எப்படித் தனது கால்பட்ட இடம் தீட்டு ஆகும்..? யாருக்கு நான் தீட்டு..? சாமிக்கா..? சாமியின் பெயரால் சாத்திரங்களை உருவாக்கிய ஆசாமிகளுக்கா..?

தன்னைப் பூசை செய்வதில் இருந்து நிறுத்தியதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை சங்கரலிங்கத்துக்கு... தான் செய்த பூசைகள் செல்லுபடியற்றது என்பதை நினைக்கத்தான் கவலையாக இருந்தது. இந்த மூன்று வருடங்களும் தன்னை ஒறுத்து, மாமிசம் தவிர்த்து, மாசற நின்றொழுகி உண்மையான பக்தி நெறிப்பட்டு தான் செய்த கிரியைகள் தீட்டுச் சடங்குகளாகி விட்டனவே என நினைக்கும்போதுதான் ஆற்ற முடிவதில்லை.

இங்கே இருக்கவே அவருக்குப் பிடிக்கவில்லை. பிள்ளைகளின் படிப்புகளைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டு மீண்டும் புறப்பட்டு படகு மூலம் தமிழ்நாட்டு அகதிமுகாம் நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்.

பத்து நாட்கள் திருவிழாவுக்காக நாள் குறிக்கப்பட்டது. பணம் இருப்பவர்கள் போட்டி போட்டு



திருவிழாக்களைச் செய்தார்கள். பகட்டாக அலங்கரித்தார்கள். மாலை, மரியாதை கௌரவம் பெற்றார்கள். அம்மனைத் தூக்கி உலா வந்தார்கள்... அன்னதான நிகழ்விலும் கட்டளைகள் போட்டார்கள். வசூல் செய்தார்கள்... வாரி இறைத்தார்கள். உள்ளூரில் பணம் இல்லாதவர்கள் ஒதுங்கி நிற்க, அயலூரின் பணக்காரர்கள் அழைத்து வரப்பட்டார்கள்.

பத்தாம் நாள். திருவிழாப் பூசைகளின் நிறைவுநாள். இரவு அம்பாள் ஊர்வலம் ஆரம்பமாகியது. வீடுகள் தோறுங் கும்பம் வைத்து, பொங்கல் படைத்துக் காத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டுக்கு முன்பும் அம்பாள் நிறுத்தப்பட்டு, அடியவர்க்கு அருள் வழங்கினார். ஏராளமான பிரசாதப் பொருட்கள் வண்டியில் குவியத் தொடங்கின. அர்ச்சனைக்கான தட்சிணைகளும் நிறைந்தன. கோவில் நிருவாகத் தலைவரும் அரும்பாடுபட்டு குருக்களைக் கோயிலுக்கு அழைத்துவந்தவரும் ஆனந்தக் களிப்பில் அரோகரா... அரோகரா... என்று ஊர்வல வண்டி நிறுத்தப்படும்போதும் புறப்படும்போதும் உரத்த சத்த மெழுப்பி தங்களின் தலைமைப் பதவியை நிரூபித்துக் கொண்டிருந்தார்கள். தனியாக ஜெனரேட்டர் வைத்துப் போடப்பட்ட மின் விளக்குகளின் ஒளி கடற்கரைவரை பிரகாசமாகத் தெரிந்தது.

சங்கரலிங்கத்தின் வீடு பூட்டியிருந்தது. பிள்ளைகளின் படிப்புகளை பாதியிலேயே நிறுத்திவிட்டு, படகிலேறி பழைய இடத்திற்கே போய்க்கொண்டிருந்தது அக் குடும்பம். தமிழ் நாட்டின் கரையைக் காட்டும் வெளிச்சம் தெரிகிறதா எனப் பார்த்தவண்ணம் இருந்தது. சங்கரலிங்கத்தின் கண்கள்.

அரோகராச் சத்தங்களுக்கு மத்தயில், எப்போதும் போல அடியவர்களைப் பார்த்து புன்னகைத்துக் கொண்டிருந்தார் அம்பாள்.




# மகாகவி பாரதியாரின் நினைவு தினம் அனுஸ்டிப்பு

மகாகவி பாரதியாரின் நினைவு தினம் 11.09.2015 அன்று காலை 8.30 மணிக்கு குருமன்காடு சந்தியில் அமைந்துள்ள பாரதியார் சிலையடியில் தமிழ் மணி அகளங்கன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ் மணி அகளங்கனின் ''செந்தமிழும் நாப்பழக்கம்" எனும் நூலும் வெளியிடப்பட்டது. பாரதியின் பெருமைகளை பறை சாற்றும் கவிதையினை குரும்பையூர் ஐங்கரன் வழங்கியிருந்தார்.

அத்துடன் இவ் நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினருமான திரு ஜி.ரி.லிங்கநாதன், முன்னாள் உப நகரபிதா திரு க,சந்திரகுலசிங்கம் (மோகன்) முன்னாள் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், வவுனியா சமூக சேவை உத்தியோகத்தர் திரு எஸ்.எஸ்.வாசன், தமிழ் விருட்சம் அமைப்பின் செயலாளர் மாணிக்கம் ஜெகன்,போசகர் ரோய் ஜெயக்குமார் ஆகியோருடன் சமூக ஆர்வலர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.





## பிழைக்கத் தெரிந்த யாமி

யாமி கவுதம் பிழைக்கத் தெரிந்த நடிகையாக இருப்பார் போலிருக்கிறதே. பிறகென்ன, செலவு வைக்காமல் சொந்த காரியம் பார்க்கும் சூட்சுமம் கற்றவராக உள்ளாரே!. தமிழில் கவுரவம் படத்தில் நடித்தவர் யாமி. தற்பொழுது இந்தியில் 'சனம் ரே' படத்தில் நடிக்கிறார். இந்த படத்தில் சில காட்சிகள் லண்டனில் சூட் பண்ணப்படவுள்ளன. உடனே, லண்டனிலுள்ள தனது தோழிகளிற்கு போன் செய்து, உங்களையெல்லாம் பார்க்க வரப் போகிறேன் என கூறியுள்ளார். அதை பகிரங்கமாகவும் சொல்லியிருக்கிறார். சூட்டிங் முடிந்த அடுத்த விநாடியே தோழிகளிடம் பறந்து விடுவேன் என்றும், அவர்களுடன் ஜாலியாக ஊர்சுற்றப் போகிறேன் என்றும் கூறியுள்ளார். என்னவோ யாமியை பத்திரமாக கொண்டு வந்திடுங்கப்பா..



## முத்தத்திற்கு எதற்கு 38 டேக்?

ஜீ.வி.பிரகாஷ் நடித்த 'திரிஷா இல்லனா நயன்தாரா' படத்தின் முத்தக்காட்சிதான் சர்ச்சையை கிளப்பியுள்ளது. முத்தக்காட்சியொன்றும் சர்ச்சையை கிளப்பவில்லை. வெளியில் இருப்பவர்கள்தான் அதை சர்ச்சையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாயகன் ஜீ.வியும் நாயகி மனிஷாயாதவும் உதட்டு முத்தம் கொடுக்கும் காட்சி படத்தில் உள்ளது. இந்த காட்சியை படமாக்க 38 டேக் எடுத்ததாக வெளியில் கதை பரவிக் கொண்டிருக்கிறது. இதுபற்றி ஜீ.வியிடம் கேட்டால் எரிந்து விழுகிறார். 38 முறை டேக் ஆனதாக சும்மா வதந்தியை கிளப்புகிறார்கள். முத்தத்திற்கு எதற்கு 38 டேக்? வெறும் 5 டேக்கில் காரியத்தை முடித்து விட்டோம் என்கிறார்.



## வேதிகாவின் வேதம்

தமிழில் காவியத்தலைவன், பரதேசி படங்களில் நடித்த வேதிகாவை அதன் பின்னர் காணவே முடியவில்லை. தற்பொழுது அறிமுக இயக்குனர், அறிமுக நடிகர் கூட்டணியில் தயாராகும் வினோதன் படத்தில் ஒப்பந்தமாகி நடித்து வருகிறார். தமிழில் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லையா எனக் கேட்டால் மூக்குநுனி சிவக்க கோபப்படுகிறார். 'நான் நல்லகதைகளிற்காக காத்திருக்கிறேன். அதனால்த்தான் இந்த இடைவெளி. கூப்பிடுகிறார்கள் என்பதற்காக எல்லாப்படங்களிலும் நடிக்க முடியுமா?' என கேட்டார்.



## நடிகைகளின் நச்சரிப்பு

விமலிற்கு சமீபகாலமாக படங்கள் இல்லை. சும்மா வீட்டிலிருந்தவரிற்கு பூபதிபாண்டியனின் படமொன்று அமைந்தது. நகைச்சுவை படமாம். விமலும் ஓகே சொல்லிவிட்டார். நடிக, நடிகையர் தேர்வு நடந்து வருகிறது. விமலிற்கு படம் அமைந்த செய்தி எட்டியதும் இரண்டு நடிகைகள் கோதாவில் குதித்து விட்டனர். அஞ்சலி, ஓவியாதான் இருவரும். இருவரும் ஏற்கனவே விமலுடன் நெருக்கமாக இருப்பதால், நேரடியாகவே நச்சரிக்கிறார்களாம். போதாதற்கு பூபதி பாண்டியனையும் சந்தித்து விண்ணப்பித்துள்ளனராம். படத்திற்கு ஒரு நாயகிதான் தேவை. இந்த இரண்டுபேரிடம் இருந்து எப்படி தப்பிப்பதென விமல் தலையை பிய்த்துக் கொண்டிருக்கிறாராம்.



## குத்தாட்டம் ஆட தமன்னாவுக்கு அழைப்பு

'பாகுபலி' ஹிட்டுக்கு பிறகு பட வாய்ப்புகள் குவியும் என்று எதிர்பார்த்தார் தமன்னா. ஏற்கனவே ஒப்பந்தம் ஆன 3 படங்கள் மட்டுமே கைவசம் உள்ளது. இதில் 2 தெலுங்கு படங்களும் கார்த்தியுடன் ஜோடியாக நடிக்கும் தமிழ் படம் ஒன்றும் அடங்கும். இந்நிலையில் ஜூனியர் என்டிஆர் நடிக்கும் புதிய படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் ஆட கேட்டு தமன்னாவை அணுகி இருக்கிறார் இயக்குனர் சுகுமார். ஏற்கனவே தெலுங்கில் 'அல்லுடு சீனு' படத்தில் ஒரு பாடலுக்கு தமன்னா குத்தாட்டம் ஆடி இருந்தார். அப்பாடல் ஹிட் ஆனபோதும் தமன்னாவுக்கு பெரிய அளவில் பெயர் கிடைக்கவில்லை.
புதிய குத்து பாடலுக்கு தேவி பிரசாத் இசை அமைக்கிறார். முதலில் இப்பாடலுக்கு ஆட ராசி கண்ணாவிடம் கேட்கப்பட்டது. தற்போது அந்த வாய்ப்பு தமன்னாவுக்கு சென்றிருக்கிறது. ஹீரோவும், இசை அமைப்பாளரும் இமேஜ் உள்ளவர்கள் என்பதால் தமன்னாவும் குத்துபாடலுக்கு சம்மதிப்பார் என்று அவரது தரப்பு கூறுகிறது.

# டூரிங் டாக்கீஸ்



## காஜலுக்கு கிடைக்காத காதலன்

'கடந்த ஒன்பது வருடங்களாக திரையுலகில் இருக்கிறேன். நிறைய நாயகர்களுடன் காதல் செய்வதாக நடித்துமுள்ளேன். ஆனால் நிஜயத்தில் யாரையும் நான் லவ் பண்ணலப்பா' என்கிறார் காஜல்.
'எனக்கு இதுவரை காதல் அமையவில்லை. ஆனால் என் தங்கை நிஷா காதலித்து கல்யாணம் செய்து விட்டார். தங்கையின் காதலன் நல்லவரா என நிறைய சோதனை வைத்து தெரிந்தபின்னர்தான் அவர்களின் திருமணத்தை நடத்தி முடித்தேன். அவர் மிக நல்லவர். தங்கைக்கு திருமணம் நடந்தால், அக்காவும் திருமணம் முடிக்க வேண்டுமென்பது பழைய சிந்தனை. நேரம் வரும்போது என் திருமணம் நடக்கும்' என்றார்.



## ஸ்ருதியின் ஹட்ரிக்

ஸ்ருதி ஹாசன் மிக சந்தோசத்தில் உள்ளார். சத்தமில்லாமல் 100 கோடி கிளப்பில் சேர்ந்த சந்தோச ரேகைகள் முகத்தில் மின்னுகின்றன.
இந்திய சினிமாவில் திரைப்படமொன்று 100 கோடியை அள்ளினால் அதன் பெருமைகள் இயக்குனரையும், நாயகனையும் மட்டுமே சேர்வது வழக்கம். இடையில் வந்து கவர்ச்சி காட்டிவிட்டு செல்வதற்கு மட்டுமே நாயகிகளை வைத்திருப்பதால் இந்த நிலை. இப்படியான சூழலில், ஸ்ருதி நடித்த மூன்று படங்கள் இந்த வருடத்தில் 100 கோடியை வசூலித்துள்ளன. அக்ஷய்குமாருடன் நடித்த 'சுப்பர் இஸ் பக்', மகேஷ் பாபுவுடன் நடித்த 'ஸ்ரீமந்துடு', ஜான் ஆபிரகாமுடன் நடித்த 'வெல்கம் பக்' என்பனவே வசூலை அள்ளியுள்ளன. 100 கோடி வசூலில் ஹட்ரிக் அடித்த சந்தோசம் ஸ்ருதியில் தெரிகிறது.

# கிளித்தட்டு

செ.கார்த்திகா
sukuna.k@gmail.com

மறைந்துவிட்ட பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்களில் ஒன்றான "கொக்கான் வெட்டுதல்" விளையாட்டுப் பற்றி கடந்த வாரம் "தீபம்" பத்திரிகையில் வெளிவந்தது. அதன் தொடர்ச்சியாகவே "கிளித்தட்டு" பற்றி இந்த வாரம் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இன்று பலர் உடற்பருமனைக் குறைக்க சாப்பிடாமல் பட்டினி கிடப்பது, ஜிம்முக்கு செல்லுதல் என பாடாய்படுகின்றனர். ஜிம்முக்கு செல்ல பணத்தை வீண் செலவு செய்யாமல் கிளித்தட்டு விளையாடினால் உடல் பருமன் தானாக குறையும் என்கிறார்கள் எம் பாட்டன், பாட்டியர். ஓடியாடி, உடல் களைத்து விளையாடும் இந்த விளையாட்டு கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தான் பெரும்பாலும் சாத்தியம்.

எங்கள் மண்ணுக்கே சிறப்பான விளையாட்டுக்களில் ஒன்றான "கிளித்தட்டை" சிறுவர் முதல் பெரியோர் வரை வயது, பால் வேறுபாடின்றி எல்லோருமே விளையாடி மகிழலாம். சில கிராமங்களில் இதனை "யாட் "அல்லது 'தாச்சி ' என்றும் அழைப்பார்கள்.

பண்டைய காலத்தில் கிராமத்துப்பிள்ளைகளுக்குப் பிடித்தமான ஒன்றாக இருந்துவந்த இந்த விளையாட்டு இன்று பலருக்கும் தெரியாததென்பது ஆச்சரியம் தான். கிளித்தட்டு விவசாயிகளின் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற ஒன்றாகும். நெல் விதைத்த காலங்களில் வயலில் நெல் மணிகளைப் பொறுக்க வரும் கிளிகளை, கமக்காரன் வரம்புகளில் ஓடிக் கலைத்து வயலைக் காப்பதையே இந்த விளையாட்டுக் காட்டி நிற்கிறது. காப்பவர் கமக்காரனாகவும், புகுவோர் கிளிகளாகவும் தட்டுக்கள் (பெட்டிகள்) வயல் நிலங்களாகவும், கோடுகள் வரம்புகளாகவும் பாவனை செய்யப்படுகின்றது.

> **கிளியாக வழிமறிப்பவர்கள் எதிரணியினருக்கு அடித்துவிட்டதாக அடிக்கடி கூறுவார் அடிக்காமலே இவ்வாறு அவர் சொல்லவும் கூடும் இதை "அழாப்பல்" என்று கூறுவர்.**

நமது கலாசாரத்தோடு கூடிய இவ் விளையாட்டு செலவுச் சிக்கனமானதும், விளையாடுபவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தையும், ஆர்வத்தையும் கொடுக்ககக் கூடியதாகவும் உள்ளது .

## எப்படி விளையாடுவது?

கிளித்தட்டு வரைமுறைகள் அற்ற சாதாரண விளையாட்டல்ல. இதை விளையாடுவதற்கு பல நெறிமுறைகள் இருக்கின்றன. கிராமிய மட்டங்களில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டிகளிலும் கிராமிய பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளிலும் இதனைக் காணலாம். வீடுகளில் இதனை விளையாட வேண்டுமாயின் நிச்சயம் விசாலமான முற்றம் இருக்கவேண்டும்.

இதற்காக தெரிவு செய்யப்படும் இடம் புல், பூண்டற்ற துப்பரவானதாக இருக்க வேண்டும். விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கைகேற்ப இரு பகுதிகளாகப் (கொலம்களாக) பெட்டிகள் பிரிக்கப்படும். ஆகக் குறைந்து 6 பெட்டிகளாவது இருக்க வேண்டும்.

விளையாடும் வீரர்கள் இரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடுவார். குறைந்தது ஒரு அணியில் 5 பேர் வரையிலாவது இருக்க வேண்டும் "பூவா", "தலையா" போட்டுப்பார்த்த பின்னர் இரண்டு அணிகளில் எந்த அணி முதலில் களமிறங்குவது என்பது தீர்மானிக்கப்படும்

முதலில் மறிக்கத் தெரிவாகும் அணியின் தலைவர் "கிளி" ஆவார். இவர் நெடுங்கோட்டு வழியாக மட்டும் விழிமறிப்பார் மேலும் தனது கைக்கு எட்டும் தூரத்திலுள்ள எதிரணியினரை அடிக்கவும் முடியும் .கிளியிடம் அடி வாங்கியவர் ஆட்டத்திலிருந்து விலகிவிட வேண்டும்.

குறுக்குக் கோடுகளிலுள்ளவர்கள் எதிரணியினர் பெட்டிக்குப் பெட்டி தாவுவதை மறிப்பார். பக்கத்து பக்கத்து பெட்டிகளுக்குள் மாறி மாறி செல்வதன் மூலம் இவர்களைத் திசைதிருப்பி முன்னேற முடியும் "காத்தலும், புகுதலும் " என இரு அணியினரும் மும்மரமாக விளையாடி ஒரு வழியாக முழுப்பெட்டியையும் தாண்டி களமிறங்கியவர்கள் வெளியே வருவார்கள்.

இத்தோடு முடிந்துவிடாது இனிமேல்தான் விளையாட்டே ஆரம்பமாகும். பெட்டிகளைத் தாண்டி வெளியே களமிறங்கியவர்கள் தொடர்ந்து எதிர்ப்பக்கமாக முன்னேறி மீண்டும் ஆரம்பித்த இடத்துக்கு செல்வதுதான் விளையாட்டின் விறுவிறுப்பான பகுதி. ஆரம்ப இடத்திலிருந்து உள்நுளைந்தவர்கள் "காய்" என்றும் எதிர்ப்பக்கம் சென்று மீண்டும் வெற்றிக்ககாக முன்னேறுவார்கள் "பழம்" என்றும் அழைக்கப்படுவர். இங்கு "காயும்" "பழமும்" ஒரே பெட்டிக்குள் சந்திக்க முடியாது இவ்வாறு சந்தித்தால் அந்த அணியே ஆட்டத்திலிருந்து நீக்கப்படும். இவ்விளையாட்டின் சுவாரஸ்யமும், ஆர்வமும் களமிறங்கியவர்கள் முன்னேறும் வேகத்தில்தான் தங்கியிருக்கும்.


இவர்கள் காலம் தாழ்த்திக் கொள்வதை கட்டுப்படுத்த நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பார். இவர் குறிப்பிட்ட நேரத்துக்குள் முன்னேறாத வீரர்களை ஆட்டத்திலிருந்து விலக்குவார்.

இவை தவிர, கிளியாக வழிமறிப்பவர்கள் எதிரணியினருக்கு அடித்துவிட்டதாக அடிக்கடி கூறுவார் அடிக்காமலே இவ்வாறு அவர் சொல்லவும் கூடும் இதை "அழாப்பல்" என்று கூறுவர். இதனையும் நடுவரே கண்காணித்து போட்டியை விறுவிறுப்பாக்குவார்.

இவ்வாறு மாறி மாறி இரு அணியினரும் விளையாடி தாம் எடுக்கும் வெற்றிகளின் எண்ணிக்கையில் அன்றைய போட்டியின் வெற்றியணி தீர்மானிக்கப்படும். சின்னச்சின்ன சண்டைகள் கோபங்களுடன் விளையாடும் போது போட்டியின் விறுவிறுப்புக்கு எல்லையேயிருக்காது. போட்டி முடிந்ததும் அனைவரும் சமாதானமாக வெளியேறும் போது இன்றைய கிரிக்கட் விளையாட்டை தொலைக்காட்சியில் பார்க்காமல் நேரடியாகப் பார்க்கிற மாதிரி இருக்கும் .

பாரம்பரிய விளையாட்டுக்களில் மிகவும் பிரபலமானதும், சுவாரஸ்யமானமான கிளித்தட்டை விளையாட விரும்புபவர்களுக்கு இந்த ஆக்கம் நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். மேலும், இந்த ஆக்கத்தை எழுத உதவிய ஜெயந்திக்கு நன்றிகள்.





விநாயகர் சதுர்த்திக்கு பிள்ளையாரை படுத்தியபாட்டை பாருங்கள்ஞ் உலகையே ஆட்டிப்படைக்கும் செல்பி மோகம் பிள்ளையாரையும் விட்டு வைக்கவில்லை. பிள்ளையார் செல்பி எடுக்கிறாராம். இந்தியாவில் சில குசும்பர்கள் செய்த காரியம்.




இறுதியுத்தத்தில் நடந்த மீறல்கள் தொடர்பில் இலங்கையின் உள்ளகவிசாரணையை ஆதரித்து பிரேரணை சமர்க்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்ததை கண்டித்து தமிழகத்தில் பரவலாக போராட்டங்கள் நடந்து வருகின்றது. அமெரிக்க நிறுவனமான கேஎவ்சி நிறுவனத்தின் எதிரில் நடக்கும் போராட்டம்.





# கடலட்டை பதப்படுத்தல்

வடபகுதி கடல் ஏற்றுமதிப் பொருட்களில் அதிகளவான அந்நியசெலாவனியை பெற்றுத் தருவது கடலட்டைதான். வடக்கு கரையோரங்களான பூநகரி, குருநகர், ஊர்காவற்றுறை, அல்லைப் பிட்டி மற்றும் தீவகக் கடற்பரப்புக்கள் உள்ளடங்கிய சிறு கடற் பரப்புக்களில் பிடிக்கப்படுகின்றது.

வருடத்தின் இரண்டு பருவகாலங்களில் பிடிக்கப்படுகின்றன. தை மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையிலான காலப்பகுதியும், ஐப்பசி தொடக்கம் மார்கழி மாதம் வரையிலான காலப்பகுதி ஆகிய இரு பருவகாலங்களில் பிடிக்கப்படுகின்றன.

மீனவர்கள் கடலில் சிறிது தூரம் படகில் சென்று, பின்னர் கடலிற்குள் குதித்து சுழியோடிச் சென்று பிடிக்கிறார்கள். கைகளாலேயே பிடிக்கிறார்கள். இது சற்று ஆபத்தான தொழில்தான். என்றாலும், அதற்கு நிகராக அதிக வருவாயையும் கொடுக்கிறது.

கடலட்டைகளில் பல வகைகள் உள்ளன. சாண்விச், டிஸ்கோ, பாகற்காய், நூல், நூல்நரி, நரி என ஏராளம் வகைகள். மேலே சொன்னவைதான் வடக்கில் பிடிக்கப்படுபவை.

பிடிக்கப்பட்ட கடலட்டைகள் அவற்றின் தரத்துக்கு விலை போகின்றன. சான்விச் கடலட்டைகள் 500 ரூபா முதல் 50 ரூபா வரையும் மற்ற இன கடலட்டைகள் 150 ரூபா முதல் 50 ரூபா வரையும் விலை போகின்றன. தரமான சான்விச் கடலட்டை 12 இஞ்சி அளவு நீளம் வளரக்கூடியது. மற்ற இன கடலட்டைகள் 8 தொடக்கம் 9 இஞ்சி அளவு நீளம் வளரக் கூடியது. இப்படியான அளவுகளில் வளந்திருக்கக்கூடிய கடலட்டைகளே தரமான கடலட்டைகளாக கருதப்படுகின்றன. இவற்றிற்குத்தான் கிராக்கி அதிகம்.

கடலட்டை பிடிப்பவர்களிடம் வாங்கி பதப்படுத்துபவர்களும் நிறையப்பேர் உள்ளனர். எனினும், யாழில் இதில் அதிகமாக ஈடுபடுவது சுகந்தா தனியார் நிறுவனம். குடலட்டைகளை கொள்வனவு செய்து பதப்படுத்தி ஏற்றுமதி செய்கிறார்கள்.

பதப்படுத்தலின் முதல் படிமுறையாக வாங்கிய கடலட்டைகளை பெரிய தாச்சிகளில் போட்டு அவிக்கின்றனர். பின்னர், கடலட்டைக்குள்ளிருக்கும் மண்ணையும், கல்சியத்தையும் நீக்கி துப்பரவு செய்கிறார்கள். கடலட்டைகள் மண்ணையே உணவாக கொள்வதால் இதனை செய்ய வேண்டியுள்ளது. சுத்தம் செய்வதற்கு தூரிகைகளை பயன்படுத்துகிறார்கள்.

சுத்தம் செய்து முடிந்ததும், கடலட்டைகளை மூன்று தடவைகள் சுடுநீரில் அவிக்கின்றனர். பின்னர் கடலட்டைகளை ஒரு வாரம் வரை வெய்யிலில் காயவிடுகின்றனர். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட கடலட்டைகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.

---

ரஜிந்தன்
rajinthan2011@gmail.com



# நீர்வேலி வாழைக்குலைச் சந்தை

பருத்தித்துறை வீதியூடாக யாழ்.நோக்கிச் செல்லும் வீதியில் நாற்சந்தியில் இருந்து நீர்வேலிப் பிள்ளையார் கோவிலைத் தாண்டி வருகையில் ஒரு கட்டடம். அதன் அருகில் ஒரு சிறிய பாதை. அப்பாதையூடாகச் சென்றால் வருகிறது நீர்வேலி வாழைக்குலைச் சந்தை.

நேரம் காலை ஆறு மணி. அமைதியாக இருந்த அந்த இடம் படிப்படியாக அதன் தன்மையை இழக்க ஆரம்பிக்கின்றது.

காகமும் குருவிகளும் கூச்சலிட்டு ஓய்ந்த அந்த நேரத்தில் மானிட ஒலி பரவ ஆரம்பிக்கின்றது. வாழைக் குலைகளோடுயாழ்ப்பாணத்தில்பல பாகங்களில் இருந்து வாகனங்கள் சந்தை நோக்கி நகர்கின்றன.

சந்தையின் மத்தியில் ஒரு பெரிய தராசு. அதன் அருகே ஒரு நபர் பாரிய கூரியதானதொரு கத்தியை ஏந்திய வண்ணம் நின்றார். அவருக்கு எதிரே ஒரு ஆசனம். அதிலே ஒருவர் சிரித்த முகத்துடன். மூர்த்தி அவர்தான் சந்தை முகாமையாளர்.

நெருங்கிச் சென்று அவருடன் சற்றுப் பேச்சுக்கொடுத்தேன்..

'இங்க சராசரி ஒரு நாளைக்கு 300 தொடக்கம் 350 வாழைக்குலைவரை வரும். நாங்கள் வாழைக் குலைகளை வேண்டி இப்ப வெளி மாவட்டங்களுக்குத்தான் அனுப்பிக் கொண்டு இருக்குறம் தம்புள்ள திருகோணமலை, மட்டக் களப்பு, வவுனியா, கிளிநெச்சி, கொழும்பு போன்ற இடங்களுக்கு இங்கிருந்து வாழைக்குலைகள் போகின்றன' என்றார் அவர்.

"நான் கடநத் மூன்று வருடங்களாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றேன். நான் யாழ்ப்பாணம் வரும்போது அங்கிருந்து இளனிக்குலை கொண்டு வாறனான். போகும் போது இங்க வந்து வாழைக் குலைகளை எடுத்துட்டு போறனான். அங்க யாழ்ப்பாணத்து பழம் எண்டா எல்லாரும் விரும்பி வேண்டுவினம் இதனால் நட்டம் என்பது இருவரைக்கும் வந்தது இல்லை" என்கிறார் அங்கு கொள்வனவில் ஈடுபட்ட நீர்கொழும்பைச் சேர்ந்த வியாபாரி ரத்துக்கமகே.

"நான் நீண்ட காலமாக இச்சந்தைலதான் வாழைக்குலைகளைக் கொண்டு வந்து விக்கிறனான். அக்க இங்க எண்டு கொண்டு அலைஞ்சு திரிஞ்சு விக்காமல் கட்டுப்படியான விலையில் உடனடியாக வித்து பணமாக்க ஏலும்" என்றார் நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த வாழைக்குலை விவசாயி.

வடக்கின் வாழைக்குலைகளின் சங்கமம் நீரிவேலிச் சந்தை என்றால் மிகையில்லை.







## மனைவியிடம் வீரத்தை காண்பித்தவர்

தனது மனைவியை நிர்வாணமாக்கி வீட்டைச் சுற்றி துரத்திதுரத்தி அடித்து உதைத்த கொடூர கணவனை பொலிசார் கைது செய்துள்ளனர். பாதுகையில் இந்த சம்பவம் நடந்துள்ளது. துரத்தி தாக்கிய பின்னர், அவரை பிடித்து நிர்வாணமாக கட்டிவைத்தும் தாக்கியுள்ளார். எப்படியோ வீட்டிலிருந்து தப்பிச் சென்ற சிறுமி, அவசர இலகத்தை தொடர்பு கொண்டு விடயத்தை கூறியதையடுத்து, பொலிசார் கணவனை கைது செய்துள்ளனர்.



## 'சிவாஜி' கணினி

முள்ளியவளையில் ஒரு கணினித்திருடன் வசமாக மாட்டிக் கொண்டுள்ளான். தம்பதியினர் அலுவலகம் சென்றதும், ஓடுபிரித்து நுழைந்து மடிக்கணினியை 'லபக்'கிக் கொண்டு சென்றுவிட்டான். ஆனால் அந்த கணினிக்கு பாஸ்வேர்ட் போடப்பட்டிருந்தது. சிவாஜிபடத்தில் பாஸ்வேர்ட் உடைக்க முயன்றபாணியில் பல முயற்சிகள் செய்திருக்கிறான். பலனில்லை. இறுதியில் கணினிக்கடைகளிற்கு சென்று, பாஸ்வேர்டை மறந்துவிட்டேன், எப்படி உடைப்பதென கேட்டுள்ளான். பிறகென்ன, விடயம் பொலிசாரின் காதிற்கு சென்று ஆளை வளைத்துப்பிடித்துள்ளனர்.



# கண் கருவளையம் மறைய

பெண்களுக்கு அழகே அவர்களுடைய கண்கள் தான். ஆனால், கண்ணில் தோன்றும் கருவளையம் அந்த கண்களின் அழகை குறைக்கிறதே என்பதுதான் பல பெண்களின் கவலை. கவலை வேண்டாம் கருவளையம் போக்க பல்வேறு இலகுவான வழிகள் உள்ளன.

- அன்றாட சமையலில் கொஞ்சம் அக்கறை காட்டினாலே போதுமானது கண்ணில் உள்ள கருவளையத்தை நீக்க இரும்புச்சத்து அதிகம் கொண்ட காய்கறிகளை அதிகம் உணவில் சேர்த்து கொள்ள வேண்டும். முருங்கைக்கீரை, அகத்திக்கீரை, முள்ளங்கி, பொன்னாங்கானி, சின்ன வெங்காயம், பூண்டு, அவரைக்கீரை, அப்பிள், நெல்லிக்காய், விளாம்பழம், நாவல் பழம், வாழைப்பழம், வெள்ளரிப் பழம், பாகற்காய், வாழைத்தண்டு போன்றவற்றில் இரும்புச்சத்து அதிக அளவில் உள்ளது.
- வெற்றிலை போட பயன்படுத்தும் சுண்ணாம்பை ஒரு பட்டாணி அளவு எடுத்து, அதை ஒரு கப் குளிர்ந்த நீரில் கரைத்து சுமார் ஒரு மணி நேரம் அப்படியே வைத்து விடுங்கள். அந்த சுண்ணாம்பு நீரானது தெளிந்தவுடன், அதில் இருந்து 2 தேக்கரண்டி தெளிந்த தண்ணீரை வேறொரு கிண்ணத்தில் பிரித்தெடுத்து அதில், சிறிது எலுமிச்சைச்



சாறும் பிழிந்து வடிகட்டிக் கொள்ளுங்கள். தொடர்ந்து, இரண்டையும் ஒன்றாக கலந்து, அதை ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை கண் விழியில் படாது கண்ணை சுற்றி பூசி வந்தால் சில நாட்களில் கண் கருவளையம் மறைந்து விடும்.
- வெள்ளரிக்காய், உருளைக் கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து அதை நன்றாக அரைத்து கொள்ளவும். ஒரு மெல்லிய வெள்ளை துணியை பன்னீரில் நனைத்து கண்களின் மீது வைத்து, அதன் மேல் அரைத்த கலவையை வைத்து முப்பது நிமிடம் இருக்க வேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தாலே போதுமானது.
- சரியான தூக்கம் இல்லாமல் போனாலும் கண்களில் கரு வளையம் தோன்றும். தினமும் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும்.
- வெள்ளரிக்காய்ச்சாற்றை முகத்தில் தேய்த்து, ஒரு மணி நேரத்திற்கு பின் கழுவலாம்.
- தினமும் குறைந்தது நான்கு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.
- கற்றாழையின் சோற்றுப் பகுதியினை பன்னீருடன்



கலந்து தினமும் கண்ணுக்கு கீழ் தடவி 10 நிமிடம் கழித்து முகம் கழுவினால் கண்களிலுள்ள கரு வளையம் குறையும்.

# வெண்ணிலா ஐஸ்கிரீம் ரெடி



**தேவையான பொருட்கள்:** 1 கோப்பை கிரீம், 1 கோப்பை பால், 1/2 கோப்பை சர்க்கரை, 1/2 தேக்கரண்டி வெண்ணலா எஸ்ஸென்ஸ், 4 கோப்பை ஐஸ் கட்டிகள், 1 கோப்பை கல்லுப்பு, 1 ஜிப்லாக் பை அல்லது ஒரு கெட்டியான பிளாஸ்டிக் பை, 1 டக்ட் டேப் அல்லது செல்லோ டேப், 1 மூடியுடன் இருக்கும் ஹார்லிக்ஸ் பாட்டில் அல்லது டப்பா.

**செய்யும் முறை:** பால், கிரீம், வெண்ணலா எஸ்ஸென்ஸ், சர்க்கரை எல்லாவற்றையும் பிளாஸ்டிக் பையில் ஊற்றவும். பிறகு ஒரு நல்ல இறுக்கமாக பிடிக்கும் டேப் கொண்டு மூடி ஒட்டவும். இது இறுக்கமாக பிடிக்க வேண்டும். ஏனென்றால் இதை நன்றாக உலுக்கும்போது பால் வெளியே வந்து விடும்.

இப்போது டப்பாவில் இந்த பிளாஸ்டிக் பையை போட்டு அதன் மேல் ஐஸ்கட்டிகள், உப்பு எல்லாவற்றையும் போட்டு நன்றாக மூடவும். இதையும் தண்ணீர் வெளிவராமல் இருக்க டேப் போட்டு ஒட்டலாம். இப்போது நன்றாக பத்து நிமிடம் குலுக்கவும். அதிகநேரமும் குலுக்கலாம். பிறகு இந்த டப்பாவைத் திறந்து, பையை எடுத்து அதை ரெஃப்ரிஜ்ரேட்டரில் இருக்கும் ஃபிரீசரில் வைக்கவும்.

அரை மணிநேரம் கழித்து இந்தப் பையை திறந்து பாருங்கள். சுவையான வெண்ணிலா ஐஸ்கிரீம் ரெடி.

# பழரசம் தயாரிக்கும் போது கவனிக்க வேண்டியவை...



பழங்களை வெட்ட இரும்பு கத்தியை உபயோகிக்க வேண்டாம். பழம் மிகவும் காயாகவோ மிகவும் பழுத்தோ அடிபட்டோ இருக்க கூடாது.

சக்கரை, சிற்றிக் அமிலம், தண்ணீர் மூன்றையும் அகன்ற பாத்திரத்தில் கொதிக்க வைத்து ஒரு கொதி வந்ததும் இறக்கி வடிக்கவும். அது குளிர்ந்த பின்னர் பழச்சாற்றில் சேர்க்கவும்.

வெண்ணீர் ஊற்றி கழுவி வெய்யிலில் காய வைக்கப்பட்ட சுத்தமான போத்தல்களில் பழரசத்தை ஊற்றி வைக்க வேண்டும்.

உபயோகிக்கும் முன்னர் தண்ணீர் கலந்து குடிக்க வேண்டும். உடனடியாக முழுவதையும் பயன்படுத்துவதாக இருந்தால் இரசாயன கலவையை சேர்க்க வேண்டாம்.

பழரச போத்தல்களை அதிக ஈரமான இடங்களிலோ அல்லது சூடான இடங்களிலோ வைக்க கூடாது. கரண்டிகள் சுத்தமானவையாக உலர்ந்து இருக்கும்படி பார்த்து பயன்படுத்த வேண்டும். சோடியம்பென்சையிட் வினிகர் போன்றவற்றை அளவோடு பயன்படுத்துங்கள்.

# பெர்மிங்
## Hair perming

ஸ்ரேய்ட்னிங்கிற்கு நேரெதிரானது இது. அதாவது நேராகவுள்ள கூந்தலை சுருளாக மாற்றும் சிகிச்சையே பெர்மிங். இதனை செய்து கொள்வதன் மூலம் குறைவாக உள்ள முடியை அடர்த்தியாக பெற்றுக்கொள்ள முடியும்.

எமது கூந்தலில் அமினோ அமிலம் ஸ்லாக் எனப்படும் வளைவுகளில் அமைந்துள்ளது. அத்துடன் சல்பர் மற்றும் ஹட்ரஜன் இணைப்புக்களும் உண்டு. சல்பரை தாக்கும் போது அமினோ அமிலத்தின் ஸிக்ஸாக் வடிவத்தை அழிக்க முடியும். சல்பரை அழித்து நியூட்ரலைசர் உபயோகிப்பதன் மூலம் கூந்தலை பெர்மிங் செய்யலாம்.

செய்முறை:

தலைமுடியை தேவைக்குஏற்றால் போல் பிரித்து கொள்ள வேண்டும். பிரிக்கப்பட்ட முடிகளில் சிறிது சிறிதாக பிரித்து முடியின் நுனியில் roll போட்டு உருட்டி பின்பண்ண வேண்டும்.

இந்த roll உட்பக்கமாகவோ வெளிப்பக்கமாகவோ roll பண்ணி கொள்ளலாம். பெரியளவு curl வேண்டுமாயின் அதற்கு ஏற்ப பெரிய roll பயன்படுத்த வேண்டும். பிரிக்கப்பட்ட பிரிவுகளில் உள்ள rollகளின் மீது perming lotion apply செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் குறிப்பிட்ட நேரம் கழித்து



அந்த roll மீது nutrilizer aplly செய்து குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கழுவி rollகளை அகற்ற வேண்டும். இவ்விதம் செய்யும் முறையே perming ஆகும்.

இந்த பெர்மிங் சிகிச்சையை யார் யார் செய்து கொள்ளலாம்.

முன்னந் தலையில் முடி வளர்ச்சி குறைவாக இருப்பவர்கள்.

குதிரை வால் கட்டும் போது முடி கீழ் பகுதியில் எலி வால் போல் இருப்பவர்கள் செய்து கொள்ளலாம். இந்த சிகிச்சைகள் பெரும்பாலும் கூந்தலின் இறந்த வெளிப்புறத் தோற்றத்தில் செய்யப்படுபவை. ஆனால் இந்த சிகிச்சைகளை செய்து கொண்ட பிறகு கூந்தலை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும்.

இந்த மாதிரியான சிகிச்சைகளின் பின்னர் பிரத்தியோக ஸாம்போ ஹன்டீசனர் மற்றும் ஸ்ரைலிங் பொருட்கள் உள்ளன. அவற்றையே பாவிக்க வேண்டும்.

அவற்றை முறையாக பாவிப்பதால் சிகிச்சை பலன் நீண்ட காலம் நீடிப்பதோடு கூந்தலும் ஆரோக்கியமாக இருக்கும். அவற்றை முறையாக உபயோகித்தால் சிகிச்சையின் பலன் அதிக நாட்கள் நீடிப்பதோடு கூந்தலும் ஆரோக்கியமாக இருக்கும்.

அதற்காக அடிக்கடி மாறும் பேஸனுக்கு ஏற்ப மிக குறுகிய இடைவெளிகளில் ஸ்ட்ரெய்ட்னிங் பிறகு அது பிடிக்காமல் பெர்மிங் மறுபடியும் ஸ்ரேய்ட்னிங் என்று செய்வது கூந்தலின் ஆரோக்கியத்தை கட்டாயம் பாதிக்கும்.

# சேலைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம்

'சேலை கட்டும் பெண்ணுக்கொரு வாசம் உண்டு' என்பதில் எவ்வளவு உண்மையுள்ளதோ நாமறியோம். ஆனாலும், தமிழர்களிக் கலாசார உடையாக அதுதான் உள்ளது. சேலையில் பார்க்க, சாதாரண பெண்களும் தேவதைகளாக தெரிவார்கள் என சொல்கிறார்கள். அதனால்த்தான் சேலை பெண்களின் வாழ்வில் தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டதோ என்னவோ.

புதியபுதிய ஆடைகள் நவீன டிசைன்களில் போட்டிபோடும் பெண்களின் உலகத்தில் போட்டியிடத்தக்கதாக சேலைகளும் மாற்ற மடைந்து விட்டன. எண்ணற்ற டிசைன்களில், விதங்களில் சேலைகள் வருகின்றன.

கல்லுவைத்த அழகு சேலைகள், கோலங்கள் சேலைகள், சில்க் சேலைகள், வஸ்திரகாலப்பட்டு சேலைகள், எம்றைறிங் சேலைகள், நேத்ரகலா பட்டுச் சேலைகள், கொட்டன் சேலைகள், பளபளக்கும் சீக்குயின்ஸ் சேலைகள் என சேலைகளின் வகைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனால் எல்லா சேலைகளும் எல்லோருக்கும் பொருந்துவது இல்லை. பொருத்தமான சேலையை தேர்வு செய்து அணிவதில்த்தான் உங்கள் அழகும், கம்பீரமும் தங்கியுள்ளது. கத்தரிதோட்டத்தில் காவலிற்கு கட்டப்பட்டதற்கு சேலையை சுற்றுவதைப் போலல்லாமல், உங்களிற்கு பொருத்தமான சேலையை தேர்வு செய்த அந்த பகுதி உதவலாம்.



**கல்லு சேலை மற்றும் பட்டு சேலை**

இவை எல்லோருக்கும் ஏற்ற சேலை வகைகள். தற்காலத்தில் பட்டுச் சேலைகள் மணவறை பெண்ணுக்குத்தான் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. அதே போன்ற கல்லுப் பட்டுச்சேலை காஞ்சிபுர சேலைகள் கூட திருமணமான பெண்கள் எங்காவது மங்களகரமான விடயத்திற்கு செல்லும் போது தான் பயன்படுத்துகின்றனர்.



**சீக்குயின்ஸ் மற்றும் கல்லு சில்க் சேலைகள்**

இது குண்டாக இருந்தால் என்ன மெல்லியதாக இருந்தால் என்ன அழகாக காட்டும். குண்டானவர்களை மெல்லியதாக காட்டும். இது அனேகம் விழாக்களிங்கு கட்டுவதற்கு உகந்தது.



**கேரளா கொட்டன் சேலைகள்**

எல்லா பெண்களும் விரும்பி உடுக்கும் புடவை கேரளா கொட்டன். இது மெல்லிய பெண்களுக்கே அழகை அள்ளிக் கொடுக்கும். குண்டானவர்களுக்கு நூல் சேலையை சுற்றி விட்டதைப் போல் இருக்கும்.



**கண்டாங்கி சேலைகள்**

இப்போது வந்த புது சேலைகள். எந்த நிகழ்விலும் பெண்கள் கட்டி அசத்தலாம். ஆனால், விலையும் தூக்கலாக இருக்கும். ஈர்க்கு போன்று மெல்லியவர்களுக்கும் சரி வராது. யானை போன்று உடம்புடையவர்களுக்கும் சரிவராது. அளவான உடம்புகாரர்களிற்கு அம்சமாக இருக்கும். அதுவும் சிவப்பானவர்களிற்கு அழகோ அழகு.



**கொட்டன் சேலைகள்**

இது குண்டான தோற்றம் உடையவர்கள் உடுத்தினால் இன்னும் குண்டாக காட்டும் என்பதனால் அவர்கள் இதை தவிர்த்தல் நன்று. அவர்களுக்கு சில்க் மற்றும் காஞ்சிபுரமே உகந்தது.



**நூல் கொட்டன் சேலைகள்**

இது உடுப்பதற்கு இலகுவானதும் காற்றோட்டமானதும் ஆகும். வயதானவர்களிற்கு இது மிகப் பொருத்தமானது.



**சில்க் சேலைகள்**

இது மெல்லிய பெண்களுக்கே மிக அழகாக இருக்கும். என்றாலும். குண்டான தோற்றம் கொண்டவர்களுக்கும் அவர்களின் தோற்றத்தை குறைவாகவும் அழகாகவும் காட்டும்.

## சமையல் குறிப்புகள்

முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்கு, வேக வைக்கும் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் வினிகரை விடவும். அவ்வாறு விட்டால், முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.

பாலை காய்ச்சுவதற்கு முன், அந்த பாத்திரத்தை நன்கு தண்ணீரால் சுத்தம் செய்த பின்னர் காய்ச்சினால், பால் பாத்திரத்தில் அடி பிடிப்பதை தவிர்க்கலாம்.

பால் புளிக்காமல் இருப்பதற்கு, ஏலக்காயை பால் காய்ச்சும் போதே அதனுடன் சேர்க்கவும். அவ்வாறு செய்தால் நீண்ட நேரத்திற்கு பால் புளிக்காமல் இருக்கும்.

தேங்காய் துண்டுகளை ஒரு பிளஸ்டிக் டப்பாவில் தண்ணீர் போட்டு பிரிட்ஜில் வைத்தால் நீண்ட நாள் வரும்

தோல் உரித்த உருளைக்கிழங்குகளை கெடாமல் வைப்பதற்கு சில துளிகள் வினிகரைத் தெளித்து ஃப்ரிட்ஜில் அதை வைக்கவும்.

எண்ணெய் கறையை அழிப்பதற்கு, எலுமிச்சம் பழத்தை இரண்டு துண்டாக வெட்டி அதை உப்பில் வைக்கவும். பின்னர் அந்த துண்டுகளை வைத்து தேய்க்கவும்.

காளான்களை அலுமினியம் பாத்திரங்களில் சமைக்கக்கூடாது ஏனென்றால் அவை பாத்திரத்தை கருமையாக மாற்றிவிடும்.

பச்சை மிளகாய் வாடாமல் இருக்க அதன் காம்பை கிள்ளிவிட்டு டப்பாவில் போட்டு வைத்தால் நீண்ட நாள் வரும்.

கொத்துமல்லி, புதினா கீரைகளை (விரும்பினால் கிள்ளியும்) கழுவி டிஷ்யூ பேப்பரில் பரப்பினால் 10 நிமிடத்தில் ஈரம் உலர்ந்து விடும், அதன் பின்னே ஃப்ரிட்ஜில் வைத்தால் அழுகாமல் பல நாட்கள் இருக்கும், சுத்தமாகவும் இருப்பதனால் அவசரத்துக்கு அப்படியே உபயோகிக்கலாம்.

தினம் இஞ்சி டீ குடிப்பவர்கள் அதை போட்டு தட்டி கொண்டு இருக்காமல் ஒரு பெரிய துண்டு அளவிற்கு கொர கொரப்பாக ஏலக்காய் சேர்த்து அரைத்து ஒரு டப்பாவில் போட்டு பிரிட்ஜில் வைத்து கொண்டால் தினம் டீ கொதிக்கும் போது ஒரு ஸ்பூன் அளவிற்கு எடுத்து போட்டு கொள்ளலாம்.

முருங்கக்காய் அதிகமாக இருந்தால் அதை அப்ப்டியே பிரிட்ஜில்வைத்து காயவிடாதீர்கள்.அதை தோலெடுத்து ஒரு விரல் நீளத்துக்கு அரிந்து ஒரு கவரில் போட்டு பிரீஜரில் போட்டு வையுங்கள். முருங்கக்காய் சேர்த்து சமைக்கும் போது அப்ப எடுத்து அப்படியே கழுவி சேர்த்து கொள்ளலாம், இரண்டு நிமிடத்தில் வெந்துவிடும்.

# தன்னிகரற்ற தமிழின் தனித் தன்மைகள்



ராஜா செல்வநாதன்
முரசுமோட்டை.

தமிழுக்கு வளமுண்டு தனித்துவமான பண்புகளுண்டு; எதையும் உள்வாங்கி முன்னேறும் ஆற்றலுண்டு; தமிழரை வெறுப்பவரும் தமிழை வெறுப்பதில்லை. தமிழின் செளுமை அத்தகையது. இலண்டன் Oxford English Dictionaryயில் உள்ள Anicut, Katamaran, rice, cash ஆகிய பதங்கள் முறையே அணைக்கட்டு, கட்டுமராம், அரிசி, காசு ஆகியன தமிழ்ப் பதங்களேயாகும்.


அணைகட்டி, நீர்ப்பாசனம் செய்தவர்களும், மரங்களை ஒன்றாகக் கட்டிக் கடலிற் போட்டுத் தெப்பமாயக்கியவர்களும், ஆதி காலத்தில் அரிசியை விளைவித்தவர்களும், பணத்தினைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல் செய்தவர்களும் தமிழர்களாவர். முதன் முதலாகக் கடலோடிகளாகவும், முதன் முதலாக "லிபி" எழுத வகை செய்தவர்களும் ஆகிய அழிந்துபோய்விட்ட Navigation மற்றும் Navy நாகரிகங்களுக்கும், தமிழர்களுக்கும் தொடர்புண்டு என விபுலானந்த அடிகளும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் "நாவாய்"என்ற தமிழ்ச் சொல்லும்யேளபையவழைஸீ மற்றும் யேஎல என்ற சொற்களும் ஆராய்ச்சிப் பண்பினதாயுள்ளன.

**தமிழர்களின் தற்காப்புக் கலையான "வர்மக் கலையும்" நோக்கு வர்மமும் சீனா சென்றடைந்து "கராட்டி" "குங்பூ"வாக மாற்றமுற்றது.**

தென்னமெரிக்க பெரு (Peru) நாட்டில் இருந்த "மாயா" நாகரிகத்துக்குரியவர்களின். நேர்த்தியான வர்ண ஓவியங்கள் "National Geographic" சஞ்சிகையில் விளக்கமான முறையில் வெளியாகியிருந்தன. அவற்றின் வனப்பு: தற்கால ஓவியங்களையே விஞ்சும் தன்மை கொண்டது.

பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்து - பசுபிக் ஆழ்கடலினூடாகப்பயணம்செய்து அப்பகுதிகளிற் குடியேறியவர்களும், அவுஸ்திரேலியா ஆதிக்குடிகளான மாஓரி, முண்டா முதலிய இனத்தவர்களும் ஆதித் திராவிடரே என்பதை "வாழும் கலை" ஆன்மிக அமைப்பின் சுவாமிகளும் தெரிவித்துள்ளார். ஜப்பானிய மொழியிற் காணப்படும் 500க்கு மேற்பட்ட சொற்கள் தமிழுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுவதனையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

அவுஸ்திரேலியா, பொலினீசியா ஆகிய பிரதேசங்களில் ஆங்கிலேயர் குடியேறி ஒரு சில நூற்றாண்டுகளே ஆகின்றன. அங்கு காணப்படும் காரிநாய், கங்காரு மற்றும் பூமராங் (Poomerang) என்பன ஆராய்ச்சிக்குரிய சொற்களாகும்.



காஞ்சிபுரத்துப் பல்லவ இளவரசன் ஒருவன் பௌத்தமதத் துறவியாகி, சீன தேசம் சென்று அம்மக்களின் அபிமானத்தை வென்று, அம்மக்களின் அன்புக்கு அடிமையாகி, சீனாவின் பல இடங்களிலும் ஹொங் கொங்கிலும் தெய்வமாக "போதி தர்மர்" என்ற பெயரில் வழிபடப்படுகிறார்.

தமிழர்களின் தற்காப்புக் கலையான "வர்மக் கலையும்" நோக்கு வர்மமும் சீனா சென்றடைந்து "கராட்டி" "குங்பூ"வாக மாற்றமுற்றது. நந்திவர்மன், நரசிம்மவர்மன், மகேந்திரவர்மன் முதலான காஞ்சிப் பல்லவ சக்கரவர்த்திகளுக்குரிய "வர்மன்" என்ற சொல்லுக்கும். "வர்மம்" என்ற சொல்லுக்கும் தொடர்பு இருக்கத்தான் வேண்டும்.

தற்போது வியட்நாம், லாவோஸ், கம்போடியா, தாய்லாந்து ஆகிய இந்தோ சீனம் முன்பு இந்தியாவின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியாக இருந்தது.

கம்போடியாவில் "ஸ்ரீ மாற வல்லபன்" என்ற பாண்டிய மன்னனின் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உலகிலேயே மிகப்பெரிய கோயிலாகக் கூறப்படுவதும் சூரியவர்மன் என்ற மன்னனாற் கட்டப்பட்டதுமான "அங்கோர் வாட்" இங்கேயே உள்ளது.

தற்போது உலகின் மிகப்பெரிய இஸ்லாமிய நாடாக இருப்பதும், 20 கோடிக்கு மேற்பட்ட குடித்தொகையைக் கொண்டதும், ஆழிப் பேரலைகளால் அடிக்கடி அவதியுறுவதுமான இந்தோனேசியாவில் சுமாத்ரா, யாவா, பாலி, சம்பா முதலியவனவும் திமோர் முதலிய தீவுக் கூட்டங்களும் முன்பு இந்து மத "ஸ்ரீ சைலம்" என்ற பேரரசின் கீழ் ஜடாவர் மன் முதலான சைலேந்திர மன்னர்களால் ஆளப்பட்டு வந்திருக்கின்றன.

சந்திரபாணு என்ற யாவா மன்னன் இலங்கையின் தென் முனையிலிருந்த சந்திர மௌலீஸ் வரத்தில் வழிபாடியற்றினான் என்பதும், அந்தப் பாரிய ஆலயத்தை பறங்கியர் இடித்தழித்துப் பசு மாட்டு இரத்தத்தினால் அபிசேகம் செய்தமையும் "Beaten tracks in Ceylon" என்ற நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது.

கெடா (Keda) என்பது மலேசியாவில் உள்ள ஒரு மாகாணம். இது சோழரால் கைப்பற்றப்பட்டது. அதனாலேயே "கடாரம் வென்றான்" என்பர். மலேசிய நாட்டு வரலாற்றுப் பாட நூலில் இது தெளிவுபடக் கூறப்பட்டிருப்பதுடன் "சோழர்கள் வெல்லப்பட முடியாதவர்கள்" (Invincible Chollas) என்றும் அவர்கள் தம் மூட நம்பிக்கை காரணமாக மலைகளின் உச்சிகளில் உயர்ந்த கோபுரங்களைத் தம் தெய்வங்களுக்கு எழுப்பினார்களென்றும் மேலும் விரிவாக்கப் பட்டுள்ளது.




குலான் என்பவன் பெருங் கொடுங்கோலன், அவனது அராஜகத்தால் ஆழிப்பேரலைகள் ஊர்கள் தோறும் வந்து ஆதி வாழ்விடங்கள் எல்லாம் அள்ளிக்கொண்டுசெல்லப் பட்டிருக்கின்றன. "கொற்றகைத் துறைமுகமும், பல்லவனின் மல்லையும் கடல் கொணடன" என்று கூறியபோது நம்ப மறுத்தார்கள், பஃறுளி ஆறும், பன்மலை அடுக்கமும் கொடுங்கடல் கொள்ள" என்று பழந்தமிழிலக்கியப் பனுவல்கள் உரைத்த போது, அதை பரிகாசம் பண்ணியோர் எல்லாம், 26 செப்டம்பர், 2014இல் ஆழிப்பேரலை அனர்த்தம் சுனாமி (Tsunami) என்ற யப்பானியச் சொல்லுடன் வந்த பின்னரே தம் சிந்தனைககைளைச் செப்பனிட்டுக் கொண்டார்கள்.

இங்கு சாபக்கேடு என்னவென்றால் தங்களுடைய வரலாற்றைக் கூட் தாங்கள் அறிய முடியாத நிலையில் தமிழினம் இருப்பதுதான் இவர்களுடைய நாகரிகம்தான் சிந்துவெளி நாகரிகம். ஆங்கிலேயரான சேர். ஜோன் மார்சல் 1920களில் இங்கு வந்து பாடுபட்டு அகழ்வாராய்ச்சி செய்து இதை இவர்களுக்கு அறிவிக்கவேண்டி இருந்தது. ஐந்து பெருநதிகளும்பாய்ந்தோடி பஞ்சாப் பிரதேசமும் (ராஜஸ்தான்) பலத்தால், லோத்தா, மொ'ஞ்சதாரோ, ஹரப்பாபோன்ற பரந்த இடங்களும் பண்பாடு கொண்ட மக்களின் சிறந்த நகரக் குடியிருப்புக்களாகவும், துறைமுகங்களாகவும் இருந்து இயற்கை பேரழிவு, பூமியதிர்ச்சி காரணமாகப் பாழ்பட்டுப்போன விடயத்தை சேர். ஜோன் மார்'லுடன்

**நந்திவர்மன், நரசிம்மவர்மன், மகேந்திரவர்மன் முதலான காஞ்சிப் பல்லவ சக்கரவர்த்திகளுக்குரிய "வர்மன்" என்ற சொல்லுக்கும். "வர்மம்" என்ற சொல்லுக்கும் தொடர்பு இருக்கத்தான் வேண்டும்.**

ஏனைய வரலாற்றாசிரியர்களும், லீல தடவைகள் எடுத்துரைத்த போதிலும் கூட, மத்திய ஆசியாவில் நீர்ப்பாசனம், நகர நிர்மாணம் பற்றி அறிவில்லாத நாடோடிகளான (Nomads) வேற்று இனத்தவர். கி.மு 1500 அளவில் கைபர் கணவாயூடாக வேற்று மத வழிபாட்டு முறைகளைக் கொண்டவர்களாக "இந்தியா" என்ற நாட்டினுட் புகுந்து, பின்னாளில் தமது வாழ்விடங்களை ஏற்படுத்திக் கொண்டதை வைத்து, ஆரியர் வந்து திராவிடரைத் தெற்கே துரத்திவிட்டதாகப் பொய்யுரைப்பதை நம்புகின்றனர்.

இந்து மதம், இந்துஸ்தானம், இந்தியா என்பதெல்லாம் பின்னாளில் வேற்று நாட்டவர்களால் இடப்பட்டதென்பதே வரலாறு. அது இப்போதுள்ளது போன்று முன்னாளில் ஒரே நாடாக எவராலும் ஆளப்பட்டது கூட அல்ல.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் அடுக்கு மாடி வீடுகளில் வசித்ததும்; வடிகால மைப்புக்கள் குளியல், குளியல் வசதிகள், விசாலமான வீதியமைப்புக்கள் புராதன காலத்தில் உலகில் எங்குமில்லாதவாறு சுகாதார அமைப்புடன்கூடிய ஆடம்பரமான நகர வாழ்க்கையை அவர்கள் அனுபவித்தது பற்றியும், கட்டடக் கலையில் அவர்கள் உயர்ந்தளவு தேர்ச்சி கொண்டிருந்தமை பற்றியும் அறிய முடிந்தது.

**தொடரும்...**


சிந்துவெளி நாகரிகம்



# சித்தமருத்துவம் என்பது ஒரு வாழ்வு முறையாகும்

கந்தையா நவரத்தினம் வேலணையை சொந்த இடமாகக் கொண்டவர். தற்போது யாழப்பாணத்தில் சித்தமருத்துவராக தொழில் செய்கிறார். மக்கள் மருத்துவமான சித்தமருத்துவத்தின் இன்றைய நிலை எதிர்நோக்கும் பிரச்சனைகள் பற்றி தீபம் பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வி.

**கேள்வி:** நீங்கள் லங்கா சித்த மருத்துவ கல்லூரியில் பட்டம் பெற்றவர் என அறிகிறோம். இதை தவிர இத்துறையில் பரம்பரையாக அனுபவம் பெற்றிருக்கிறீர்களா?

**பதில்:** ஆம். எங்கள் குடும்பம்



கந்தையா நவரத்தினம்

ஒரு சித்தமருத்துவ பரம்பரையை சேர்ந்தது. எனது தந்தையர் ஐயம்பிள்ளை கந்தையா, அவரது தந்தை சின்னர் ஐயம்பிள்ளை ஆகியோர் சித்தமருத்துவர்கள். இதை விட எனது மாமனார் காலம் சென்ற பேரம்பலம் இவரும் ஒருபுகழ்பெற்ற மருத்துவர். இவர்கள் வழியான மருத்துவ அனுபவம் நிறைய இருக்கிறது.

**கேள்வி:** எத்தகைய நோய்களுக்கு சித்த மருத்துவமுறை சிறப்பாக பயன் அளிக்கிறது?

**பதில்:** சித்தமருத்துவம் என்பது தனியே மருத்துவ முறை மட்டுமன்று. அது ஒரு வாழ்வு முறையாகும். அதன் இலட்சியம் நோயற்ற வாழ்வென்பதே. இதன் மூலம் சகல நோய்களுக்கும் சிகிச்சை



அளிக்கமுடிகிறது. இருந்தாலும் சிறுவர் ரோகங்கள், வாதரோகங்கள், பீனிசம், ஆஸ்த்துமா, சொறி சிரங்கு போன்ற சருமரோகங்கள், உடற்பருமன், நீரிழிவு போன்றவற்றிக்கு சிறப்பாக சிகிச்சை அளிக்கமுடிகிறது.

**கேள்வி:** ஒருகாலத்தில் தேசிய மருத்துவமாக இருந்த சித்த மருத்துவம் இன்று நலிவடைந்துள்ளது. என்ற கூற்று பலராலும் முன் வைக்கப்படுகிறது. இதற்கு காரணங்கள் எதுவாக இருக்கும்? சித்த மருத்துவம் எதிர் நோக்கும் பிரச்சனை பற்றி கூறுங்கள்.

**பதில்:** இன்று வாழ்க்கைமுறை மாற்றமடைந்துள்ளது. நவீனத்துவத்திற்கு பழக்கப்பட்ட மக்கள் உடனடி நிவாரணத்தை விரும்புகிறார்கள். சித்தமருத்துவம் கூறுகின்ற கடுமையான பத்திய முறைகளை பொதுவாக பலர் விரும்புவதில்லை.

மற்றது முன் போல மூலிகைகள் கிடைப்பதில்லை. அவற்றை பெறுவதில் இடர்பாடுகள் காணப்படுகிறது. வேலிகள் அழிக்கப்பட்டு எல்லா இடங்களிலும் மதில் தோன்றியிருக்கிறது. இதனால் பல மூலிகைகள் அழிந்துபோய்விட்டது. மேலும்டெங்குபரவுகிறகாலங்களில் பற்றைகள்,செடிகொடிகள் அழிக்கப்படுகின்றன. இதனாலும் சில மூலிகைவகைகள் அழிக்கப்படுகின்றன.

அடுத்தது நான் எற்கனவே சொன்னது போன்று பாரம்பரிய வடிவங்களில் உள்ள மருந்துகளை மக்கள் விரும்புவதில்லை. (கையால் உருட்டுகிற குளிகைகள்,சூரணங்கள், குடிநீர் வகைகள் போன்றன )

இந்தியாவில் சித்தாயுர்வேத மருந்துகளை நவீன வடிவில் தயாரிக்கிறார்கள் (கப்சூல், சிறப்) உதாரணமாக himalya தாயாரிக்கும் மருந்துகளை குறிப்பிடலாம். ஆனால் இவற்றை இங்கே பெற்றுக் கொள்வதில் சிக்கல் எதிர்நோக்கப்படுகிறது. இவற்றிக்கான இறக்குமதி தீர்வை அதிகமாக இருக்கிறது.

இதனால் இதை மருந்து விற்பனையாளர்கள் இறக்குமதி செய்வதில்லை. சில மருந்துகள் கிடைக்கும். அது தொடர்ச்சியாக இருக்காது. இடையில் நின்று விடும். இது போன்ற பிரச்சனைகளுகிடையே தான் மருத்துவம் செய்ய வேண்டிஇருக்கிறது.

மேலும் வளர்ந்து வரும் வைத்திய முறைகள், புதிய பரிசோதனைகள் பற்றிய விளக்க செயன் முறை பயிற்சிகளும் எம் வைத்தியர்களுக்கு கிடைப்பதில்லை. இவை போன்ற பிரச்சனைகளால் தான் சித்தமருத்தவ துறை நலிவடைகிறது என நினைக்கிறேன்.

**இந்தியாவில் சித்தாயுர்வேத மருந்துகளை நவீன வடிவில் தயாரிக்கிறார்கள் (கப்சூல், சிறப்) உதாரணமாக himalya தாயாரிக்கும் மருந்துகளை குறிப்பிடலாம். ஆனால் இவற்றை இங்கே வெற்றுக்கொள்வதில் சிக்கல் எதிர்நோக்கப்படுகிறது.**


**கேள்வி:** எந்தஒருபிரச்சனைக்கும் தீர்வு ஒன்று இருக்கத்தானே வேண்டும். இத்தகையை இடர்பாடுகளை களைவதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கருதுகிறீர்கள்?

**பதில்:** ஆம்... இது பற்றி எமது டிஏ எம் பட்டதாரிகள் சங்கம் சார்பாக அறிக்கை இட்டிருந்தோம். எமது சுதேச வைத்திய அமைச்சு இதில் தலையிட்டு மருந்துகளை இறக்குமதி செய்து வழங்க வேண்டும். இதில் எமது மாகாண சபை கூட செயற்பட்டு யாழ்ப் பாணத்தில் ஒருசுதேச மருந்து விற்பனை நிலையமொன்றை அமைத்து வைத்தியர்களுக்கு மானிய விலையில் வழங்கலாம். மூலிகை தட்டுபாட்டை போக்க மூலிகை பண்ணைகளை நிறுவலாம். தற்போதும் சில இயங்குகின்றன. ஆனால் போதாமையுள்ளது.

**கேள்வி:** தற்போது குடாநாட்டில் நீரிழிவு, இரத்த அழுத்தம், உடற்பருமன் போன்றவற்றின் பாதிப்பிற்குள்ளாவோர் தொகை அதிகரித்து வருகிறது. இதற்கு என்ன காரணம்?

**பதில்:** முக்கியமாக எமது வாழ்வு முறைதான். இயற்கை உணவுகள் இன்று அருகிவிட்டது. பொதி செய்யபட்ட திடீர் உணவுகள், மசாலா வகைகள், எண்ணெய்யில் பொரித்த உணவுகளையே பலர் விரும்பியுண்கிறார்கள். "மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியதுதற்றது போற்றியுணின்' என வள்ளுவர் சொன்னது போல் சிறந்த உணவுபழக்கம் நோயின்றி வாழ உதவும்.

மேலும் இயந்திரதனமான வாழ்க்கை, போதியஓய்வின்மை,



சிறந்த உடற்பயிற்சியின்மை என்பனவும் இத்தகைய நோய்களின் அதிகரிப்பிற்கு காரணமாகிறது. சித்த மருத்தவம் மருந்தை மட்டுமன்றி வாழ்வுமுறையையும் போதிக்கிறது

உணவுக்கட்டுப்பாடு, உடற் பயிற்சி என்பனவெல்லாம் நிறைந்த ஈடுபாட்டோடு செய்யப்பட வேண்டும். ஓர் உதாரணம் சொல்லலாம். என்னிடம் ஒருநோயாளி வந்திருந்தார். உடற்பருமனை குறைக்க உடற்பயிற்சிக்கு சிபார்சு செய்தேன். அவர் அக்கறையாக செயற்படவில்லை போலும். அடுத்த முறையும் அப்படியே இருந்தார். ஆனால் மறுமுறை அவரிலே மாற்றம் தெரிந்தது. இடுப்பு சுற்றளவு குறைந்திருந்தது என்ன செய்தீர்கள் என்று கேட்டேன். தனது நண்பர் ஒருவர் வெளிநாட்டில் இருந்து வந்தாராம். வரும் போது தனக்கு விலையான ஜீன்ஸ் ஒன்று தந்தாராம். தனது இடுப்பளவு முப்பத்திநாலாம். ஆனால் அவர் தந்ததோ முப்பத்தியிரண்டாம். விலையான ஜீன்சை இழக்க விரும்பாமல் கஸ்டபட்டு தொடர்ச்சியாக உடற்பயிற்சி செய்து மெலிந்தாரம். அதை தான் போட்டிருக்கிறேன் என்றார்.

இந்த சம்பவம் ஒரு ஒரு உண்மையை சொல்கிறது. எதையும் ஈடுபாட்டுடன் செய்தால் வெற்றி பெறலாம் என்பதுதான்.

**கேள்வி:** பயன் உள்ள தகவல்கள் தந்தீர்கள். இறுதியாக உங்கள் மருத்துவத்தில் குடிநீர் சிகிச்சையொன்று ஒன்று உண்டல்லவா. மக்கள் எளிதில் பயன்படுத்தக்கூடிய காச்சலுக்கான குடிநீர் ஒன்று சொல்வீர்களா?

**பதில்:** நல்லது, காய்ச்சல் பலவகைப்படும். பொதுவாக காய்ச்சலுக்கு எல்லோராலும் பாவிக்க கூடிய குடிநீர் வகையொன்றை குறிப்பிடுகிறேன்.

கொத்தமல்லி, ஆடாதோடை, மரமஞ்சள், சுக்கு, பற்படாகம், சிந்தில், மிளகு, சிற்றரத்தை இவற்றை மருந்துக் கடையில் வாங்கி, மண்சட்டியில் இட்டு நீர் விட்டு எட்டிலொன்றாக காய்ச்சி இளம் சூட்டில் அருந்த காய்ச்சல் அதனால் ஏற்பட்ட அசதி என்பன நீங்கும்.



எம்.மதிவாணி
(நடன கலாநிதி)
பிரதிக் கல்விப்பணிப்பாளர்
வடமாகணக்கல்வி கலைத்துறை

# பெண்களை ஆரோக்கியமாக்கும் நடனக் கலை



**நடனத்தால் தான் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை என்றால் பெரிய பெரிய கலைஞர்களுக்கு எல்லாம் எவ்வாறு அந்த பாக்கியம் கிடைக்கின்றது.**

கலைகள் இறைவனோடு மனதை ஒன்றாக்குவன. அந்த வகையில் தென்னிந்தியாவில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட பரதநாட்டியம் நமது பண்பாட்டு கலையாக காணப்படுகின்றது. நமது முழுமுதற் கடவுளாகிய சிவனே நாட்டியத்தின் தலைவன். பரத நாட்டியம் ஆடும் பெண்களை வெறும்பெண்களாகமட்டும்பார்க்க முடியாத படி ஆடுபவளே நாட்டிய மாக மாறுவது தான் பரத நாட்டி யத்தின் உச்சக்கட்டம்.

பரதம் வெறும் நாட்டியம் அல்ல. அது ஒரு புனிதமான தெய்வீக கலை. அத்தோடு ஆடுபவர்களின் உடலின் ஆரோக்கியத்தை முதன்மை வகிப்ப தாக காணப்படுகின்றது. தமிழ் இலக்கியத்தில் உள்ள சிலப்பதிகாரம், தொல்காப்பிய நூல்களில் பரதநாட்டியத்திற்கு என்று தனி இடம் உண்டு. மாதவி என்ற தேவதாசி குடும்பத்தை சேர்ந்த நாட்டிய தாரகையால் மயங்கிய கோவலன் தனது மனைவி ஆகிய கண்ணகியை விட்டு சென்றதாக கதை உண்டு.

இந்த அமரகாவியம் தோன்றவும் பரத நாட்டியம் காரணமாகும். முன்னர் இதனை சதிராட்டம் எனவும் அழைப்பர். அன்றய காலத்தில் தேவதாசி என்று அழைக் கப்பட்ட பெண்கள் கோவிலில் நடனமாடி இறைவனுக்கு தொண்டு செய்தனர்.

மிகவும் சிறப்பாக ஆடுபவர்கள் அரச மண்டபத்திலும் கோவில் விழாக்களிலும் ஆடும் தகுதி பெற்ற னர். நடனத்தை இரசனையோடு கலையை ஆடுபவர்கள் தேவ தாசிகள் எனப்பட்டனர். ஆனால் பலருடைய எதிர்ப்பொலிகளால் இன்று தேவதாசி என்ற சொல் இல்லாமல் போய்விட்டது.

**பரதநாட்டியத்தை 4 வகையாக பிரிக்கலாம்.**

ரசம் - பாசத்தை பரிவை உணர்த்துவது.
பாவம் - உணர்ச்சிகளை வெளிப்படுத்துவது.
கிரியஸ் - செயலை உணர்த்துவது
சிருங்காரம் - காதல் பக்தியை உணர்த்துவது.

**இதை விட பரத நாட்டியத்தில் 3 வகையுள்ளன.**

அபிநயம்: நாட்டியம் மூலம் கதை கூறுவது.
நரிட்ட: இசைக்கு ஏற்ப மட்டும் நடன அசைவு காண்பிப்பது.
நரித்ய: அபிநயமும் நரிட்டவும் சேர்ந்தது.

இவ்வாறு பரத நாட்டியம் பற்றி கூறிக் கொண்டே போகலாம்.

முன்னய காலங்களில் தேவதாசிகளால் ஆடப்பட்ட நடனம் சிறிது சிறிதாக வளர்ச்சி கண்டு இன்று பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடத்திட்டத்துக்குள் புகுத்தப்பட்டுள்ளது.

அதிகமாக இன்று பெண்களால் இளம் வயதிலேயே கல்வி விடயத்திற்கு அமைவாக இன்றி ஒரு கலை என்ற நோக்குடன் அவர்களிடம் சென்றடைந்து கொண்டு தான் இருக்கின்றது.

எமது நாட்டை விட புலம் பெயர் நாடுகளில் பெண் பிள்ளைகள் பரத நாட்டியத்தை பயின்று அதன் பின்னர் இங்கு வந்து தாம் பயின்றதை தமது மண்ணில் அரங்கேற்றி செல்வதை பார்க்கும் போது சந்தோசமாக உள்ளது. இந்த பரதம் பெண்களின் ஆரோக்கியத்திலும் பெரிதும் பங்கு வகிக்கின்றது.

1 நடனம் ஆடுவதற்கு முன்னர் நாம் செய்யும் உடல் பயிற்சிகள். மூட்டு வருத்தங்கள், கை, கால் பிடிப்பு போன்றவற்றில் இருந்து எம்மை பாதுகாக்கின்றது.

2 நடனத்தை தொடர்ந்து பயிலும் ஒரு பெண் பிள்ளையால் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க முடியும்.

3 இன்று இளம் வயதிலேயே தொப்பை விழுந்து விட்டது, சக்கரை நோய் வந்து விட்டது என்று பல பருத்த உடலமைப்பு கொண்ட பெண்கள் புலம்புகின்றார்கள். ஆனால் நடனம் ஆடும் பெண்ணாக இருந்தால் இந்த தொல்லை இல்லை.

4 அவர்களின்உடலில்நடனத்தின் மூலம் கிடைக்கும் உடல் பயிற்சியால் இரத்த ஓட்டம் சீராக கிடைக்கின்றது. எனவே தேவையற்ற பக்க விளைவுகள், நோய்கள் ஏற்பட வாய்பில்லை.


5 நடனத்தை மிக மோசமாக பழகுபவர்களுக்கு எதிர் காலத்தில் குழந்தை வாய்ப்பு இல்லாமல் போய் விடும் என்பார்கள். ஆனால் அது தவறான எண்ணமாகும்.

வேறு ஏதாவது காரணத்தால் ஏற்படும் அசௌகரியத்தை நடனம் பயில்பவராக இருந்தால் அதனை சாட்டாக கூறுவர் தவிர நடனம் அப்படியான பக்க விளைவை ஏற்படுத்தாது.

அப்படி நடனத்தால் தான் குழந்தைபாக்கியம்கிடைக்கவில்லை என்றால் பெரிய பெரிய கலைஞர்களுக்குஎல்லாம்எவ்வாறு அந்த பாக்கியம் கிடைக்கின்றது.

ஆகவே பரதம் என்பது ஒரு புனிதமான தெய்வீக கலை. இதனை கற்று கொள்வதால் ஒவ்வொரு பெண் பிள்ளைகளும் கலைத்திறனை வளர்த்து கொள்வது மட்டுமில்லாமல் ஆரோக்கியம் உடையவர்களாகவும் பன்புடையவர்களாகவும், மன ஒருமைப்பாடு உடையவர்களாகவும் திகழ முடியும்.

எனவே; பரத நாட்டியத்தை தெய்வ பக்தியோடும். ஆர்வத் தோடும் பயின்று எமது திறனையும் பண்பையும் ஆரோக்கியத்தையும் மேலுயர்த்தி கொள்வோம்.



“கலைகள் என்றும் பனிதமான தெய்வீக பண்பு கொண்டவை”




வடமராட்சி கொற்றாவத்தை கலைவாணி பாலர் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார். வடமாகாணசபை உறுப்பினர் சிவயோகன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.



மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலயத்தில் அண்மைக்காலமாக நிலவி வந்த கெடுபிடிகள் தளர்ந்து விட்டதாக பக்தர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். பெரும் செலவில் ஆலயம் புனரமைக்கப்பட்ட பின்னர், புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஆலய நிர்வாகம் கறாரான கட்டுப்பாடுகளை விதித்தது குறிப்பாக பெண்களின் ஆடைகளே குறிவைக்கப்பட்டது. சேலை அல்லது நீளப்பாவாடை அணிந்து வருபவர்கள் மட்டுமே ஆலயத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட்டனர். இந்த விவகாரம் யாழ் அரசஅதிபரின் காதுகளிற்கு எட்டியதும், சில தினங்களின் முன்னர் புதிய நிர்வாகசபையை தேர்வு செய்ய நடவடிக்கை எடுத்தார். புதிய நிர்வாகசபை முதற்காரியமாக இந்த கெடுபிடியை தளர்த்தியது. இதனால் விநாயகர் சதுர்த்தியில் வில்லங்கமில்லாமல் பெருமளவு பெண்கள் கலந்து கொண்டனர்.



சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392




# வாஸ்துவும் மனை அமைப்பும் பொருத்தப்பாடும்


சென்ற வார தொடர்ச்சி.....

பொதுவாக நாம் மனையை அமைக்க அத்திவாரம் மண் வெட்டும் போது நல்ல சகுனங்கள் தென்பட வேண்டும். தவளை, அரணை, பல்லி, சிலந்தி, வண்டு ஆகியன தென்பட்டால் நல்ல சகுனம் என வாஸ்து குறித்த சோதிட நூல்கள் பகர்கின்றன. புதையல் கிடைத்தல், பசு மாட்டின் கொம்பு இருத்தல், விக்கிரகம் ஏதும் தென்படுதல், பஞ்சலோகத்தில் ஒன்றோ அல்லது கூடுதலாகவோ தென்பட்டால் மிக நல்ல சகுனங்களாக கருதமுடியும்.

நிலத்தில் கரி இருப்பின், உமி இருப்பின், விறகு இருப்பின், எறும்பு கறையான் தலைமுடி, அடியில் கருங்கல் இருப்பின், எலும்பு துண்டுகள் இருந்தால், உடும்பு, பாம்பு, தேன்கூடு, ஆமை, பூரான்புற்று, என்பவை தென்பட்டால் கெட்ட பாதிப்பான சகுனங்களாக கொள்ள வேண்டும். பொதுவாக நல்ல சகுனங்கள் தென்பட்டால் மனச்சந்தோஷம், நல்ல இன்பம், தனம் தானிய சம்பத்து சேர்தல், பொன் பொருள் செல்வம் சேர்தல், நல்ல குடும்ப வாழ்வு என்பன அமையப்பெறும்.







கெட்ட பாதிப்பான சகுனங்கள் தென்பட்டால் நோய், பிணி, பொருள் விரையம், குலநாசம், பழிபாதகம், பொல்லாப்பு, வீட்டுத்தலைவன் தலைவிக்கு சில வேளை மரணம் நிகழ்தல், மனை நெருப்பால் அழிதல், இடிந்து நொருங்குதல், மனதில் துக்கம் துயரம் என்பவையும் காட்டும்.

இவை எல்லாம் முடிவடைந்து “கிருகாரம்பம்” செய்தல் நிலைக்கு நாம் விளைகிறோம்.

“கல்யாணம் பண்ணிப்பார்
வீட்டைக் கட்டிப்பார்”

இரண்டுக்கும் ஏழு செருப்பு தேயும் என நம் முன்னோர் சொல்லி வைத்ததில் உண்மை உண்டு. காரணம் இரண்டுக்குமாய் எத்தனையோ படிகள் ஏறி இறங்கும் நிலை எத்தனையோ தடைகளை தாண்டும் நிலை என்பவை அமையும்.

**பூமி பூஜை வாஸ்து பூஜை (அத்திவாரமிடல்)**

தென்மேற்கு மூலை (நிருதி) வடகிழக்கு மூலை (ஈசான்யம்) பகுதியை அடையாளமிட வேண்டும். இதனை வாஸ்து நிபுணர் காட்டுவார். இதில் தென்மேற்கு சிறப்புக்குரியதாகும். இது இலங்கையில் கடைப்பிடிப்பதாகும். வடகிழக்கு கணிசமான திருப்திக்குரியதாகும். இது இந்தியாவில் கடைப்பிடிப்பதாகும். இதனை “எல்” வடிவம் “ டு” வடிவம் என அழைப்போம். மூன்று அடி நீளம் அகலம் கொண்டதாய் ஒன்றரை அடி முதல் மூன்றடி வரை ஆழம் கொண்டதாய் அத்திவாரக்குழி அமைக்க வேண்டும். இதனைத் தொடர்ந்து இலங்கைக்கு ஏற்ற நடைமுறையில் அத்திவாரம் இடுதலை ஆரம்பிக்க வேண்டும். 234 என அடுக்கொழுங்கில் ஒன்பது கருங்கற்களை ஒழுங்கு செய்து நீரில் கழுவி மஞ்சள் நீர் ஊற்றி விபூதி, சந்தனம், குங்குமம் இட்டுக்கெள்ள வேண்டும்.

பூரண கும்பம் ஒன்றினை அத்திவாரம் போடும் எல்லைப் பரப்பின் உட்பகுதியில் ஒழுங்கு செய்ய வேண்டும். கிழக்குப் பார்வையில் கும்பம் அமைய வேண்டும். அத்திவாரமிடுதலுக்கு தேடிக் கொண்ட முழுப் பொருள்களையும் கும்பத்தின் முன்பாக வாழையிலையில் பரப்பி வைக்க வேண்டும். முதலாவது கல்லைப் பதிப்பவர் கட்டுமானப்பணிக்குரிய முதன்மையாளர் வீட்டின் தலைவன் தலைவி ஆகியோர் உட்பட ஒன்பது கற்களையும் பதிப்பவர்கள் எந்தவொரு ஆசௌச குற்றங்களும் அற்றவர்களாக இருக்க வேண்டும். அத்துடன் முதலாவது கல்லைப் பதிப்பவர் திருமணமானவராயும், குழந்தைச்செல்வம் உடையவராயும் இருப்பது சிறப்பம்சமாய் அமையும். சுபயோக சுபமுகூர்த்தம் நண்பகல் இரண்டு மணிக்கு முன் உள்ள நண்பகல் வேளை, முற்பகல் வேளை, காலை வேளை அத்திவாரம் இடம்பெறுவது நல்லதாகும். கிழக்கு முகம் பார்த்தும் வடக்கு முகம் பார்த்தும் அண்ணார்ந்து சூர்ய நமஸ்காரம் செய்தும் குலதெய்வத்தை நெஞ்சில் வேண்டிக்கொண்டும் கல்லைப் பதிக்க வேண்டும். 1-3-5-7-9 என்ற ஒற்றை எண்ணிக்கையில் ஒன்பது கற்கள் உத்தமமாகும்.

**வீடு அறை நீளம் அகலம்**

வீடு அமையும் நீள அகலம் அறை அமையும் நீள அகலம் பின் குறிப்பிடும் அடிகளில் அமைவது மிகவும் நற்பலன்தரும்.

6’8’10’11’16’20’22’27’29’32’35’37’41’ 42’45’50’52’54’55’57’59’60 அடிகளைக் கொண்டது நல்லது. இதைவிட 25’39’ அளவுகள் வீட்டின் முழுப்பகுதியல்லாது ஒரு பகுதியை மட்டும் நீட்டுவதாயின் எடுக்கலாம். இந்த அறுபது அடிக்குள் காட்டப்பட்டவற்றில் 35’37’41’42’ அளவுகள் சிறப்பானவையாகும். வீட்டிற்கு எப்போதும் உள்மண்டபம் அமையும். ஆனால் வெளிமண்டபத்தில் தலை வாசல்படி எவ்வாறு அமைய வேண்டும் என்பது முக்கியமானதாகும். கிழக்குப் பார்த்த வாசல் உள்ள வீடாயின் முன்வெளிப்பக்கத்தை வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய அந்தம் வரை அளந்து கொள்ள வேண்டும். அளந்த பகுதியை ஒன்பது சம பாகங்களாகப் பிரிக்க வேண்டும். அதில் 4ம் பாகம் 5ம் பாகம் வரும் இடைவெளியில் தலைவாசல் அமைப்பது மிகப்பொருத்தமாகும். மேற்குப் பார்த்த வாசல் வீடாயின் தெற்கிலிருந்து வடக்கு நோக்கியதாய் ஒன்பது பாகங்கள் பிரிக்கப்பட வேண்டும். இகற்குத் தெற்கிலிருந்து 4ம் பாகம் 5ம் பாகம் வரும் இடைவெளியில் தலைவாசல் அமைவது சிறப்பானதாகும்.

வாஸ்து சோதிட அமைப்பில் இந்த ஒன்பது பாகங்களும் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றன. 1. சூரியன் 2. சந்திரன் 3. அங்காரகன் 4. புதன் 5. குரு 6. சுக்கிரன் 7. சனி 8. ராகு 9. கேது எந்த வாயில் வீடாயினும் சுவாமிப்படம் தென்மேற்கு நிருதி மூலையில் அமையும். சாதாரணமாய் எமது நெஞ்சு மட்டத்தில் படத்தட்டும் இடுப்பின் மேல் தொப்புள் மட்டத்தில் அடுப்பும் அமைவது நல்லதாகும். புகைக்கூட்டு அமைத்துக் கட்டப்படும் வீடுகளில் புகைக்கூடு வெளிப்பகுதியால் நீண்டிருப்பது நல்லதாகும். அதையும் சேர்த்து நல்ல அளவில் வீட்டின் மொத்த நீள அகலம் அமைய வேண்டும். மேலும் சுவாமி அறை, படுக்கை அறை, வெளிவாசல் பிரதான கதவுகள் இரண்டு பாதிக் கதவுகளாய் இருப்பது மிகவும் நன்மையானதாகும். இது செல்வம் சேமிப்பையும் குழந்தைகளின் கல்விச் சிறப்பையும் காட்டும்.

**வாகனங்கள் நிறுத்தும் பகுதி**

**கிழக்கு வாயில் மனை** - ஆயின் சுவாமி அறை கழிந்து உள்மண்டப நேர் தென்பகுதியில் இருந்து கிழக்கு நோக்கிய பகுதி

**வடக்கு வாயில் மனை** - ஆயின் சுவாமி அறை கழிந்து உள்மண்டப நேர் மேற்குபகுதியில் இருந்து வடக்கு நோக்கிய பகுதி


**தெற்கு வாயில் மனை** - ஆயின் சுவாமி அறை கழிந்து உள்மண்டபநேர் மேற்குப்பகுதியில் இருந்து தெற்கு நோக்கிய பகுதி

**மேற்கு வாயில் மனை**- ஆயின் சுவாமி அறை கழிந்து உள்மண்டபநேர் தென்பகுதியில் இருந்து மேற்கு நோக்கிய பகுதி வீட்டின் பிரதான வாசலை மறைக்கும்படியாகவோ! நடைபாதை “கேற்” வரையுள்ள பகுதியிலோ! வாகனம் நிறுத்தும் கொட்டகை எதுவும் அமைக்கக் கூடாது.

**கிணறுக்கு ஏற்ற இடம்**

வீடு அமையும் காணியின் வடகிழக்குப் பகுதியில் கினறு அமைவதே உத்தமம். இது எந்தவாசல் வீட்டுக்கும் பொருத்தமானதாகும். தவிர்க்கமுடியாதவாறு நீரோட்டம் இல்லையெனக் கண்டறியப்பட்டால் கிழக்கு மேற்கு திசைகளை அண்டியதாயும் வடமேற்கை அண்டியதாயும் கிணற்றை அமைத்துக் கொள்ளலாம். ஏனைய திக்குகள் பாதிப்பானவையாகும். மனை வடக்கு மற்றும் தெற்கு வாயில் ஆயின் கிழக்குப் பார்வை மிதி வைத்து தண்ணீர் பிழங்குவது நல்லதாகும். மனை கிழக்கு மற்றும் மேற்கு வாயில் ஆயின் வடக்குப் பார்வை மிதி வைத்து தண்ணீர் பிழங்குவது நல்லதாகும்.

ரஜிந்தன்
rajinthan2011@gmail.com





# சர்வதேச திரைப்பட விழா

சர்வதேச திரைப்பட விழா முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் நடக்கிறது. ஒன்றல்ல இரண்டல்ல ஒருவார திருவிழா. கடந்த 15 ஆம் திகதி தொடங்கியது ஒருவாரத்திற்கு திரைப்பட ரசிகர்களிற்கு விருந்து வைத்துக் கொண்டிருக்கிறது.

திரைப்பட விழாவுக்கான இயக்குநராக "அஜென்டா 14" என்ற சினிமா நிறுவனத்தின் இயக்குன ரான அனோமா ராஜகருணா செயற்பட்டு வருகிறார்.

கடந்த 15 ஆம் திகதி மாலை 6 மணியளவில் யாழ் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் வைபவரீதியாக ஆரம்பிக்கப் பட்டது. திரைப்பட விழாவின் உத்தியோகபூர்வ சின்னமாக எமது பாரம்பரிய இசைக்கருவிகளுள் ஒன்றான யாழ் தெரிவு செய்யப் பட்டு அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது. தென்னிந்தி மற்றும் சர்வதேச திரைப்பட பிரமுகர்கள் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

நல்ல சினிமாவிற்கு யாழில் இத்தனை ரசிகர்களா என வாயைப்பிளக்க வைத்த கூட்டம் ஆரம்ப நிகழ்வில். தொடக்க விழாவின் விருந்தினராக அழைக்கப் பட்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சிறப்புரை யாற்றினார். நுல்ல சினிமாக்கள் சமுதாயத்திற்கு ஆற்றும் பணிகள் பற்றி பேசிய முதலமைச்சர், பல்வேறு பகுதிகளிலுமிருந்து வருகை தந்த பிரமுகர்களுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடக்கப்போகும் இந்த சர்வதேச திரைப்பட விழாவில் உலகளவில் கவனத்தைப் பெற்ற 80 வரையான சிறந்த திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. இவற்றுள் ஆவணப்படங்கள், குறும்படங்களும் உள்ளடங்குகின்றன. இதுதவிர நம்மவர்களின் குறும்படங்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கைலையரங்கம், யாழ் பொதுசன நூலகத்தின் கேட்போர் கூடம, சிலோன் தியேட்டர்ஸ் இன் கார்கில்ஸ் திரையரங்குகளிலும் படக்காட்சிகள் காண்பிக்கப் படவுள்ளன. அனைத்து காட்சி களுமே இலவசமாக காண்பிக்கப் படுகின்றன என்பது கூடுதல் மகிழ்ச்சியான செய்தி.


இதுதவிர, இன்னொரு சிறப்பம்சமும் உள்ளது. திரைத்துறையில் ஆர்வமுள்ள நமது இளம்படைப் பாளிகள், ஆர்வலர்களிற்கு வழிகாட்டல்களையும் துரைசார்ந் தவர்கள் செய்யவுள்ளனர். பயிற்சி வகுப்புக்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பன நடந்து வருகிறது.

ஈழத்திரைத்துறை பற்றிய மெல்லிய முணுமுணுப்பொன்று உள்ளது. நமது கலாசார வேர்களில் பதியம் கொள்ளாமல் விடலைத்தனமான முயற்சிகளில் சிலர் ஈடுபட்டு வருகிறார்கள், அதனால்த்தான் பல 'வில்லங் கங்கள்' நடப்பதாக பலரும் முணுமுணுத்துவரும் நிலையில், நம்மவர்களிற்கு இந்த விழா நிச்சயம் பலனுள்ளதாக அமையும் என்பது மட்டும் நிச்சயம். திரைப் பட ரசிகர்களே மிஸ் பண்ணி விடாதீர்கள், அப்புறம் வருத்தப்படு வீர்கள்!

இச்சர்வதேச மட்டத்திலான திரைப்பட விழாவானது தொடர்ச் சியான நடைபேற்றும் வரும்போது எமது கலைஞர்களின் திறமைகள் வெளிக்கோணரப்படும் அதேவேளை சர்வதேச தரத்திலான சினிமாங்களை எம்மக்கள் பார்வை யிடும் சந்தர்பமும் கிடைக்கின்றது.







கவிதைகள் மேகலா.ம



## வேர்களுக்கு நன்றி

கிளை எங்கு பரந்தாலும்
இலை எங்கு உதிர்ந்தாலும்
மண்ணோடு ஆதாரம்
மறைவான வேர்தானே

மலர் வாசம் வீசட்டும்
காய் நன்கு கனியட்டும்
வேரூற்றும் நீரின்றி
வருமாமோ வாழ்விங்கு

கிளை போனால் தளை
வேர் போனால் ????
வேரின்றி மரமில்லை
வேர் மட்டும் மரமல்ல

மரத்தடி மண் தன்மை
நிழல் அல்ல - அது
வேதனையில் வேரழுது
காயாத நீர்

ஆதலால்...

மறைந்திருக்கும் என்பதால்
மறந்திருக்க என்றில்லை
ஊமையாய் அழுகின்ற
வேர்களுக்கும் நன்றி சொல்வோம்



## நட்பு

கனவுகளுக்கு உயிர்கொடுத்து
தவறுகளைத் தட்டிக் கேட்டு
உணர்வுகளைப்
பகிர்ந்து கொள்ளும்
புரிவு, பிரிவு இரண்டிற்கும்
அர்த்தம் சொல்லித் தரும்

கோகங்கள் வருகையில்
சுமையில்லை சுகமென்று
உணர்த்தி உலாவரும்
போட்டிகள் இங்கிருக்கும்
பொறாமை இருந்திடாது
கோபங்கள் வந்து போகும்
ஒருநாளும் குரோதமாகிடாது

காலங்கள் மாறும்போதும்
உண்மை நட்பு மாறிடாது
கண்ணொளி இழந்தால்
வழிகாட்டும் உண்மை நட்பு
நட்பினை இழந்தாலோ
கண்ணிருந்தும் ஒளியில்லை

இருள் வழியே செல்கையில்
தூரத்தில் தெரியும்
ஒளிக்கீற்றின் தன்மை போல்
தவறிட இருப்பவனை
தாங்கிப் பிடிக்கும்

நண்பனின் வெற்றியில்
தான் மகிழ்ந்து - அவன்
சாதனைக்கு துணையிருக்கும்
நல்ல நட்பை
நான் உணர்ந்தும்
கவி எழுத முடியவில்லை

புது வார்த்தை வேண்டும்
நட்பின் புகழ் பேச
கம்பன் மகனை தட்டி எழுப்பி
சொர்க்க வாசல் திறந்து
தமிழில் புது வார்த்தை
தேடப் போகிறேன்
நட்பினை நான் எழுத

பி.சியா
siyapj27@gmail.com



# காதலிக்கும் பெண்களை கண்டுபிடிக்க பத்து வழிகள்



## அப்பாவி பெற்றோருக்கு அவசிய கையேடு

இந்த காதல் சமாச்சாரத்தில் சிக்காத இளவயதுக்காரர்கள் இருப்பார்களா என்று பார்த்தால் நிச்சயம் இல்லையென்று துணிந்து சொல்லலாம். அப்படியில்லையென அடம்பிடிப்பவர்களை விட்டு விடலாம். ஏனென்றால் உலகத்தில் ஒரேயொரு திருஞானசம்பந்தர், ஐன்ஸ்டீன், விவேகானந்தர், தெரசாதானே. எங்காவது ஒன்றிரண்டு பேர்தான் ஊர்சொல்ல வாழ்கிறார்கள். அவர்களை விட்டு விட்டு விடயத்திற்கு வருவோம்.

காதல்மனிதர்களில்என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்துகின்றது? அதைத்தான் வைரமுத்து அழகாக சொல்லிவிட்டார் ‘காக்கை கூட உன்னை கவனிக்காது. இந்த உலகமே உன்னை பார்ப்பதாக அர்த்தப் படுத்திக் கொள்வாய்’ என. பிறகென்ன, அப்படித்தானே தலைகால் புரியாமல் காதலிப்பவர்கள் நடந்து கொள்கிறார்கள். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். காதலிக்கும் வரை பேஸ்புக்கில் ரோசாப்பூபடம் வைத்திருப்பவர்கள், மிக துணிவாக நீதியில்லாமல் நானில்லை என்பது மாதிரியான மொக்கை கவிதைகள் எல்லாம் எழுத தொடங்கிவிடுகிறார்கள்.

இந்த பகுதியில் இப்பொழுது பார்க்கப் போவது, காதல் எப்படியெல்லாம் பெண்களை மாற்றுகிறதென்பதை. பொதுவாக நமது பெண்கள் மிக அடக்கமாம். காதல் மாதிரியான விடயங்களை வெளியில் சொல்லமாட்டார்களாம். (யாருக்கப்பா தெரியும்... அவர்கள்தான் சொல்கிறார்கள்) ஆனால் பாருங்கள், பேரூந்துகளிலும், பொதுஇடங்களிலும் காதிற்கும் வாய்க்குமாக தொலைபேசியை மாற்றிமாற்றி குசுகுசுத்துக் கொண்டு திரிவதும் இவர்கள்தான். அவர்கள் வீட்டிலிருக்கும் பாட்டியுடன்தான் அப்படி சின்னியராக கதைக்கிறார்கள் என நம்பி விடாதீர்கள். இதெல்லாம் காதலிற்கான முதலாவது அடையாளம் என அடித்து சொல்கிறார்கள், இந்த விடயத்தில் பழம் தின்று கொட்டை போட்டவர்கள்.

பொதுவாகவே உணர்வுகளை அதிகம் வெளியில் காட்டிக்கொள்ள மாட்டார்கள் என கூறப்படும் நமது பெண்களிற்கு காதல் வந்தால் எப்படி நடப்பார்கள்... எதை வைத்து கண்டுபிடிக்கலாம்? அப்பாவியான பெற்றோர்களே... எச்சரிக்கையுடன் இதை படித்து வைத்திருங்கள்.

1 காலை 9மணி வேலை. 8.30க்கு அரக்கப்பரக்க எழும்பி, ஒழுங்காக பல்லும் விளக்காமல் அகப்படும் உடுப்பை மாட்டி.. பொட்டும் சரியாக வைக்காமல், ஒராளுக்கான சாப்பாட்டு பார்சலுடன் புறப்படுகிறாரா உங்கள் பிள்ளை... அப்பாடா என நெஞ்சில் கைவைத்துக் கொள்ளுங்கள் பெற்றோரே. இன்னும் அவருக்கு ரியூப் லைட் எரியவில்லையென்பது கென்போர்ம். ஆனால், 6 மணிக்கே எழும்பி, வாரத்தில் மூன்று நாளு தடவை தலை குளித்து உடுப்பு அயன் செய்து, மாற்றிமாற்றி உடுப்பு போட்டு பார்த்து, பத்து தடவை கண் மை அழித்து அழித்து சரிசெய்து, நாலு பொட்டை நாற்பது விதமாக வைத்துப்பார்த்து... நண்பியையோ, நாயையோ காரணம் காட்டி ஒன்றுக்கு இரண்டு பார்சல் சாப்பாட்டுடன் கிளம்புகிறாரா உங்கள் பெண்... ஆறுமுகம்.. அலேர்ட்டாகு.. விடயம் வில்லங்கமாகிவிட்டது.

2 வேலை முடித்து மாலையில் திரும்பியதும், சின்ன வயதிலிருந்ததைப் போலவே, அதிகாரி திட்டியதிலிருந்து, அடுத்த சீற்றிலிருந்தவன் லுக்குவிட்டது வரை அனைத்தையும் அம்மாவிடம் சொல்லி, குடும்பத்துடன் கும்மாளமடிக்கிறாரா..உங்கள் மருமகன் இன்னும் தயாராகவில்லையென்று அர்த்தம். ஆனால் பாருங்கள், எல்லோரும் ஒன்றாக இருக்க, அவள் மட்டும் தனியாக இருந்து யோசிக்கிறாள் என்றால், அது ஒன்றில் ஒருதலைக்காதலாக இருக்கும். அல்லது காதலர்களிற்குள் ஏதோ பிச்சல் புடுங்கள். ஏதோ மனதத்துவ மாத்ருபூதம் என்ற நினைப்பில் இதையெல்லாம் தீர்க்க நினைக்காதீர்கள். ‘என்னம்மா பிரச்சனை’யென கேட்டால், தமிழ்பட ஹீரோயின்ஸ் சொல்வதைப் போல தலையிடிக்கிறதென சொல்லிவிட்டு போய்விடுவார்கள். அதுபோல, அறையை பூட்டிவிட்டு போனும் கையுமாக இருக்கிறாரா... வெள;ளம் தலைக்குமேல் போனபின்னர் சாணென்ன முழமென்ன?. நீங்கள் வழக்கம் போல ‘எங்கள் வீட்டு கல்யாணம்’ சீரியல் பார்த்து கொண்டிருங்கள்.

3 வீட்டிலோ, அலுவலகத்திலோ, நண்பர்களிடத்திலோ அவளது தொலைபேசியை யாராவது எடுக்கும் போது பேசாமல் இருந்தால், பட்சி இன்னும் சிக்கவில்லையென்று அர்த்தம். மாறாக, தூக்க முன்னரே முந்திரிக்கொட்டை மாதிரி செயற்பட்டு பாய்ந்து பறித்தால், ஆள் கிளீன்போல்ட் என்று அர்த்தம்.

4 வீட்டிலிருந்து வெளியில் கிளம்பும்போதோ, நண்பர்கள் எங்காவது செல்லும்போதோ, ‘ஏய் வாறியா’ என கேட்டால், உடனே ஓகே சொன்னால் ஆள் சிங்கிள்தான். மாறாக, ‘ம்...’ என இழுத்து போனை எடுத்து எஸ்.எம்.எஸ் போட்டால், ஆள் சிங்கத்திடம் பொமிசன் கேட்கிறார் என்று அர்த்தம்.

5 சில சமயங்களில் உங்கள் மகள், தோழி தனிமையில் சிரித்துக் கொண்டு நிற்பார். பிள்ளையை தெல்லிப்பளை, அங்கொடைக்கெல்லாம் கொண்டு போக வேண்டுமென பயப்பிடாதீர்கள்.. இது மேற்றரே வேற. உங்களிற்கு மாப்பிள்ளை பார்க்கும் செலவை குறைத்து விட்டார் என்று அர்த்தம்.

6 கதைக்கும் போது, காதலைப் பற்றி பேச்சு வரும்போது, ‘அந்த கருமத்த விடப்பா’ என்ற ரீதியில் பேசினால், ஆள் இன்னும் உங்கள் வீட்டுபிள்ளைதான். ஆனால், காதலைப்பற்றி ஆகா ஓகோவென பேசத் தொடங்கினால்... இப்பொழுதே உசாராகிவிடுங்கள்.

7 உங்கள் மகளிற்கு, நண்பிக்கு தொலைபேசி எடுக்கிறீர்கள்... நீங்கள் எடுக்கும் சமயத்திலெல்லாம் அது ரிங் ஆகிறது. நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை. அதுபோல வீட்டில், அலுவலகத்தில் போன் எங்கோ, ஆள் எங்கோ என திரிந்தாலும் ஆள் ஓகேதான். ஆனால் எப்பொழுதும் போனும் கையுமாக திரிகிறார்... ஒன்றுக்கு இரண்டு போன் வைத்திருக்கிறார்... எப்பொழுது அழைத்தாலும் வெயிட்டிங்கில் போகிறதென்றால்... பிறகென்ன, யாரந்த பையன் என்பதை அறிய முயலலாம்.

8 யாரைப் பற்றியும் கவலைப் படாமல், தோன்றும் உடுப்பை அணிந்து சிம்பிளாக திரிந்தால் நம்பிக்கையாக இருக்கலாம். மாறாக, நான் ‘பஞ்சாபிதான் போடுவன்.. நான் ஜீன்ஸ், ரொப்தான் போடுவன்... நான் கட்டை, குட்டை பாவாடையெல்லாம் போடமாட்டன்’ என திடீர் கலாசார காவலர் போல் பேசுகிறாரா இது மேற்றரே வேற.

9 வீட்டிலோ, வகுப்பறையிலோ, அலுவலகத்திலோ எல்லா பெண்களோடும் சமமாக இருந்தால, பெரும்பாலும் காதல், கண்றாவியெல்லாம் கிடையாது. மாறாக ஒருத்தியோட மட்டும் எப்ப பார்த்தாலும் கிசுகிசுத்துக் கொண்டிருந்தால் நிச்சயம் லவ்சு தான்.

10 பேஸ்புக்கில் இப்பொழுதும் ஆர்யாவின் படங்களையும், அல்ப்ஸ் மலைத் தொடரையும் தான் உங்கள் மகள் புரபைல் பிக்சராக வைத்துள்ளாரா?. ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். ஆள் இன்னும் மலையேறவில்லை. ஆனால் தனது படங்களை... குறிப்பாக பூக்கள், காதலர்களின் உருவங்களிற்குள் போட்டேசொப்பில் இணைத்து போடுகிறார் என்றால், இப்பொழுதே கல்யாண காட் அடிக்க தயாராகுங்கள்.



உயர்தரப்பரீட்சை எழுதிய மாணவர்களிற்கு தீபம் பத்திரிகையின் அனுசரணையுடன் ECBC நிறுவனம் ஆரம்பிக்கும் 3மாத ஆங்கில கற்கைநெறிக்கான கலந்துரையாடலும், வழிகாட்டல் கருத்தரங்கும் வவுனியாவில் நடந்தது.



வடமாகாணசபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் நிதியொதுக்கீட்டில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களிற்கு ஆடுகள் வழங்கப்பட்டது. தோணிக்கல், பறநாட்டகல், மரையடித்தகுளம், இந்தியன் வீட்டுத்திட்டம், வேப்பங்குளம் பகுதிகளில் உள்ள தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளிற்கு மாகாணசபை உறுப்பினர் உதவிகளை வழங்கினார்.



## சானியாவின் தங்கைக்கு மணக்கோலம்

இந்தியாவின் டென்னிஸ் புயல் சானியா மிர்சாவின் தங்கை, அனம் மிர்சா. அவருக்கு சிலநாட்களின் முன் டும்டும் முடிந்துவிட்டது. எல்லா நடிகைகள், பிரபலங்களையும் போல இவரும் ஒரு தொழிலதிபரைத்தான் மணந்துள்ளார். விளம்பர நிறுவனமொன்றை நடத்திவரும் அக்பர் ரஷீத் மாப்பிள்ளை. பட்டப்படிப்பை தொடரும் அனம், விரைவில் படிப்பை முடித்துவிட்டு பத்திரிகையாளராகப் போகிறாராம்.



## ப்ளீஸ் விட்டுவிடுங்கள்!

போதைப் பழக்கத்தால் உயிரை இழந்த தனது 26 வயது கணவரின் உடலுடன், தானும், தனது பிள்ளைகளுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்து பேஸ்புக்கில் போட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பெண். போதைப் பழக்கம் உயிரைப் பறிக்கும். அதை இனியாவது 'ப்ளீஸ் விட்டுவிடுங்கள்'. அதற்காகத்தான் இந்தப் புகைப்படம் என்று அவர் விளக்கம் அளித்துள்ளார். இதைப் பார்த்து நாலு பேர் திருந்தினால் அது தனக்கு மகிழ்ச்சியே என்றும் அவர் கூறியுள்ளார். அந்தப் பெண்ணின் பெயர் ஈவா ஹாலந்த். இவரது கணவரின் பெயர் மைக் செட்டில்ஸ். இவர் ஹெராயின் பழக்கத்திற்கு அடிமையானவர். இந்தத் தம்பதிக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர்.

## அதிவேக ஆமை

முயலுக்கும் ஆமைக்குமிடையில் போட்டி வைத்து, ஆமை வென்றால் அது ஒரு கின்னஸ் சாதனைதானே?. அப்படித்தான் கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது பேர்ற்றி என்ற இந்த ஆமை. முயலுடன் நடந்த நடைப்போட்டியில் வெற்றிபெற்றுள்ளது. பிரித்தானியாவை சேர்ந்த இந்த ஆமைதான் உலகின் அதிவேக ஆமை. மணிக்கு 0.6 மைல் வேகத்தில் நடக்கிறது என்றால் பாருங்களேன்.



## வியக்கவைக்கும் வவுனியா வாசி!

வவுனியா வேப்பங்குளத்தை சேர்ந்த நடராஜா நவராஜட ஜக்ஷன் என்பவர், தூண்டற் காரணிகள் இல்லாமல் மின்உற்பத்தி செய்யும் அரிய கண்டுபிடிப்பை செய்துள்ளார். எரிபொருள், காற்று, அணுசக்தி, சூரியசக்தி என எந்த தூண்டற்காரணியும் அவசியமில்லை. இலவச மின்சாரம். இது எதிர்கால உலகிற்கு மிக பயனுள்ளதாக இருக்கும்.









இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 20.09.2015 அன்று வெளியிடப்பட்டது